இலங்கை - யாழ்ப்பாணம் - நீர்வேலி

அருள்மிகு

ஸ்ரீ செல்லக்கதிர்காம ஸ்வாமி திருக்கோயில்

# மஹா கும்பாபிஷேகச் சிறப்பு மலர்

# "நீர்வைக் கதிர்வேல்"



வெளியீடு:

25.03.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

## தக்க துணையான தயாளன்

*ராகம்- ஷண்முகப்ரியா* *தாளம்- ஆதி*

### பல்லவி

துக்கமெலாம் துடைக்கும் நீரூர் முருகா
தக்கதுணை நீயே தாமோதரன் மருகா

### அனுபல்லவி

இக்கணமே வருவாய் இன்பகுமார வேலா
பக்கம் வந்தெனக்கருள் பாலசுப்பிரமண்யா

### சரணம்

கும்பாபிஷேகம் செய்தே நினைத்துதிக்க
வெம்பாவ வினை தீர்க்கும் வேலவனே கடம்பா
சம்போ மஹாதேவா ஷாம்பவியின் புதல்வா
நம்பாமிளிர் செல்வக் கதிர்காம நாதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் வெளியீட்டுத் தரவுகள்

நூல் : நீர்வைக் கதிர்வேல்

விடயம் : நீர்வேலி ஸ்ரீ செல்லக்கதிர்காமஸ்வாமி திருக்கோயில் மஹாகும்பாபிஷேக மலர்

பதிப்பு : 25.03.2012

தாள் : கென்யா பாங்

அளவு : 176 mm x 250 mm

பக்கங்கள் : VII + 126

பதிப்பாசிரியர் : பிரம்மஸ்ரீ. தி. மயூரகிரி சர்மா

வெளியீடு : நீர்வை செல்லக்கதிர்காம ஸ்வாமி தேவஸ்தானம்

அச்சமைப்பு : ஷாம்பவி பதிப்பகம், 276, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
(கரந்தன் வீதி, நீர்வேலி தெற்கு, நீர்வேலி)
தொலைபேசி : 021 2224143

*Magazine title : "NEERVAI KATHIRVEL"*

*Neervely Sri Sella Gathirgama swami temple 'Maha Kumbabhisega malar'*

*Pages : VII + 126*

*Editor : Brahmasri. T.Mayoorakiri Sharma*

*Publication : Neervai Sella Gathirgama swami Devasthanam*

*Printers : Shampavi Printers, 276, Kasthooriyar Road, Jaffna.*
*(Karanthan Road, Neervely South, Neervely)*
*T. P. - 021 2224143*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

## ஆசிச்செய்தி, வாழ்த்துச்செய்தி, பதிப்புரை


| | |
|---|---|
| கருணைக்கடவுள் | i |
| வரம் அருளும் தெய்வம் | iii |
| மகிழ்ச்சி அளிக்கும் நிகழ்ச்சி | iv |
| பத்திர புஷ்பங்களால் ஒரு பூஜை | vi |


## பதிவியல்


| | |
|---|---|
| அதிசயங்கள் நிறைந்த அருள்வேலவன் ஆலயம் | 01 |
| நீர்வைக்கதிர்காமம் எழுந்த காலமும் காட்சியும் | 05 |
| திருப்பணிச்சபை | 09 |
| திருவூஞ்சல் | 11 |
| அந்தாதி கீர்த்தனைகள் | 16 |


## முருகியல்


| | |
|---|---|
| வெற்றியருளும் வேல் | 27 |
| ஸ்கந்தன் சிறப்பு | 34 |
| வள்ளி மணவாளனாய் வழிபடுவோம் | 43 |
| கந்தப்புராணம் நம் சொந்தப்புராணம் | 50 |
| காலவெள்ளம் அலைமோதும் | 56 |
| அருணகிரிநாதரின் மூன்று விருத்தங்ககள் | 65 |
| குழந்தைப் பெருமானாம் காத்தியேயன் | 71 |


## பொதுவியல்


| | |
|---|---|
| மஹாகும்பாவிஷேகம் | 73 |
| அக்கினி கார்யம் | 91 |
| வீபூதியின் பெருமை | 100 |
| தில்லையின் ஆடவல்லான் | 107 |
| முத்துஸ்வாமி தீக்ஷிதர் கீர்த்தனைகள் | 109 |
| தீராத விளையாட்டுப் பிள்ளை | 113 |
| கிறிஸ்தவ பல்கலைக்கழகத்தில் கீதை | 122 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூலவர் திருவுருவப் படம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசிச்செய்தி

# கருணைக் கடவுள்

**சிவஸ்ரீ. கு. தியாகராஜக்குருக்கள்**
**(நீர்வை மணி ஐயா)**
**பிரதானாச்சார்யார் (ஸ்தானீக சிவாச்சார்யார்)**
**நீர்வை கதிர்காம ஸ்வாமி திருக்கோயில்**

காலம் உருண்டோடிக் கொண்டிருக்கிறது. ஆனால் நமது கதிர்காமக் கந்தனின் வற்றாத பெருங்கருணை மட்டும் வளர்ந்து கொண்டே இருக்கிறது.

சென்ற காலத்தை மீட்டிப் பார்க்கிறேன்.. சிறிய வயதில் சிறிய கருவறை மட்டும் இருக்கிற காலத்தில் நெல்லிக்கனிக்காக இக்கோயில் பக்கம் வந்திருக்கிறோம். வியாபாரிஜயா அவர்களுக்கு உதவியாக பூஜை பண்ணவும் வந்திருக்கிறோம். அப்போது நாம் பார்த்தது கருவறையும் சிறிய மண்டபமுமே..

இடையில் சில காலம் இலங்கையின் மத்திய பகுதியில் வசிக்க வேண்டிய சூழல். அப்போதும் கூட அங்கே மாவனல்லையில் கதிரேசன் என்ற பெயருடன் எழுந்தருளியிருக்கிற வேல் முருகனுக்கு பூஜை பண்ண வேண்டிய வாய்ப்பு வலிந்து வந்து நம்மைப் பெருமானுடன் பிணைப்புச் செய்தது.

இக்காலத்தில் பேராதனை பல்கலைக்கழகத்தில் எழுந்தருளி யுள்ள குறிஞ்சிக்குமரனுக்கும் பணியாற்றும் வாழ்வு, ஓரிரு தசாப்தங்கள் இவ்வாறான வாழ்வியலில் நம்மை அறியாமலே பிணைப்புச் செய்து வைத்திருந்தது.

1978களில் ஏற்பட்ட இனக்கலவரங்கள். அவற்றை அடுத்து நீர்வேலியில் மீள வாழ்வு.. எல்லாம் இழந்து வந்த நிலை. வறுமையின் கொடுமைப்பிடி.

இவற்றிடையே மீண்டும் நமது செல்லக்கதிர்காமனின் செல்ல அரவணைப்பு நம்மை தழுவிற்று, எவரும் தீபமேற்ற இல்லாத நிலையில் அன்பர்களின் விடாப்பிடி இக்கோயில் சாவியை பொறுப்பெடுக்கச் செய்தது.

ஆக, இக்கோயிலை நான் பொறுப்பெடுத்த போது, இன்று போல மஹாகும்பாபிஷேகம், மஹோத்ஸவம், இவைகளைச் செய்வதற்காக என்று நான் வரவில்லை. தீபமேற்றவும். ஒரு வேளை கருவறையில் தீபாராதனை செய்யவும் என்றே நான் வந்தேன். இதை இன்றைக்கு நினைக்கிற போது.

இவன் நமது ஸம்பத்குமாரன். இவனது கோயில் இன்றைக்கு பேராலயமாக எழுந்து நிற்கிறது.. இதற்கிடையில் எத்தனையோ அன்பர்களின் உடல் உழைப்பு. பண உதவி. அவன் நமக்கு வாழ்வு தந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1995ல் மீளவும் இடப்பெயர்வு திசை தெரியாமல் தென்மராட்சி நோக்கி ஓடுகிறோம்.. ஓடினால் கொடிகாமம்- அப்பால் மிருசுவில்- உசன்.. இல்லை இன்னும் அப்பால் விடத்தற்பளை என்ற ஊர். அங்கே காட்டுக்குள் ஒரு கந்தன் கோயில் பெயர் வயற்கரை முருகன்.

வா என்று அழைத்து வரமருளும் வயற்கரை வள்ளல் பெருமான் அவன் நம்மை அழைத்து வைத்துக் காப்பாற்றினான்.

மீண்டும் ஊருக்கு வந்த போது. இக்கோயில் சுடுகாடாய்க் கிடந்தது.. சிதறிக் கிடந்த மண்டையோடுகளை கண்டேன். உள்ளே தங்கவேல் களவாடப்பட்டிருந்தது. பரமனோ. தந்தை பணியே தனயன் பணி என்று மயானக்கூத்தாடிக் கொண்டிருந்தான்.

என்றாலும் அமரர். ஸ்ரீமான். த. சின்னத்துரை அவர்களின் விடா முயற்சியுடனான ஒத்துழைப்பால் கோயில் ஒருவாறு புனரமைத்து 1997 வைகாசிப் புனர்பூசத்தில் மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

தொடர்ந்தும் திருப்பணிகள் தொடர்ந்தன.. அவ்வப்போது பொர்துஸ்தாபன வழக்கம் போல சிக்கல்கள். குழப்பங்கள் இருந்தாலும். கதிரையாண்டவன் காப்பாற்றி வளர்ந்தான். நம்மையும் வளர்த்தான்.

இதோ. திருப்பணிச்சபை மற்றும் அன்பர்களின் முயற்சியால் மீண்டும் திருத்தலம் புனரமைக்கப்பட்டு திருக்குடநன்னீராட்டுப் பெருவிழா 2012 நடைபெறுகிறது.

கருணை வள்ளலாகிய கதிர்காம கந்தனின் கருணையால் நாமும் வாழ்ந்து அன்பர்கள் யாபேரும் சிறந்து வாழ. நிச்சயம் அவனருள் கிடைக்கும்..

இத்திருப்பணி முயற்சியாளர்கள். கும்பாபிஷேக செயற்பாட்டில் ஈடுபடுபவர்கள். மலர்ப்பணி செய்பவர்கள் யாவருக்கும் இனிய வாழ்த்துக் களையும் ஆசிகளையும் அவனருளைப் பிரார்த்தித்து நல்குகிறோம்..

*சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்*
*வேந்தனைச் செந்தமிழ் நூல் விரித்தோனை விளங்கு வள்ளி*
*காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்*
*சாந்துணைப் போதும் மறவாதவர்க்கு ஒரு தாழ்வும் இல்லையே*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசிச்செய்தி

# வரம் அருளும் தெய்வம்

**சிவஸ்ரீ. சா.சோமதேவக்குருக்கள்**
**பிரதானாச்சார்யார்**
**(ஸ்ரீ அரசகேசரி விநாயகர் திருக்கோயில்)**
**கும்பாபிஷேக பிரதம சிவாச்சார்யார்**
**நீர்வை கதிர்காம ஸ்வாமி திருக்கோயில்**

நீர்வேலி ஸ்ரீலஸ்ரீ சிவசங்கரபண்டிதர் போன்ற சைவத்தமிழ் அறிஞர்களும், அன்பர்களும் நிறைவாக வாழ்ந்த. வாழ்கின்ற பூமி. இவ்வூரின் கண்ணே பல்வேறு திருத்தலங்களும் அருள்சுரந்து வருகின்றன. இவற்றுள் நீர்வேலியின் வடபால் விளங்கும் செல்லக் கதிர்காம முருகன் ஆலயமும் முக்கியமானதாகும்.

தபஸ்வினிகளால் பூஜிக்கப்பட்டு அருட்பொலிவோடு விளங்கும் இத்தல இறைவனை வழிபடுபவர்கள் கதிர்காம யாத்திரை, தரிசன திருப்தியையும் அருளையும் பெறுகின்றனர்.

மிகவும் வரப்பிரசாதியாக இங்கே எழுந்தருளியிருக்கும் கதிரை யாண்டவன் திருத்தலத்தில் 25.03.2012 ஸ்ரீ கர வருஷம் பங்குனி 12ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை திருக்குடமுழுக்குப் பெருவிழா நடைபெறுவதும், அந்நிகழ்வில் நாம் பிரதான சிவாச்சாரயராகப் பணியாற்றுவதும் இறையருட் பேறேயாகும்.

ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு கால அருளாட்சிச் சிறப்புடைய இவ்வாலய மகிமைகளையும், இன்னும் முருகன் சம்பந்தமான, நமது ஹிந்து தர்மம் தொடர்பான பல விடயங்களையும் உள்ளடக்கி இவ்விழாவில் மஹாகும்பாபிஷேக மலர் வெளிவருவது மகிழ்ச்சி தருகிறது.

எல்லாம் வல்ல கதிர்காம வேற்பெருமான் திருவருளால் நிகழ்வு சிறப்புறவும், மலர் சிறப்புற அமையவும், அவனருளைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

*வீரவேல் தாரை வேல் விண்ணோர் சிறை மீட்ட*
*தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் - வாரி*
*குளித்த வேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்*
*துளைத்தவேல் உண்டே துணை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துச்செய்தி



# மகிழ்ச்சி அளிக்கும் நிகழ்ச்சி


**திருப்பணிச் சபையினர்**
**நீர்வேலி**
**ஸ்ரீ செல்லக் கதிர்காம ஸ்வாமி திருக்கோயில்**


*திருச்சிற்றம்பலம்*
*கொம்மை வரிமுலைக் கொம்பனையாள் கூறனுக்கு*
*செம்மை மனத்தால்* **திருப்பணிகள்** *செய்வேனுக்கு*
*இம்மை தரும் பயன் இத்தனையும் ஈங்கொழிக்கும்*
*அம்மை குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே*
*திருச்சிற்றம்பலம்*

-திருவாசகம்-

நீர்வை ஸ்ரீ செல்லக்கதிர்காம ஸ்வாமி திருக்கோயில் சிறப்பான வரலாறும், அருட்பொலிவும், அற்புதங்களும் நிறைந்த திருத்தலமாகும். வேண்டுவார் வேண்டுவன அருளும் அருள் வள்ளலாக விளங்கும் செல்லக்கதிர்காம வேலவன் ஆலயம் திருப்பணிகள் நிறைவேறி மஹா கும்பாபி'கம் நடைபெறுவது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது.

இவ்வாலயத்திற்கு சிறந்த கட்டமைப்போடு ஒரு சபையை அமைத்து திருப்பணி செய்ய ஆரம்பித்தால் தான் பாலஸ்தாபனம் செய்வது பற்றியும், மஹாகும்பாபி'கம் செய்வது பற்றியும் ஆராயலாம் என்று நம் கோயில் குருக்கள் முதலாய பெரியவர்களால் தீர்மானிக்கப்பட்டது.

அதன் வழியே, பொதுக்கூட்டம் நடாத்தப்பட்ட போது, திருப்பணிச் சபையாக நாம் தெரிவு செய்யப்பட்டோம். இறைவன் முருகன் திருவருளால் அன்பர்கள் பலரும் நிதியுதவி செய்து நமது பணிகள் சீராக நடைபெற உதவினர்.

இவற்றின் பயனாக, இத்திருத்தலம் புனரமைக்கப்பெற்று மஹா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. நம்முடைய பணிகளுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்த அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றி கூறுகிறோம். தொடர்ந்தும் ஆலய வளர்ச்சிக்கும் சிறப்பிற்கும் ஆலய நித்திய நைமித்திய வழிபாடுகளுக்கும், அன்பர்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் திருப்பணிகள் தொடர்ந்து நடைபெற வழி செய்ய வேண்டும் என்றும் பணிவன்புடன் வேண்டுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மஹாகும்பாபிஷேகத்தினை முன்னிட்டு சிறந்த ஒரு பெறுமதி மிக்க தகவல்களுடனும் கட்டுரைகளுடனும் கூடிய திருமிகு மலர் ஒன்று வெளிவருவது பெருமகிழ்ச்சிக்குரியது.. அம்முயற்சியை பெருவிருப்போடு வாழ்த்தி வரவேற்கிறோம்..

நம்மையும் கருவிகளாகக் கொண்டு வழிநடத்தி திருப்பணியில் ஈடுபடச் செய்த எம்பெருமானாய செல்லக் கதிர்காம ஆண்டவனின் திருமலரடிகளை பன்முறை மனதால் பணிந்து போற்றி வணங்குகிறோம்..

*கல்லால் நற்பணி புரிந்தோர்*
*கல்லொன்றுக்கு ஒரு கற்பம் கந்தவேட்பில்*
*நல்லார்வமுடன் இருப்பர் தேரியற்றி*
*விளவு நனிநடத்தல் செய்தோர்*
*பல்லாண்டு குமரன் உயர் பதத்திருப்பர்*
*நெய்விளக்குப் புனிததீபம்*
*வில்லாரும் படி புரிந்தோர் பலகற்பங்*
*கந்தவரை மேவி வாழ்வர்*

*-மயூரகிரிப் புராணம்-*

*"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பத்திர புஷ்பங்களால் ஒரு பூஜை

**பிரம்மஸ்ரீ. தி.மயூரகிரி சர்மா**
**(பதிப்பாசிரியர்)**

*இடத்தே தேவர்மகள் எதிர்ப் புறத்தே எழில்*
*மடந்தை மருவிட மாமயில் ஏறிடும் மாமாயன்*
*கடம்பணி கந்தன் கவின் நீர்வை கதிர்காமன்*
*திடமுற திருவருள் பொழி திறமது வியப்பே*

*தன்னடியார் பொருட்டாக படை நாயகம் தாங்கியவர்*
*என்னாளும் துன்பம் எமக்குண்டாயின் எதிர் வந்து*
*முன்னாக நின்றது தீர்த்தருள் கோலக் குறமாமகள்*
*தன்னாயகன் நீர்வைத் தனிநாயகன் கதிர்காமநாயகனே*

திருவருட்சிறப்பும் குருவருட் சிறப்பும் ஒருங்கே பெற்றுள்ள ஒப்புயர்வற்ற திருத்தலம் நீர்வை செல்லக்கதிர்காம முருகன் தலம். மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் என்கிற சிறப்புக்கள் எல்லாம் அமையப்பெற்றது இத்தலம்.

சித்தி வல்ல சுத்தர்களான பெண்ணடியார்கள் பேரில் பெருமான் கொண்ட பேரருளின் வெளிப்பாடாய் உருவெடுத்த தலம் இது. (அந்த தபஸ்வினியரின் சமாதி இன்றைக்கும் கோயில் வளாகத்தில் இருக்கிறது)

வெற்றி வேல் வடிவமாக.. அந்த வேலவன் காட்சி.. அதை விட நூலகம் அமைத்து நூற்களஞ்சிய முயற்சியும் இத்தலத்தே இடம்பெற்றிருக்கிறது. இதை விட சிறப்பான குருத்துவ பாரம்பரியமும் இயல்பாய் இத்தலத்தே அமைந்ததும் வியப்பே..

1900களின் முற்பகுதியில் உருவாகி ஏறத்தாழ நூறாண்டை நோக்கி பயணிக்கிற இத்திருத்தலத்தில் திருக்குடநன்னீராட்டுப் பெருவிழா நடப்பது பேருவகை தருவதாகும்.

இத்தல வளர்ச்சிக்கெல்லாம் நல்ல ஒரு வழிகாட்டியாக விளங்குபவர் எமது மதிப்பார்ந்த தந்தை சிவஸ்ரீ.கு.தியாகராஜக்குருக்கள் அவர்கள். அவரது மேலான வழிகாட்டலிலேயே இந்நூல் பதிப்பும் இடம்பெற்றிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தல குடமுழுக்கு விழாவை முன்னிட்ட பல இலட்ச நிதியிலான திருப்பணிகளுக்கு முன்னின்று உழைத்த அன்பர்கள், நிதி உதவி செய்த உள்நாட்டு, மற்றும் உலகெங்கிலும் வாழும் பெருமானின் மாறா அடியவர்கள் அனைவருக்கும் இந்தச் சந்தர்ப்பத்திலும் நன்றி கூறுகிறோம்.

இன்னும், இந்த நூல் வெளியீட்டுக்கு நல்லாலோசனை வழங்கிய விரிவுரையாளர் ச.லலீசன் அவர்களுக்கும் எமது நன்றிகள்.

மின்னஞ்சல் மூலமான குறுகிய கால வேண்டுகோளை ஏற்று தமது மிகப்பெறுமதி மிக்க கட்டுரைகளைத் தந்துதவிய தமிழக சான்றோர்களுக்கும், இன்னும் தமிழ்ஹிந்துச் சமூகத்திற்கும் கோடி நன்றிகள் உரியதாகுக.

குறுகிய கால வேண்டுகோளை ஏற்று தமது ஆய்வியல் நிலை நின்ற கட்டுரைகளை உவந்தளித்த ஈழத்து அறிஞர்களுக்கும், குடமுழுக்குப் பெருவிழா முதன்மைக்குரு நமது மதிப்பிற்குரிய சா.சோமதேவக்குருக்களுக்கும், வாழ்த்துரை தந்திருக்கிற திருப்பணிச் சபையாருக்கும் நன்றிகள்..

மலரது அடக்கம் கருதியும்.. கால நெருக்கடி கருதியும் குறிப்பிட்ட சிலரிடமே கட்டுரைகள் பெற்றிருக்கிறோம்..

திருத்தல மகிமையோடு இணைவாக பிற சில விஷயங்களையும் இணைத்துச் சொல்வதே இந்நூலின் முக்கிய நோக்கம் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்னும், இந்நூலை சிறந்த முறையில் பதிப்பித்திருக்கிற ஷாம்பவி பதிப்பக உரிமையாளர் சீ.புவீந்திரன் அவர்களுக்கும், பதிப்பகப் பணியாளர்களுக்கும் நமது நன்றிகள்.

இன்னும், எவ்வகையிலேனும்.. இந்நூற்பதிப்புப் பணிக்கும், நூல் வெளியீட்டிற்கும் உதவியாற்றிய யாவருக்கும் எமது மனம் கனிந்த நன்றிகளை சொல்லி, அவர்கள் அனைவரும் நம் பெருமானாய நீர்வைக் கதிர்காமத்து ஆண்டவன் பேரருளால் சிறப்புற வாழ வாழ்த்துகிறோம்..

எல்லாவற்றிற்கும் மேலாக, எம் உணர்வாய்.. உயிராய்.. நின்று எம்மை என்றும் வழிநடத்திக் காத்து ரட்சிக்கும் வற்றாத கருணைப் பெருவள்ளலான சித்ரமயில் வாகனனாய, வள்ளி மணவாளன், நீர்வை கதிர்காம வள்ளல் பெருமானின் திருவடிகளைப் பன் முறை வாழ்த்தி வணங்கி இந்நூலை அவனடியார்களான தங்கள் திருக்கரங்களில் சமர்ப்பிப்பதில் இந்நூல் பதிப்பாசிரியர் என்ற வகையில் மிகுந்த மனநிறைவு எய்துகிறேன்..




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பதிவியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிசயங்கள் நிறைந்த அருள் வேலன் ஆலயம்

**(தலவரலாற்றுக்கண்ணோட்டம்)**

நீர்வேலிக்கிராமம் பெரிதாக நவீனப்பட்டு விடாத காலம் அது... எங்கு நோக்கினும் செழிப்பும் வனப்பும் நிறைந்திருக்கிறது. விவசாயமே பெரும்பாலோரின் முக்கிய தொழில் ஆதலில், சூழல் விவசாயச் சூழலாக இருக்கிறது. எது எப்படி இருந்தாலும் அங்கிங்கெணாது எங்கும் குடி கொண்டிருக்கிற இறைவன் அந்த மக்கள் உள்ளம் தோறும் கோயில் கொண்டிருக்கிறார்.

அதற்கு அத்தாட்சியாக, நீர்வேலியில் முப்பெரும் கோயில்கள்.. ஆகப் பெரியனவாயில்லாத போதும், ஓரளவு சிறப்பாகவே அமைந்திருக்கின்றன. இது மட்டுமல்ல, பெருமரங்களின் அடிகளில் சூலமும் வேலும் கல்லும் சுந்தரமாக அமைக்கப்பெற்று அந்த ஆண்டவன் வழிபாடு நடக்கிறது.

ஆனாலும், ஸ்ரீலஸ்ரீ சிவசங்கரபண்டிதர், சிவப்பிரகாச பண்டிதர், நடராசபண்டிதர் மூவரும் தொடர்ந்து ஆற்றியிருக்கிற கல்விப்பணியால் மக்களில் பெரும்பாலோர் எழுத்தறிவு பெற்று விளங்குகிறார்கள்.. காலையில் எழுந்தால் ஆலயங்களின் காண்டாமணி ஓசை வேதபாராயணம், திருமுறை முழக்கம் இவைகள் இந்தக் கிராமத்திற்கு இயல்பாகவே அமைந்து விட்டன.

இற்றைக்கு சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்.. இந்நிலைமைகளோடு கூடிய நமது நீர்வேலிக்கிராமம் இருந்தது. இந்நிலையில் நீர்வேலியின் வடபகுதியில் குடிசை அமைத்துத் தன் குடும்பத்துடன் வாழ்ந்தவர் தான் செல்லாச்சி அம்மையார். சாதுவான குணம், சத்தியமான கடவுள் நம்பிக்கை, என்று இயல்பாக இருந்தவர். தொடர்ந்து வந்த துன்பங்கள் அவரைப் புடம் போட்டுத் தூயவராக்கி இருந்தன. இப்போதெல்லாம் பார்ப்பதெல்லாம்.. கடவுளும். கடவுளுக்காகவும், இப்படியே அவர் வீட்டுப் பலாமரம் அன்றைக்குத் தான் பிஞ்சு பிடித்திருந்தது.. இது கதிர்காமத்து வேற்பெருமானுக்கு.. அன்றைக்கே அது மனதில் அர்ப்பணிக்கப்பெற்று விட்டது.

ஆனால், ஓரிரு நாட்களில் பார்த்தால்.. அதிசயமாக பிஞ்சு காயாகி.. பழமாகி.. பறவைகள் கூடி உண்ணும் நிலையை பெற்று விட்டது. திடுக்கிட்ட அம்மையார் என் செய்வது என்று கலங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகைவண்டி இல்லாத.. பஸ் பயணங்கள் இல்லாத அந்தக் காலத்தில் இப்பலாப்பழத்தைத் தூக்கிக் கொண்டு பல மைல்களுக்கு அப்பாலிருக்கிற தென் கதிர்காமம் செல்வது என்றால் எப்படி? இதற்கு எத்தனை மாதமாகும்..?

அவர் ஏதும் அறியாமல் திகைத்தார். பலாப்பழத்தை வெட்டி கைகளில் வைத்துக் கொண்டு அந்த சித்திரமயில் வாகனனை வள்ளி மணவாளனை.. செந்தமிழின் நாயகனை. சிந்தித்துப் போற்றத் தொடங்கினார். சிறிது நேரத்தில் ஆளையே காணவில்லை.

ஓரிரு மணி நேரங்கள் கடந்தோடி விட்டன.. நீர் வடிகிற சேலை.. நீறணிந்த நெற்றி... தங்க வேலும் முருகயந்திரமும் மின்னும் வலக்கை.. கதிர்காமத்திலே நிவேதித்து, பிரசாதமாகக் எடுத்த பலாப்பழத்துண்டு இப்படியே வீட்டு முன்றலில் நிற்கிறார்.

எங்கு இவர் சென்றாரோ.. என்று ஏங்கியவர்களும் தேடியவர்களும் இவரைக் கண்டு வியக்கிறார்கள்.. என்ன நடந்தது..? எப்படி நடந்தது..? யார் நடத்தியது? என்று குழம்பி ஆச்சரியத்தில் ஆட்பட்டார்கள்..

இது வரை எந்தச் சித்தும் செய்யாமல் எம்மோடு இருந்தவர் தானே.. செல்லாச்சி அம்மை தானே .. ? என்று அஞ்சினார்கள்.. சிறிது நேரம் செல்ல அம்மையாரே வாய் திறந்தார். இறைவனே தம்மை தென் கதிரமலைக்குக் ஒரு நொடியில் கொண்டு சென்று மீள நீர்வேலியில் விட்டதாக.. வியந்து நயந்து கண்ணீர் சொரியக் கூறினார். அவர் கையில் மின்னுகிற வேலும் யந்திரமும் அவருக்கு கதிரமலையில் கிடைத்த அரிய பொக்கிஷங்கள் என்று தெள்ளத் தெளிவாயின..

ஆங்கிருந்த நெல்லிமர நீழலில்.. இறைவனின் உத்தரவுப்படி வேல்பிரதிஷ்டை நடந்தது. ஆம், நீர்வேலியில் ஒரு கதிர்காமம் உருவாகி விட்டது. இன்னும் சில நாட்கள் சென்றன.. கதிர்காமத்திலிருந்து வந்தவர்கள் ஓரிருவர் செல்லாச்சியம்மையைத் தேடி நீர்வேலிக்கு வந்தார்கள்.. உங்களை கதிர்காமத்தில் கண்டோமே..? என்றார்கள்.. ஊர் வியந்து போனது.. மாதக்கணக்கில் கால்நடையாகச் செல்ல வேண்டிய தென் கதிர்காமம் ஓரிரு மணித்துளிகளில் சென்று வருவதென்றால் என்ன அதிசயம்..?

ஔவையார், காரைக்காலம்மையார், செந்தமிழ்க் கோதையாம் ஆண்டாள், மீரா இவர்கள் வழியே அன்றே செல்லாச்சியம்மைதன் குடும்ப வாழ்வை நீத்தார். தவவாழ்வைக் கைக் கொண்டார்.

செல்லாச்சியம்மையின் பணிகளில் சின்னாச்சியம்மை என்கிறவரும் இணைந்து கொண்டார். இருவரும் குலத்தால்.. மரபால் வேறுபட்டவர்கள்.. ஆனால், பக்திக் குணத்தால் இங்கே நீர்வை செல்வக்கதிர்காமத்தில் ஒன்றானார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலங்கள் ஓடின.. நெல்லிமரநிழல் தெய்வீகமயமானது.. கறுத்த இருளில் அங்கு மட்டும் தீபம் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும். காற் சிலம்போசை மக்கள் கர்த்து ரட்சிக்கும்.. இப்படியே சென்ற வேளையில், பெருமானின் உத்தரவின் வண்ணம் இரு தபஸ்வினிகளும் ஊருராய்ச் சென்று மடிப்பிச்சை கேட்டார்கள்.. கிடைத்தவற்றை கொண்டு முருகனுக்கு வைரக்கல்லால் கோயிலமைக்கத் தொடங்கினார்கள்.

வியாபாரி ஐயா என்று ஊரவர்களால் அன்போடு போற்றப்பெற்றவர் பிரம்மஸ்ரீ.க.தியாகராஜக்குருக்கள். அரசகேசரியானின் சூழலில் வாழ்ந்த அவர் ஆகமம், இசை, ஜோதிடம், புராணபடனம், இவைகளில் ஒப்பாரும் மிக்காருமில்லாப் அறிஞர். அடக்கமும் அறிவும் மிக்கவரான அவர் இவ்விருதவச்செல்விகளின் பக்திமையைக் கண்டார். உரிய நிலைகளில் ஆகம முறைமைகளைக் காட்டி வழிப்படுத்தினார்.

இம்மூவரின் பங்களிப்பால் நீர்வேலி வடக்கில் வைரக்கற்களால் இழைக்கப்பெற்ற கருவறையுடன்.. அழகிய சிறிய அற்புத ஆலயம் உருவானது. 1936 ஆவணி மாதத்து ரேவதியில் கோயிலில் குமரன் குடியேறினான். குடமுழுக்கும் நடந்தது. அந்த மனநிறைவில் .. செல்லாச்சி அம்மையார் சிவப்பேறெய்தினார். அவர் தம் சமாதி கோயில் வீதியில் இன்றும் இருக்கிறது. கோயிற் பரிபாலனத்தையும் பூஜையையும் க.தியாகராஜக்குருக்களே சிறிது காலம் மேற் கொண்டார்.

குருக்களும் முதுமையால் தளர்வுற ஆலய பூஜை செய்பவர்கள் அடிகக்டி மாறிக் கொண்டேயிருந்தார்கள். கருவறையைத் திறந்தால் பாம்பு நடமாடும்.. கோயிலைச் சுற்றிலும் பனைமரக்காடு.. எங்கும் புதர்கள்.. மிகவும் பாடுபட்டு கோயிற் பராமரிப்பாளராக செல்லாச்சியம்மை நியமித்திருந்த திருமதி இராசா வள்ளிப்பிள்ளையும் அவர் பிள்ளைகளும், அன்பர்களும் ஆலயத்தை ஒருவாறு பராமரித்து வந்தனர். அவர்களால் தொடர்ந்து அது முடியாமல் போயிற்று..

கோயிலைச்சுற்றி பனைமரக்காடு.. எங்கும் புதர்.. கோயில் முன்றலில் கிறிஸ்துவத்தை ஏற்றுக் கொண்டவர்களின் தொடர் குடியிருப்புக்கள்.. இப்படியான சூழலில் கோயிற் கருவறையில் தீபமேற்றுவதே சவாலாக இருந்தது.. இக்காலத்தில் திருமதி இராசா குடும்பம், க.அப்பாத்துரை, இ.கந்தசாமி போன்றோர் பெருமான் ஆலயத்தில் தீபமேற்றும் திருப்பணியில் ஈடுபட்டுழைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியான சூழலில், நீர்வை மணி பிரம்மஸ்ரீ. கு.தியாகராஜக் குருக்கள் கோயில் பூஜையை ஏற்றுக் கொண்டார்கள். அன்பர்கள் பலர் சேர்ந்து மாதாமாத பூஜை ஒழுங்குகளை ஏற்றார்கள். கோயிற் சூழல் புனரமைக்கப்பெற்றது. கருவறையின் மேலே விமானம் அமைக்கப்பெற்றது. வலஞ்சுழி விநாயகர் பிரகாரத்தில் வந்தமர்ந்தார். இந்நிலையில் சிறப்பாக, 1985 பங்குனி ரோகிணியில் மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

கோயிலைச் சுற்றியுள்ள பல்தொழில் சார் மக்களும் கோயிற் பணியில் பேதம் மறந்து பணியாற்றினர். கோயில் முன்றலில் வாழ்ந்த பிற சமயிகளும் தம் இருப்பிடங்களை விட்டுக் கொடுத்து .. கோயிலின் எழுச்சிக்கு உதவினர். இப்படி மேன்மையான நிலையை நோக்கி கோயில் எழுச்சியுற, விழாக்களும் வெகு சிறப்பாக நடைபெறலாயின.

1995ல் மீள பெரும் உள்நாட்டுப் போர் பிறந்தது. யாவரும் ஊரை விட்டு, உறவை விட்டு தென்மராட்சி நோக்கி ஓடவேண்டியதாயிற்று.. இந்த ஓட்டத்தின் சீர்கேட்ட சூழலில் கோயிற் சூழலே இருதரப்புக்களின் சமர்க்களமானது.. மூலத்தானத்து வேலும்.. இன்னும் பெருமானின் ஆபரணங்களும் கொள்ளையடிக்கப்பட்டன.. கோயில் மதிப்பிட முடியாத சேதத்திற்கு உட்பட்டது.

கு.தியாகராஜக்குருக்கள், ஸ்ரீமான் அமரர்.த.சின்னத்துரை, திருமதி இராசாகுடும்பம், என்று பற்பல அன்பர்களின் கூட்டு முயற்சியால், கோயில் அழிவுகளிலிருந்து மீட்டெடுக்கப்பெற்று 1997ல் வைகாசி புனர்பூச நாளில் திருக்குடமுழுக்குச் செய்யப்பெற்றது. 2001லிருந்து ஆனித்திங்களில் பிரம்மோத்ஸவமும் ஆரம்பமாகி நடைபெறும் இக்கோயிலில் 2003 மகாமகவருஷத்தில் "குமாரபுஷ்கரணி" திருக்குளமும் அமைக்கப்பெற்றது.

சில ஸ்தலங்களில் முருகன் சிவரூபமாக விளங்குவான்.. இங்கோ, பெருமான் விஷ்ணுரூபமாக விளங்குகிறான். முருகனோடு.. மாயன் மாமன்.. திருமாலும் விளங்குகிற அழகை இங்கு காணலாம். கண்ணனும் கந்தனும் கலந்து "ஈழத்துப் பழமுதிர் சோலை"யாக இத்தலத்தில் சிறப்புற்றுக் காட்சி தரும் அழகே பேரழகாகும்.

சுந்தரவல்லி, அமிர்தவல்லித் தாயார்களுடன் உற்சவராகிய சுந்தரராஜன் எழுந்தருளும் அழகு இங்கு சிறப்பானது. ஆனி மஹோத்ஸவம், ஐப்பசி ஷஷ்டி விழா, ஆடித் திருவோணம், மார்கழி சுவர்க்கவாயில் ஏகாதசி என்று இங்கு சிறப்பான திருநாட்கள் அமைந்திருக்கின்றன.

நீங்களும் ஒருமுறை நீர்வேலி வாருங்கள்.. செல்வக்கதிர்காம வேலன் சந்நதியில் நின்று ஒரு கணம் போற்றுங்கள்.. நன்மையும் செல்வமும் அவன் அள்ளி வழங்குவான்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீர்வைக் கதிர்காமம் எழுந்த காலமும் காட்சிகளும்

ஆங்கிலேயர் காலத்தில் கிறிஸ்தவ மிஷனரிகள் அவ்வப்போது நமது நீர்வேலியிலும் காலூன்ற பெரும் பிரயத்தனம் செய்து வந்திருக்கின்றன.. ஆனால், அது பல்வேறு காரணங்களால் இயலாமல் போயிருந்தது.

நீர்வேலியை ஊடறுத்துச் செல்லும் பருத்தித்துறை நெடுஞ்சாலையில் ஸ்ரீலஸ்ரீ சிவசங்கரபண்டிதர் தொட்டு மாபெரும் அறிஞர்கள் சைவமும் தமிழும் வளர்த்து வந்திருக்கிறார்கள்.. இதை விட பண்டிதர் அவர்கள் தொடர்ந்து தமது பேச்சு, எழுத்து வன்மையால் மிலேச்சமத, யேசுமத கண்டனம் செய்து வந்தமை காரணமாக, அம்மதம் காலூன்றவே இயலாமல் போயிற்று.

எனினும் மானிப்பாயில் உயர்குடியில் பிறந்து அச்சுவேலியில் வளர்ந்து நல்லூரை தமது பணியின் முக்கியஸ்தானமாக கொண்ட கத்தோலிக்க மதகுருவான சுவாமி ஞானப்பிரசார் என்பவரின் மாபெரும் கத்தோலிக்க பரப்புரைக்குள் நீர்வேலி தப்பவே இயலவில்லை.

1800 களின் இறுதியில் அப்போதைய யாழ்ப்பாண ஆயரின் துணையுடன் நீர்வேலியில் இன்று கதிர்காம சுவாமி ஆலயம் இருக்கும் இடத்திற்கு அருகில் ஞானப்பிரகாசரின் பெருமுயற்சியால் தேவாலயம் ஒன்று உருவாக்கப்பட்டது.

எனினும் அப்போது நீர்வேலியிலிருந்த தீவிர சைவ விஸ்வாசிகளால் இம்மதமாற்ற திணிப்பு முயற்சி கடுமையாக எதிர்க்கப்பட்டது. இந்நிலையில், ஞானப்பிரகாசர் அன்றைய ஆங்கில அரசின் துணையோடு அவர்களில் பலரை சிறைப்படுத்தினார். எனினும், அடுத்து வந்த கிறிஸ்மஸ் பெருவிழாவில் அவர்களுக்கு "மன்னிப்பு அளிப்பபதாகச் சொல்லி விடுதலை தந்து அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரையும். இன்னும் அவர்களுடன் கூடிய அவர்களின் குடும்பத்தாரையும் கிறிஸ்துவத்துக்கு மாற்றினார்.

இந்நிலையில் இவர்கள் அனைவரின் பங்களிப்புடனும்.. 1904ல் இன்று நாம் காணும் நீர்வேலி வடக்கு பரலோகமாதா தேவாலயம் எப்பப்பட்டது. இது 2004ம் ஆண்டு காலப்பகுதியில் நூற்றாண்டு விழா கொண்டாடியதும் ஞாபகத்திற்குரியது. இத்தேவாலயத்துடன் றோமன் கத்தோலிக்க வித்தியால யமும் சுவாமி ஞானப்பிரகாசரால் ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வாறு ஞானப்பிரகாசர் கத்தோலிக்க மதமாற்றம் செய்த குடும்பங்களுள் நெருக்கமான உறவு பூண்டவரே கதிர்காம ஆலய ஸ்தாபிதத்தில் முக்கிய பங்காற்றிய செல்லாச்சியம்மையார். எனினும், மதமாற்றத்திற்கு அகப்பட்டு விடாத இவர் இல்லற வாழ்வை வெறுத்தவராயும்.. முருக வழிபாடு பேணுபவராகவும். வருடாந்தம் கதிர்காம யாத்திரை செய்பவராயும் இருந்திருக்கிறார்.

இக்காலத்தில் தான் (ஏறக்குறைய 1920களில்) "பலாப்பழ" அற்புதம் நடந்திருக்கிறது. இவை பலரையும் ஆச்சர்யத்திற்கு உள்ளாக்கியிருக்கிறது. இவற்றால் கிறிஸ்துவத்திற்கு மாறியவர்களில் சிலர் சில காரணங்களைக் காட்டி தேவாலய வழிபாட்டிலிருந்து ஒதுங்கிக் கொண்டார்கள்.

சிலர் தமது புதிய பாரம்பரியங்களுக்கு ஏதுவாக.. நீர்வைக் கதிரையாண்டவனுக்கும் மெழுகுவர்த்தி ஏற்றி வழிபாடு செய்ய முயற்சித்தார்கள்.. இவை கூட பல எதிர்வினைகளை உண்டாக்கியதாக அக்காலத்தவர்கள் சொல்கிறார்கள்.

எது எவ்வாறாயினும் இன்று இந்த செல்லக்கதிர்காம முருகன் ஆலயத்தில் யாவரும் மத- மன பேதமின்றி வழிபாடு செய்வதைக் கண்டு மகிழலாம். ஆக, இன்றைக்கு மத ஒற்றுமைக்கு ஒரு மைல்கல்லாகவும் இத்தலம் விளங்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நீர்வேலி செல்லக் கதிர்காம சுவாமி கோயிலைச் சுற்றிலும் அமைந்திருக்கிற முதன்மையான திருத்தலங்கள் சில.**

கிழக்கு- நீர்வேலி வாய்க்காற்தரவை மூத்த விநாயகர் ஆலயம்
தென் கிழக்கு- நீர்வேலி ஸ்ரீ ஸ்கந்தசுவாமி ஆலயம்
தென் மேற்கு- நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலயம்
மேற்கு- நீர்வேலி பராசக்தி காளியம்பாள் ஆலயம்
வடமேற்கு- நீர்வேலி காமாட்சி, இராஜராஜேஸ்வரியம்பாள் ஆலயம்
வடக்கு- நீர்வேலி காளியம்பாள் ஆலயம்
வடகிழக்கு- நீர்வேலி சப்தகன்னிகள் ஆலயம்
இதனை விட பரலோகமதா கத்தோலிக்க தேவாலயம்

இவற்றை விட சுற்றிலும் நாகராஜர், பைரவர், வல்லியப்பர் முதலிய தெய்வங்களுக்கான சிற்றாலயங்கள் காணப்படுகின்றன.. இவை காவல் தெய்வங்களாக சிறப்புடன் காட்சி தருகின்றன.

## கோயில் வளர்ச்சியில் பெரும்பங்காற்றிய குருமார்கள்.

**சிவஸ்ரீ. கு.தியாகராஜக்குருக்கள் (வியாபாரிக் குருக்கள்)**



கோயில் உருவாக்க காலத்திலிருந்து சுவாமிக்கு நித்ய, நைமித்திய பூஜைகளை தனது வயோதிப காலம் வரை செய்து வந்தவர். வேதாகமங்களிலும் ஜோதிடம், இசை முதலியவற்றிலும் புராண படனத்திலும் வல்லவர். முதலில் திருக்கோயில் எழுப்பி மஹாகும்பாபிஷேகம் செய்ததும் உற்சவாதிகள் நடந்ததும் இவர் காலத்திலே யாகும். ஆலய உருவாக்கத்திலும் பரிபாலனத்திலும் இவரின் பங்கு சிறப்பானதாகும்.

**பிரம்மஸ்ரீ. நீலகண்டஐயர்**

நீர்வேலி வடக்கு காளி கோயில் அர்ச்சகராக இருந்த இவர் சில காலம் எம்பெருமானுக்கு பூஜை பண்ணியிருக்கிறார். வயதில் முதிர்ந்த இவர் தமது இயலாமையையும் பொருட்படுத்தாது எந்த வருவாயையும் கவனியாமல் இறைபணியாற்றி அமரத்துவம் அடைந்தார்கள்.

இவர்களுக்கு பின் பாலசுப்பிரம்மண்யஐயர், வேணுநாத சர்மா போன்றவர்களும் சிற்சில காலத்திற்கு பூஜை பண்ணியிருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரம்மஸ்ரீ. கு.தியாகராஜக்குருக்கள்**

வியாபாரி ஐயா அவர்கள் கோயிற் பொறுப்பிலிருந்து விலகியதும். பின்னர், கோயில் கவனிப்பாரற்று சிதையலாயிற்று. திருவிளக்கிடுதலுக்கே ஆளின்றி போயிற்று. குருமார்களே இல்லாமல் அடியவர்களே சில வேளைகளில் திருவிளக்கிட வேண்டிய நிலையும் இருந்து வந்தது.



இந்நிலையில் 1980ஆம் ஆண்டளவில் மணிஐயா என்றழைக்கப்படும் கு. தியாகராஜக் குருக்கள் கோயிலை பொறுப்பெடுத்து கடந்த 30 ஆண்டுகளாக, நித்ய நைமித்திய பூஜைகளை செய்து வருகிறார்கள்.

கருவறை மட்டுமே காணப்பட்ட கோயில் பெரியளவில் பேராலயமாகத் திருப்பணி செய்யப்பட்டதும் பல்வேறு மேம்பாடுகளை பெற்றதும் தற்போதைய இக்குருக்களின் காலமேயாகும்.

## கோயில் வளர்ச்சியில் அளப்பரிய பணி புரிந்து அமரரான அன்பர்கள் சிலர்

**மாதாஜீ செல்லாச்சியம்மையார்:**

(ஆலய ஸ்தாபிதர்களான தபஸ்வினிகள்) மாதாஜீ சின்னாச்சியம்மையார்

**ஸ்ரீமான் த.சின்னத்துரை**

(1997ஆம் ஆண்டு ஜீர்ணோத்தாரண மஹாகும்பாபிடேகப் பணியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து.. சரணாகதியடைந்து சிவப்பேறடைந்தவர்)

**ஸ்ரீமான் க. அப்பாத்துரை:**

(சுவாமி திருவீதியுலா வருவதற்கு வாகனம் முதன்முதலில் ஈந்தவர்)

**ஸ்ரீமான் க. பரமநாதன்:**

(ஆலய திருப்பணிக்கு பல இலட்சம் தந்தவர்)

**ஸ்ரீமதி சத்தியதேவி துரைசிங்கம்:**

(மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதையான இவர்கள் ஆலய வளர்ச்சியை செம்மையுறச் செய்வதில் முக்கிய பணியாற்றியிருக்கிறார்கள்)

**பெரியார் தி.பொன்னம்பலம்**

(பெருமான் எந்தருள பெரிய- சிற்ப கைலை வாகனம் செய்வித்தவர்)

**ஸ்ரீமான். கிருட்ணபிள்ளை ஆனந்தன்**

(முதன்முதலில் கட்டுத்தேர் உருவாக்கி பின், தேர் விழாவை தனது உபயமாக சிறப்புறச் செய்தவர்)

**ஸ்ரீமான். ந. அருளம்பலம்**

(இறுதிக் காலம் வரை தீபமேற்றல் பணியில் தன்பங்களிப்பை ஆற்றி வந்த சைவத்தமிழ் ஆசிரியர்)

**ஸ்ரீமான் சிவஞானசுந்தரம்**

(பண்ணோடு இசை பாடியும், ஆலயச் சூழலில் புனித விருட்சங்களை வளர்த்தும் பணியாற்றிய அன்பர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீர்வேலி
# செல்லக்கதிர்காம சுவாமி திருக்கோயில் திருப்பணிச் சபையினர்

நீர்வேலி செல்லக்கதிர்காம சுவாமி ஆலய வழிபாடு, திருப்பணி போன்றவற்றை கட்டமைத்த வகையில் செயற்படுத்துதற்கு சிறந்த ஒரு சபை உருவாவதன் அவசியம் பலராலும் உணரப்பட்ட போது அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வந்தன.. ஆனால், பல்வேறு காலத்திலும் அசாதாரண சூழல்களால் அவை தோல்வியையே அடைவதாயின..

இந்நிலையில் திருக்கோயில் பாலஸ்தாபனம் செய்து திருப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற வேண்டும் என்ற ஆவலை 2010ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் பல அன்பர்களும் வெளிப்படுத்தினர்.

எனினும் கோயில் குருக்கள் போன்றவர்கள் திருப்பணி போன்றவற்றை முன்னின்று செய்ய திருப்பணிச்சபை போன்ற ஒரு அமைப்பு உருவானாலேயே பாலஸ்தாபனம் செய்வது பற்றிச் சிந்திக்கலாம் என்று உறுதியாக சொல்லி விட்டார்கள்.

இந்நிலையில் 2011ஆம் ஆண்டு ஜூன் மாதமளவில் புதிதாக திருப்பணிச் சபை தெரிவு செய்யப்பட்டது. பாலஸ்தாபனம் செய்து திருப்பணிகளை செவ்வனே நிறைவேற்றி மஹாகும்பாபிேஷகம் செய்வதையே முக்கிய நோக்காக கொண்டு முருகபக்தர்களை தன்னகத்தே கொண்டு இச்சபை உருவானது.

இன்றைக்கு இவ்வாலய திருப்பணிகள் மிகச்சிறப்பாக நடைபெற்று மஹாகும்பாபிஷேகம் நடைபெறுகின்றது என்றால் இச்சபையோரின் அர்ப்பணிப்புடன் கூடிய பெரும்பணியே காரணம் என்றால் அது மிகையல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பணிச்சபையினர்

| | |
|---|---|
| போஷகர்- | சிவஸ்ரீ. கு. தியாகராஜக்குருக்கள் (ஆலய பிரதமகுரு) |
| கௌரவ ஆலோசகர்- | திரு. வி. கந்தசாமி (சிரேஷ்ட கணக்காய்வாளர்) |
| தலைவர்- | திரு. இ. தயாகரன் |
| உபதலைவர்- | திரு. செ. இரத்தினசிங்கம் |
| செயலாளர்- | திரு. மு. கணேசானந்தன் (ஆசிரியர்) |
| உபசெயலாளர்- | திரு. கு. ஸ்ரீகானந்தன் |
| பொருளாளர்- | திரு. சி. ரதீஸ்குமார் (ஆசிரியர்) |
| களஞ்சியப்பொறுப்பாளர்- | திரு.ச. குணபாலசிங்கம் |

## சபை உறுப்பினர்கள்

திரு. அ. சுப்பிரமணியம்
திரு. ந. சற்குணானந்தன்
திரு. த. தர்மலிங்கம்
திரு. வே. சரவணமுத்து
திரு. த. சுகந்தன் (வங்கியாளர்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீர்வேலி
# ஸ்ரீ செல்லக்கதிர்காம சுவாமி கோயில்
# திருவூஞ்சல்

பிரம்மஸ்ரீ. ந. வீரமணிஐயர்

## - காப்பு -

செந்திருவும் கலைமகளும் செழித்தே வாழும்
செந்தமிழின் ஈழவள யாழ்ப்பாணத்தில்
கந்தமிகு நிலவளமும் நீர்வ ளஞ்சேர்
கவின் பதியாம் நீர்வேலி யூரில் என்றும்
வந்தமர்ந்தே வளமார்ந்த அருளும் நல்கும்
வளர்செல்லக் கதிர்காம ஸ்வாமி வைகிப்
புந்திமகிழ்ந் தாடிடவே ஊஞ்சல் பாடப்
பூரணனாம் வாரணனின் பதங்காப்பாமே

## - நூல் -

பொன்மருவும் நான் மறைகள் தூண்க ளாகப்
பொலியுசிவா கமம்வயிர விட்ட மாக
வன்னவெழிற் கலைஞானம் வடங்களாக
வளமார்ந்த ஓங்காரம் பீட மாக
நன்னயமாய் வள்ளிக்குஞ் சரியா ளோடு
வண்டமிழின் திருவூஞ்சல் தனிலே வைகி
கன்னல்தமிழ் கவிஞர்சூழ் நீர்வை மேவும்
கதிர்காம ஸ்வாமியே ஆடீர் ஊஞ்சல் 01

ஞானத்தின் வேலாட முடியு மாட
ஞாலமதின் கதிர்காமன் அருளும் ஆட
மோனத்தின் இதழாட முறுவ லாட
மோகனமா மயிலாட சேவலாட
வானத்தண் ணவராட வள்ளி ஆட
வளர்தேவ சேனாவும் மருவி ஆட
கானத்தின் கலையாகும் நீர்வை மேவும்
கதிர்காம ஸ்வாமியே ஆடீர் ஊஞ்சல் 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவமணியின் வடமாட நயன மாட
நளின முகம் ஈராறில் அருளும் ஆட
பவ மகற்றும் படையாடப் பதக்க மாட
பன் மலரின் இதழாட ஆர மாடப்
புவனங்கள் பதினான்கும் பொலிந்தே ஆடப்
புரிநூலும் அசைந்தாடப் புவியோ ராடக்
கவருமெழில் காவளஞ்சூழ் நீர்வை மேவும்
கதிர்காம ஸ்வாமியே ஆடீர் ஊஞ்சல் 03

அயிலாட அரனாட அயனும் ஆட
அண்டர்நா யகனாட அரவும் ஆட
மயிலாட மதியாட ரவியும் ஆட
மன்னிடுமுத் தமிழாட மறைக ளாட
பயிலாஇன் மொழியாளாம் வள்ளி ஆட
பாவையாம் தெய்வானை பக்க மாடக்
கயல்புரளும் கழனிசூழ் நீர்வை மேவும்
கதிர்காம ஸ்வாமியே ஆடீர் ஊஞ்சல் 04

செஞ்சிலம்பும் தண்டைச்சே வடிகள் ஆடச்
செழும்வீரக் கழலாடச் சதங்கை ஆட
மிஞ்சிஒளிர் செவிக்குழைகள் மிளிர்ந்தே ஆட
மேவுகரம் வரதமொடு அபயமாட
நெஞ்சமது நெகிழ்ந்தன்பர் விழிநீ ராட
நெடியகதிர் வேலாட நிமலி ஆடக்
கஞ்சமலர்த் தடஞ்சூழும் நீர்வை மேவும்
கதிர்காம ஸ்வாமியே ஆடீர் ஊஞ்சல் 05

கதிரவனாம் ஞாயிறுவும் திங்கள் சேர்ந்தே
கவின்செவ்வாய் மலர்ந்தால வட்டம் ஏந்த
இரதிமதனும் செங்கரும்பு தன்னைத் தாங்கக்
கலைச்செல்வி யாழன்போ டிசைக்க வெள்ளி
அதி நவஞ்சேர் மயூரத்தில் ஆசனித்தே
அடியருக்கு அருளாறு முகத்தன் நீயே
கதியருளும் தலமான நீர்வை மேவும்
கதிர்காம ஸ்வாமியே ஆடீர் ஊஞ்சல் 06


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டொருநாள் சூரனவன் அகந்தை கொண்டே
பதினாறு உலகாளும் பான்மை யோடு
அண்டருக்கும் அக்கிரமம் செய்தான் அந்த
அசுரர் குலம் வேரறுத்த அண்ணல் நீயே
மண்டலத்தில் மாங்கனியைப் பெறவே வன்ன
மயிலேறி வலம்வந்தே ஆண்டியனாய்!
கண்டவருக் கருள்நல்கும் நீர்வை மேவும்
கதிர்காம ஸ்வாமியே ஆடீர் ஊஞ்சல் 07

அத்துவிதங் கடந்திட்ட அப்ப னுக்கே
அழகொழுக உபதேசம் செய்த நாதா!
முத்தமிழை மாந்திடவே ஔவை யார்க்கே
முதுநாவல் பழம் நல்கும் வள்ளல் நீயே!
வித்தகனாம் நக்கீரன் விழைந்து வேண்ட
விரிதோகை மயிற்காட்சி தந்த தேவா!
கத்துவளைக் கழனிசூழ் நீர்வை மேவும்
கதிர்காம ஸ்வாமியே ஆடீர் ஊஞ்சல் 08

மலைமகளும் அரனவனோர் வடந்தொட்டாட்ட
மாமறையோன் நாமகளோர் வடந்தொட்டாட்ட
அலைமகளும் அரியவனோர் வடந்தொட்டாட்ட
அடியவரும் அகமகிழ்ந்தோர் வடந்தொட்டாட்ட
தலைமைதரு தமிழூஞ்சல் தன்னில் வைகீ
தண்ணமுகக் குறத்திகுஞ் சரியா ளோடு
கலைமிளிரும் திருத்தலமாம் நீர்வை மேவும்
கதிர்காம ஸ்வாமியே ஆடீர் ஊஞ்சல் 09

கரும்புதவழ் மலர்மார்பா ஆடீர் ஊஞ்சல்
சுகந்தனே கந்தனே ஆடீர் ஊஞ்சல்
விரும்புமடி யவர்க்கினியோய் ஆடீர் ஊஞ்சல்
வேலவனே பாலகனே ஆடீர் ஊஞ்சல்
அரும்புகமழ்க் கடம்பனே ஆடீர் ஊஞ்சல்
ஆறுமுகா அருளழகா ஆடீர் ஊஞ்சல்
கரும்புமொழிக் கவிஞர்சூழ் நீர்வை மேவும்
கதிர்காம ஸ்வாமியே ஆடீர் ஊஞ்சல் 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## – வாழி –

வேதநூலந்தணரும் வாழி! வாழி!
விண்ணவரும் ஆவினமும் வாழி! வாழி!
மாதமும் மாரிமழை மலிந்து வாழி!
மன்னவன் செங்கோலும் வாழி! வாழி!
பூதலத்தின் செந்தமிழின் பண்பு வாழி!
பூவையரின் கற்புநெறி ஞானம் வாழி!
காதலெனும் பக்திநெறி நீர்வை வாழி!
கதிர்காம ஸ்வாமியும் வாழி! வாழி!!

## எச்சரிக்கை

அயிலேந்திய மயில்வாஹனா குகனே எச்சரீக்கை
அமராதிப னடிபோற்றிடும் அரனே எச்சரீக்கை
குயில் கூவிடும் நீர்வைப்பதிக் குமரா எச்சரீக்கை
குறவள்ளிகுஞ் சரிநாயகா பரனே எச்சரீக்கை

மதவாரணன் உதவும்சகோ தரனே எச்சரீக்கை
மகா தேவனும் உமையாள் மகிழ்சுதனே எச்சரீக்கை
கதியேதரும் பதமேயருள் தேவா எச்சரீக்கை
கதிர்காமனே பதிநீர்வையில் நாதா எச்சரீக்கை

## பராக்கு

புள்ளிமயில் வாஹனனே வேலா பராக்கு
பூந்தமிழின் நாயகனே சேந்தா பராக்கு
வள்ளிதேவ யானைமகிழ் நாதா பராக்கு
வளநீர்வைக் கதிர்காமா தேவா பராக்கு

சக்தியவள் வேல் கொடுத்த பாலா பராக்கு
சத்துருசங் காரவடி வேலா பராக்கு
சித்தியெலாம் தருபவனே செவ்வேள் பராக்கு
சிவசுப்பிர மணியகதிர் காமா பராக்கு

முத்தமிழைச் சுவைப்பவனே முத்தா பராக்கு
முண்டகத்தின் பொற்பாதா சித்தா பராக்கு
அத்தனுக்கு அறிவு சொன்ன குருவே பராக்கு
அழகு பொலி நீர்வைக்கதிர் காமா பராக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லாலி

சுந்தரக் குமாரனுக்கு லாலி சுப லாலி
சிவசுப்பிர மணியருக்கு லாலி சுப லாலி
மந்திரங்கள் சொன்னவர்க்கு லாலி சுப லாலி
மாமயில் வாஹனர்க்கு லாலி சுப லாலி
சிந்தனைக் கினியவர்க்கு லாலி சுப லாலி
சீராறு முகத்தவருக்கு லாலி சுப லாலி
செந்தமிழ் நீர்வைப் பகுதிக்கு லாலி சுப லாலி
செல்லக் கதிரவர்க்கு லாலி சுப லாலி
சேந்தன் முருகனுக்கு லாலி சுப லாலி
செங்குறத்தி நாயகர்க்கு லாலி சுப லாலி
காந்தக் கடம்பனுக்கு லாலி சுப லாலி
கதிர்காமச் செல்வனுக்கு லாலி சுப லாலி
வேந்தன் குருபரர்க்கு லாலி சுப லாலி
வேலாயுதக் குகர்க்கு லாலி சுப லாலி
பூந்தன் நீர்வைப் பரர்க்கு லாலி சுப லாலி
பூமஞ்சள் அருள்பவர்க்கு லாலி சுப லாலி

## மங்களம்

மங்களம் சுப மங்களம் - ஜெய
மங்களம் ஜெய மங்களம்

தங்கவேலை ஏந்து வோருக்கு
தளிர்க் கதிர் காமருக்கு
பங்கஜத்தின் பொற் பாதர்க்கு
பாலசுப்ர மண்யர்க்கு மங்களம்

நல்லதமிழ் மாந்திடவே
நாவற்கனி தந்தவர்க்கு
செல்லக் கதிர் காமருக்கு
செழும் வடி வேலவர்க்கு மங்களம்

குங்குமமும் மஞ்சளதும்
கொத்துமலர் தந்தவர்க்கு
மங்கள நீர்வைப் பதிக்கு
மன்னு கதிர் காமருக்கு மங்களம்

*"சுபம்"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நீர்வேலி
# ஸ்ரீ செல்லக்கதிர்காம சுவாமி கோயில் கீர்த்தனைகள்

பிரம்மஸ்ரீ. ந. வீரமணிஐயர்

## விநாயகர் துதி

*ராகம்: ஹம்ஸத்வனி* *தாளம் : ஆதி*

### பல்லவி

பரவிப் பாட அருள்வாய் முருகனை
அரசகேசரி நீர்வை ஆனைமுகனே தமிழ்

### அனுபல்லவி

கரதலப் பூரணமும் கையில் பாசாங்குச மேந்தும்
கரிமுகனே உனது கழலடிகள் சரணம்

### சரணம்

ஆறுமுகன் குஹன் அருளைவேண்டியே நிதம்
வீறுடன் பாடச் செல்லக் கதிர்காமனின் பதம்
கூறுதமிழ் மாலை குரைகழல் சூட்டிடுவேன்
ஏறுமயில் வாகனனாம் எழிற்செல்லக் கதிர்காமனை

## செல்லக் கதிர்காமனின் சேவடி பாடு

*ராகம் : கல்யாணி* *தாளம் : ஆதி*

### பல்லவி

செல்லக் கதிர்காமனின் சேவடிபாடு முருகன்
அல்லல் அகற்றிடுவான் அம்புஜப் பதம்நாடு

### அனுபல்லவி

வல்ல வினைகளெல்லாம் வடிவேலன் தீர்த்திடுவான்
நல்லருளும் பொழிவான் நானிலத்தில் காத்திடுவான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சரணம்

நீர்வைத்தலம் வளரும் நிமலன் கதிர்காமன்
பார்புகழ்ந் தேத்திடும் பக்தர்க்கனு கூலன்
ஏர்மலி கழனியும் எழிற்கனி வளம்பொலி
கார்மலி நீர்வேலிக் கவின்தலம் அமர்ந்தருள்

## அமர்ந்தருளி அபயம் உவந்தருள் மயிலவன்

*ராகம் : ஷண்முகப்பிரியா* *தாளம் : ஆதி*

### பல்லவி

அமர்ந்தருளி அபயம் உவந்தருள் மயிலவன்
கவர்ந்தானடி என்உள்ளம் ஸகியே நீர்வையிலே

### அனுபல்லவி

தவழ்ந்திடும் சேவலின் தண்கொடி ஆடிட
கமழ்ந்திடும் கடம்பாரம் கவினொழுகப் புனைந்தே

### சரணம்

சுரந்திடும் கருணைபோல் சுனைநிறை நீர்வேலி
உறைந்திடும் குருபரன் உயர்செல்லக் கதிர்காமன்
வரந்தருள் அபயமும் வரதமும் ஏந்தியே
நிரந்தரம் அருள்தர நீர்வேலிப் பதியிலே

## நீர்வேலிப் பகுதியிலே நெஞ்சம் கவர்ந்த கள்வன்

*ராகம் : திலங்* *தாளம் : ஆதி*

### பல்லவி

நீர்வேலிப் பதியிலே நெஞ்சம் கவர்ந்த கள்வன்
சீர்மேவும் வரந்தரும் செல்லக் கதிர்காமன்

### அனுபல்லவி

பார்போற்றிடும் ஷண்முகன் பார்த்திடுவான் என்முகம்
கூர்வே லெடுத்தேந்தும் குமரன் ஆறுமுகன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சரணம்

கந்தன் கதிர்காமனிடம் காந்தம் இருக்குதடி
எந்தன் மனம்மயங்கி இதயம் இழுக்குதடி
வந்தெனைப் பாரானோ வரங்களும் தாரானோ?
விந்தை மயிலில் வந்தே வினைகளைத் தீரானோ?

## தீரா ஓங்கார போதா!

*ராகம் : பாகேஶ்ரீ* *தாளம் : ஆதி*

### பல்லவி

தீரா ஓங்கார போதா சூராதி சூரா வீரா
தாராயோ நின்பதத் தாமரையே கதிர்காமா

### அனுபல்லவி

ஆரா அமுதனைய ஆறுமுகா தயாபரா
கூராயுதமாம் ஞான வேலாயுதா கதிர்காமா

### சரணம்

வேதாகமங்கள் போற்றும் கீதானந்தக் குமரா
பாதார விந்தமலர் பரிந்தருளே நீதா
ஆதார ஞானமூலா ஆனந்த வள்ளிலோலா
நாவாரத் தமிழ்பாட நாடினேன் நீர்வைவாசா.

## நீர்வை வாசன் நிமலியின் புதல்வன்

*ராகம் : ஹமீர் கல்யாணி* *தாளம் : ஆதி*

### பல்லவி

நீர்வை வாசனை நிமலியின் புதல்வனை
ஆர்வமுடன் பாடினேன் - அருள்பெறவே

### அனுபல்லவி

சீர்மேவு தமிழ்மாந்தும் செல்லக் கதிர்காமன்
தார்மேவு தண்டமிழை மார்பினில் புனைபவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரணம்

செந்தமிழ்ப் புலவரின் செழுந்நாவில் உறைபவன்
கந்தனாம் குகன் செல்லக் கதிர்காமன் உமைபாலன்
பைந்தமிழ் அவ்வைக்குப் பழநாவல் தந்தவன்
சுந்தரச் செந்தமிழ் சுவையறிந் துண்டவன்

# சுவையறிந்துண்டு தமிழ் அருணகிரிப் புகழில் மயங்கியவன்

*ராகம் : பிம்பிளாஸ்* *தாளம் : ஆதி*

## பல்லவி

சுவையறிந் துண்டுதமிழ் அருணகிரிப் புகழின்
இசையிலே மயங்கிய முருகனடி - இனிக்கும்

## அனுபல்லவி

நவநவ சந்தமொடு நயம்பொலி புகழினில்
தவமெனும் தமிழதைச் சரவணனும் மாந்தி

## சரணம்

வெல்லமென இனிக்கும் வண்டமிழ் திருப்புகழ்
கல்லும் கனிந்துருகும் கந்தனின் திருப்புகழ்
செல்லக் கதிர்காமன் சேவடிசூட்டும் தமிழ்
நெல்லுக் கழனிசூழும் நீர்வேலிக் கதிர்காமன்..

# நீர்வேலிக் கதிர்காமன் நீழல் துதிமனமே

*ரகாம் : காபி* *தாளம் : ஆதி*

## பல்லவி

நீர்வேலிக் கதிர்காமன் நீழல் துதிமனமே
பார்போற்றும் சரவண பவனெனும் குருபரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அனுபல்லவி

கூர்வே லெடுத்தேந்திக் கொடியரைக் கொன்றதீரன்
பார்மீதில் கடம்பணி மயிலவன் சுகுமாரன்

### சரணம்

வள்ளிதேவ யானைசூழ வடிவேலும் ஏந்தியே
புள்ளிமயில் மீதில் புண்ணியன் வீற்றிருப்பான்
அள்ளி அள்ளி அருளை அனைவருக்கும் கொடுப்பான்
தெள்ளுதமிழ் மாந்தும் தீன தயாபரன்.

## தீனதயாபரன் மோனமயில் அழகன்

*ராகம் : செஞ்சுருட்டி* *தாளம் : ஆதி*

### பல்லவி

தீன தயாபரன் மோனமயில் அழகன்
ஞானச் செல்லக் கதிர்காமனைப் பணிநெஞ்சே

### அனுபல்லவி

வானவர் தொழுதேத்தும் வரதனாம் ஷண்முகன்
கூனல் பிறையணியம் கூத்தனின் அருஞ்சுதன்

### சரணம்

தாமரைப் பதமலர் தாரணி தனில்கூடு
மாமயில் வாஹனன் மகிழ்ந்தருள்வான் பாடு
நாம மகிமைபெறு நீர்வேலித் தலம்நாடு
கோமள வள்ளிகாந்தன் குஞ்சரி நாதனைத்தேடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குஞ்சரிநாதனைத்தேடி நெஞ்சம் மிகழ்ந்தேன் நானடி

*ராகம் : ஸிந்துபைரவி* *தாளம் : ஆதி*

## பல்லவி

குஞ்சரி நாதனைத்தேடி நெஞ்சம் மகிழ்ந்தேன் நானடி
அஞ்சுகம் கொஞ்சுதலமாம் அழகுறு நீர்வையிலே

## அனுபல்லவி

செஞ்சதங்கை கொஞ்சிடவே செல்லக்கதிர்காமன் வந்தான்
அஞ்சலஞ்ச லென்றருளை அள்ளிஅள்ளியே தந்தான்

## சரணம்

செந்தமிழுக் குருகுபவன் செல்லக் கதிர்காமனவன்
பைந்தமிழின் பாட்டிசைக்கப் பறந்தோடி வந்தான் - குகன்
விந்தை மயிலைமறந்து வேலயில் தனைமறந்து
சிந்தை குளிர்ந்திடத் தமிழ் கந்தனவன் மாந்திநின்றான்

# கந்தனவன் மாந்திநின்ற செந்தமிழ்

*ராகம் : பெஹாக்* *தாளம் : ஆதி*

## பல்லவி

கந்தனவன் மாந்திநின்ற செந்தமிழின் பாடலெல்லாம்
சிந்தை யுருக்கியே செல்லக்கதிர்காமன் பதம்சேர்க்கும்

## அனுபல்லவி

கந்தமிகு சோலைமலி கவின்நீர்வையிலே மேவும்
சுந்தரனாம் சேந்தனவன் வந்தமர்ந் தருள்புரியும்.

## சரணம்

வேலும் மயிலும் என்றும் வேண்டிய துணை வரும்
மாலின் மருகனவன் மலரடி தஞ்சம் தரும்
சேலும் கயல்புரளும் செழுங்கழனிகள் ஓங்கும்
பாலின் வளம்கொழிக்கும் பசும்நகர் நீர்வேலிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பசும்நகர் நீர்வேலிப் பழனிக் கதிர்காமன்

*ராகம் : ஹம்ஸாநந்தி* *தாளம் : ஆதி*

### பல்லவி

பசும்நகர் நீர்வேலிப் பழனிக் கதிர்காமன்
வசம்உனை அர்ப்பணிப்பாய் வாழ்வு மிகுந்துவரும்

### அனுபல்லவி

விசும்பு மாரிபொழியும் விளங்கி வளம்கொழிக்கும்
சுரும்பினங்கள் பாடும் சோலை மணம்கமழும்

### சரணம்

தஞ்சம் அடைந்தவரைத் தரணிதனில் காப்பான்
அஞ்சல்என அபயம் ஆறுமுகன் தருவான்
செஞ்சதங்கை கொஞ்ச செல்லக் கதிர்காமன்
கஞ்ச மலரடிகள் காசினியில் அருள்வான்

## காசினியில் அருள் செல்லக் கதிர்காமனே கதி

*ராகம் : கரஹரப்ரிய* *தாளம் : ஆதி*

### பல்லவி

காசினியில் அருள் செல்லக் கதிர்காமனைத் துதி
ஆசிஅருள் நல்கிஅவன் அமருவான் நீர்வைப்பதி

### அனுபல்லவி

நேசமுடன் நிதம்விசு வாசமுடனே துதி
பாசமுடன் பைந்தமிழில் பாடஅருள் கிருபாநிதி

### சரணம்

கானக் குறவள்ளி காந்தன் யானைதன் அணங்கு வேந்தன்
மோனக் கலாஜோதிச் சாந்தன் மோகனவேல் ஏந்தும் சேந்தன்
ஞானக் கதிர்காமச் செல்வன் ஞானியர் தொழும் முதல்வன்
கானவாரிதிக் குமரன் கன்னல் தமிழ்க் கவிப் புலவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்னல் தமிழ்க் கவிப்புலவன் கந்தன்

*ராகம் : கேதாரகௌளை* *தாளம் : ஆதி*

## பல்லவி

கன்னல் தமிழ்க் கவிப்புலவன் கந்தனவன் செந்தமிழன்
வன்னச் செல்லக் கதிர்காமன் வந்தருள்வான் தமிழ்பாடு

## அனுபல்லவி

முன்னம் தமிழ் மாந்திடவே மூதாட்டியாம் அவ்வை தமிழ்
சொன்னயம் பொருள் நயத்தில் சொக்கிக் கனிதந்த வேலன்

## சரணம்

கீரனவன் ஆற்றுப்படை பாடிடவே ஓடிவந்தே
கிண்கிணி ஒலிக்க நடம் பண்ணிய முருகனவன்
ஆரத்தமிழ் மலர்மாலை அணிசெல்லக் கதிர்காமன்
ஆனந்தமான தமிழ்க் கானந்தவழ் நீர்வையிலே.

# கானந்தவழ் நீர்வையின் ஆனந்தன்

*ராகம் : ஹிந்தோளம்* *தாளம் : ஆதி*

## பல்லவி

கானந்தமிழ் நீர்வையின் ஆனந்தன் - தமிழ்
மோனந்தவழும் நீர்வை மோஹனச் செல்லக்குமரன்

## அனுபல்லவி

ஞானந்திகழும் அயில் நற்கரத்துக் கதிர்காமன்
தேனுந்தினை மாவுண்ட வேடன் வள்ளிகாந்தன்.

## சரணம்

தத்துவப் பொருள் சொன்ன முத்துக்குமாரன் குகன்
அத்துவிதங் கடந்த ஆறுமுகன் பரன்
சத்துசித் தானந்தச் சத்தியன் சிவசுந்தரன்
பத்தர் தொழுதேத்தும் பாலசுப்ர மண்யன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலசுப்பிரமணியனின் பாதாரவிந்த மலர்

*ராகம் : தோடி* *தாளம் : ஆதி*

### பல்லவி

பாலசுப்ர மண்யனின் பாதாரவிந்த மலர்
ஞாலமதில் கதிதருமே நீர்வைவளர்

### அனுபல்லவி

நீலமயில் வாஹனனை நீள்கதிர் வேலாயுதனை
சாலப் பணிந்துபோற்றிச் சந்ததம் துதிப்பவர்க்கு

### சரணம்

செல்லக் கதிர்காமன் சேவடி போற்றிப்பாடு
நல்லதெல்லாம் அருள்வான் நானிலத்தில் கண்கூடு
அல்லல் அகற்றிடுவான் ஆறுமுகன் பதம்நாடு
வல்லவினை தீர்க்கும் வடிவேலுக் குண்டோஈடு

## வடிவேலுக்குண்டோ ஈடு

*ராகம் : காமாஸ்* *தாளம் : ஆதி*

### பல்லவி

வடிவேலுக் குண்டோ ஈடு? நீர்வை
கடிகமழ் மலர்ச்செல்லக் கதிர்காமனையே கூடு

### அனுபல்லவி

மிடியாவும் தீர்த்திடுவான் மிளிர்தோகை மயிலழகன்
அடியார்கள் வினைதீர அருளை அள்ளித் தருவான்

### சரணம்

சரணடைந் திடுவோரை அரவணைப்பான் ஐயன்
பிரணவப் பொருள்சொன்ன பரமகுரு மெய்யன்
கரதல வேலேந்திக் காத்திடும் முருகையன்
சரவண பவனெனும் ஷண்முகன் குமரையன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஷண்முக குமரையன்

*ராகம் : அமிவ தவவ கஷிணி* *தாளம் : ஆதி*

### பல்லவி

ஷண்முக குமரையன் கண்மணி முருகையன்
என்முகம் பார்த்தருள்வான் - கதிர்காமன்

### அனுபல்லவி

பண்முறையால் அவனைப் பைந்தமிழில் பாட
வண்ணமயில் மீதில் வள்ளி குஞ்சரியோடு

### சரணம்

மனம்வாக்கு காய முக்கரண சுத்தியுடன்
தினம்துதிக்க அருள்வான் தீன தயாபரன்
வனம்தனில் குறமகள் வள்ளிக்கருள் தந்தவன்
புனம்மலி நீர்வேலிச் செல்லக் கதிர்காமன்.

## செல்லக் கதிர்காமனைச் சிந்தையிலே வைத்தேன்

*ராகம் : கானடா* *தாளம் : ஆதி*

### பல்லவி

செல்லக் கதிர்காமனைச் சிந்தையிலே வைத்தே நானும்
அல்லும் பகலும் எண்ணி அநவரதம் தொழுதேன்

### அனுபல்லவி

கல்லும் கசிந்துருக கனிந்துருகி னேனடி
வெல்லும் வேலேந்தி அவன் விரைந்தென்னிடம் வாரானோ

### சரணம்

நெக்குநெக்காய் உருகி நினைந்து கந்தன்பாதம்
தக்க துணையாய்நம்பித் தவிதவித் தேனடி
திக்கு எவருமில்லை திருநீர்வை வேலாஎன்றேன்
அக்குருபரன் வந்தே அருள் தருவானோடி?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்தருவான் ஓடி அழகுமயிலில் வந்தே!

*ராகம் : மாண்டு* *தாளம் : ஆதி*

### பல்லவி

அருள்தருவான் ஓடி அழகு மயிலில்வந்தே
திருநீர்வை வாழும் செல்லக்கதிர்காமனும் விரைந்தே

### அனுபல்லவி

பொருளான பிரணவம் போதித்த குருநாதன்
இருளான வினையகற்றி இடும்பை களைவான்கந்தன்

### சரணம்

பக்தருக் குருகிடும் பாலசுப்ர மண்யன்
முத்துக் குமாரன் அவன் முத்தமிழ்ப் பித்தன்குகன்
வித்தகத் தமிழ்ப்புலவன் விளங்கும் கழனிசூழும்
மத்தொலிக்கும் நீர்வை மங்கள நாயகன்

# மங்கள நாயகன்

*ராகம் : சுருட்டி* *தாளம் : ஆதி*

### பல்லவி

மங்கள நாயகருக்கு ஜெயமங்களம் - நீர்வை
மன்னு செல்லக் கதிர்காமர்க்கு சுபமங்களம்

### அனுபல்லவி

துங்க முகத்தருக்கும் தெய்வமுத்துக் குமாரர்க்கும்
மங்கைவள்ளி குஞ்சரிக்கும் மயில்அயில் சேவலுக்கும்


### சரணம்

செல்லக் கதிர்காமனவன் சேவடி சேவிப்போர்க்கும்
அல்லும்பகல் பூஜைசெய்யும் அந்தணப் பூசுரருக்கும்
சொல்லுருக மனமுருகச் சேந்தன்புகழ் பாடுவோர்க்கும்
நல்லநீர் வேலிப்பதிக்கும் நானிலத்தோர்க்கும் மங்களம்.

*சுபம்!*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முருகியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெற்றி அருளும் வேல்

**தொகுப்பு: நீர்வை மணி**

## 1. வேல் – பெயர்க்காரணம்:

வேலுக்கு அப்படி என்ன சிறப்பு-ன்னு கேக்குறீங்களா?
வெல் ஸ்ரீ வேல்!
'வெல்' என்ற வினைச்சொல்லே நீண்டு 'வேல்' என்ற பெயர்ச்சொல் ஆகிறது! ஆகவே, வேல் ஸ்ரீ வெற்றி!

## 2. வேல் – தமிழ்த் தொன்மம்:

ஆயிரம் ஆயுதங்கள் இருப்பினும், தமிழ் மன்னர்களின் தனித்த பெருமிதம் ஸ்ரீ வேல்!
ஆண்டாளே, வென்று பகை கெடுக்கும் நின் கையில் "வேல்" போற்றி-ன்னு தான் மாயோனாகிய கண்ணனைப் பாடுறா!
வேலும் சங்கும் சங்கத் தமிழ் மரபு! திருமங்கை ஆழ்வார் கையில் இப்பவும் வேல் உண்டு!

சங்க காலத் தமிழ் மண்ணில், வேல் வழிபாடே மிகுந்து இருந்தது! பின்னாளில் தான் உருவமும், ஆறு முகங்களும், பன்னிரு கரங்களும்!
ஆகமம், அது இது-ன்னு நுழைத்த பின்பே, ஒரு சாராரின் தலையீட்டால், மற்ற வழிபாடுகள் மெல்ல மெல்லப் புகுந்தன!

சிலப்பதிகாரத்தில், வேலுக்கு எனத் தனிக் கோட்டமே இருக்கும்! இந்த வேல் வழிபாடு நாளடைவில் நின்று விட்டது!
வேல் வழிபாடு-ன்னா நாகரிகம் இல்லாதவர்கள் கும்புடுவது, விக்ரஹாதி மந்திர வழிபாடே நாகரிகம் என்று ஆகி விட்டது:

பல தொன்மையான கோயில்களில் முருகன் சிலையே இருக்காது! வெறும் வேல் வழிபாடு தான்!

- ❖ பழமுதிர்சோலை, திருச்செங்கோடு,
- ❖ ஈழத்தில் செல்வச்சந்நிதி,
- ❖ மலேசியாவில் பத்துமலை,
- ❖ பல கிராம ஆலயங்கள் எல்லாம் வேல் வழிபாடு தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3. வேலின் அமைப்பு:

வேல் எப்படி இருக்கும்?
அட, இதைச் சொல்லணுமா என்ன? வேலைப் பார்க்காத தமிழரும் உளரோ?
ஆனா, வேலின் அமைப்பு பற்றி இலக்கியங்கள் என்ன சொல்கின்றன?
பொதுவாக, வேல், எ.்.கினால் செய்யப்படும் போர்க் கருவி!
எ.்.கு ஒரு கலப்பு உலோகம்! இரும்பு + கரிமம் குறிப்பிட்ட அளவில் கலந்து, உலைக்களத்தில் வடிக்கப்படும் கருவி!

மன்னர்களின் வேல் எ.்.கு என்றால், சில வேடர்களின் வேல் கல்லால் செய்யப்பட்டு, நெடுமரத்தில் பொருத்தப்பட்டும் இருக்கும்!
ஆயர்களும், ஆநிரைகளைக் காக்க, வெட்சி.்.கரந்தைப் பூச்சூடி, கையில் வேல் வைத்து இருப்பார்கள்! - "கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்"-ன்னு ஆண்டாள் பாடுவதையும் நோக்கவும்!

ஆலயத்தில் அழகுக்காகச் சார்த்தப்படும் தங்க வேல், வெள்ளி வேல், திருச்செந்தூர் வைரவேல்- இதெல்லாம் போர்க் கருவி அமைப்பில் வாரா!
தமிழ்த் திருமகனாம், முருகன் திருக்கை வேல் ஸ்ரீ எ.்.கு வேலே!

### 4. வேலின் தோற்றம்!

வேலின் முகம் ஸ்ரீ சுடர் இலை போல இருக்காம்!
வேலின் மெய் ஸ்ரீ நீண்ட நெடு வேலாம்!
சூர் மருங்கு அறுத்த சுடர் இலை நெடு வேல்
சினம்மிகு முருகன் தண் பரங் குன்றத்து
அந்துவன் பாடிய சந்து கதெழு நெடுவரை - (அகநானூறு 59 - மருதன் இளநாகனார்)
எறிந்தால், காற்றைக் கிழித்து வேகமாகச் செல்லக்கூடிய பளுவில் தான் வேல் செய்யப்படும்!

- ❖ வேலின் தண்டு இலகுவாகவும், தண்டின் உட்புறம் உள்ளீடற்று (hollow) ஆக இருக்கும்!
- ❖ வேலின் முகமோ, பளு + கூர்மை உடையதாக இருக்கும்!

வேல் எறிந்தால், திரும்பித் தானாக வராது! அதெல்லாம் சினிமாவில் தான்!
ஆழி (எ) சக்கரம், திரும்பி வரும்! ஆஸ்திரேலிய பழங்குடி இனத்தவரான Aborigines பயன்படுத்திய Boomerang போலே!
சங்கத் தமிழில், முல்லை நிலக் காட்டுக் குடிகளின் ஆழி பற்றி இன்னொரு நாள் பார்ப்போம்!

### 5. வேலும் ஈட்டியும் ஒன்றா?

வேலும் ஈட்டியும் வேறு வேறு ஆயுதங்கள்!
வேலின் முகம் ஸ்ரீ அகன்று விரிந்து இருக்கும்! ஈட்டியின் முகம் அகலாது குறுகி இருக்கும்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலின் கீழ் நுனி ஸ்ரீ வட்டமாக முடியும்! ஈட்டியோ நேர்க்கோட்டில் முடியும்!
வேல் ஸ்ரீ பெருமை மிக்கது! மன்னர்களும், படைத் தலைவர்களுமே பெரும்பாலும் ஏந்துவார்கள்!
ஈட்டி ஸ்ரீ அனைத்து போர் வீரர்களிடமும் உண்டு!

வேல் எறிவதும், சிறந்த பகைவர்களை நோக்கியே! எல்லார் மேலேயும் வேல் எறிந்து விடுவதில்லை!
கான முயல் எய்த அம்பினில் - யானை
பிழைத்த வேல் ஏந்தல் இனிது என்ற குறளே இதற்குச் சான்று! முயலுக்கு அம்பு, யானைக்கு வேல்!

## 6. வேலின் சிறப்புப் பெயர்கள்:

கூர் வேல், நெடு வேல், சுடர் வேல், வீர வேல், வெற்றி வேல்...ன்னு வேலுக்குத் தான் எத்தனை எத்தனை அடைமொழிகள்!

வீர வேல், தாரை வேல், விண்ணோர் சிறை மீட்ட
தீர வேல், செவ்வேள் திருக் கை வேல், - வாரி
குளித்த வேல், கொற்ற வேல், சூர் மார்பும் குன்றும்
துளைத்த வேல் உண்டே துணை- இது திருமுருகாற்றுப்படையை ஒட்டி எழுந்த பின்னாளைய வெண்பா!

## வேல் வழிபாடு:

சங்க காலத்தில் வேல் வழிபாடு எப்படி இருந்தது?
வேலன் வெறியாட்டு, வெறி அயர்தல்-ன்னு சொல்லுவாய்ங்க!
இதில்...."வேல்" ஒரு முக்கியமான பூசைப் பொருள்!

வெண்மணல் பரப்பி, செந்நெல் தூவி,
பந்தல் இட்டு, பூ பல பெய்து
பசுந்தழை, காந்தள், பூக்குலை கட்டி -ன்னு அலங்கரித்து (அணி செய்து), வேலை மையமாக நட்டு வழிபடுதல் வழக்கம்!

பொய்யா மரபின் ஊர்முது வேலன்
கழங்கு மெய்ப் படுத்துக் கன்னம் தூக்கி
முருகு என மொழியும் ஆயின்
கெழுதகை கொல்? இவள் அணங்கி யோற்கே (ஐங்குறுநூறு, கபிலர்)

❖ அதாச்சும் தலைவியின் காதல் நோய் இன்னதென்று அறியாத தாய், தலைவியின் மேல் ஏதோ பித்து.'.சூர் இறங்கி விட்டதாக நினைத்து, அதைப் போக்க முருகனுக்கு எடுக்கும் பூசை! இதை ஒரு ஆண் (வேலன்) நிகழ்த்துவான்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ (அல்லது) தலைவியே, தன் காதலனைச் சேர முடியாது, அவன் ஒதுக்கியதால் அவனையே எண்ணியெண்ணி அன்பு மிகுந்து போய், முருகனை முன்னிட்டு ஆடிய வெறிக் கூத்து!
இதை ஆண்கள்-பெண்கள், இருவருமே வேல் பிடித்து ஆடின செய்திகள், சங்கத் தமிழில் உள்ளன!

❖ ஆண் ஆடும் போது ஸ்ரீ பூசை/குறி! கிடா வெட்டிப் பலி குடுத்து, அதன் குருதியை, அரிசியொடு கலந்து தூவுதல்

❖ பேதுற்ற பெண் ஆடும் போது ஸ்ரீ காதல் வலி! வெறியில் முருகனையே திட்டிப் பூக்களைத் தூவுவாள்!
தொல்காப்பியரும் இதற்கு ஒரு துறை ஒதுக்கி உள்ளார்! முருகனுக்கு உரிய காந்தள் பூச்சூடி ஆடுவது!
வெறி அறி சிறப்பின் வெவ் வாய் வேலன்
வெறியாட்டு அயர்ந்த காந்தளும் - (தொல்காப்பியம், பொருளதிகாரம், களவியல்)

காதல் வலி மிகுந்து போய் பெண்கள் ஆடிய வேலன் வெறியாட்டு, மிகவும் மனத்தை வலிக்க வைப்பவை!
ஒரு அழகிய மயில் (மஞ்ஞை), வெறியில் ஆடினா எப்படி இருக்கும்? ஆடி ஆடியே, அழுது அழுது, உள்ளமும் உடலும் தேய்ந்து போனாள்!

கடியுண் கடவுட்கு இட்ட செழுங்குரல்
அறியாதுண்ட மஞ்ஞை ஆடு மகள்
வெறியுறு வனப்பின் வெய்துற்று நடுங்கு
சூர் மலை நாடன் கேண்மை
நீர்மலி கண்ணொடு நினைப்பா கின்றே - (குறுந்தொகை 105, நக்கீரர்)

ஒரு கட்டத்தில், காதல் வலியால், முருகனையே "மடையா"-ன்னு திட்டும் தலைவியின் பெருத்த ஆற்றாமையைக் காணலாம்!

வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்
கடவுள் ஆயினும் ஆக
மடவை மன்ற வாழிய முருகே! - (நற்றிணை 34)

"காதலன் திடீரென்று என்னை ஒதுக்கும் போக்கிலே துடிச்சிப் போய் நான் வாழுறேன்! இது அறியாமல், வேலன் வெறியாட்டை என் தாய் நடத்துறா! உனக்காவது தெரிய வேணாமா முருகவேளே? இந்தப் பூசைக்கு நீயுமா உடந்தை?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ கடவுளே ஆனாலும் ஆகுக! அது பற்றிக் கவலையில்லை! மடவை முருகா (மடப்பயலே முருகா)...நீ நல்லா இருடா! ஸ்ரீ மடவை மன்ற வாழிய முருகே!!" -ன்னு...இவள்....முருகனிடம் திட்டியும் + கெஞ்சியும் + கண்ணீரால் முருகனைக் குளிப்பாட்டும் காட்சி....

இதை நினைக்கும் போதெல்லாம் என்னையும் அறியாமல், கண்ணில் தண்ணி தளும்பி நிக்கும்! இப்படி, பண்டைத் தமிழ்ச் சமூகம், "வேலை" முன்னிறுத்தி, எப்படித் தன் மரபுகளை ஒத்து வாழ்ந்தது என்று அறிந்தோம்! இன்றும், தமிழ்க் குடியினர்.'.கிராமத்தவர்கள், இந்த வேல் வழிபாட்டையே அதிகம் போற்றுகிறார்கள்!

## சிலப்பதிகாரத்தில் வேல்:

பத்துப்பாட்டு நூலான திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் வேலைப் பற்றிச் சிறிதளவே சொன்னாலும், அதை ஈடுகட்டவோ என்னவோ.... சிலம்பில், இளங்கோவடிகள், வேலின் பெருமையை மிக அழகாக, குன்றக் குரவையில் விவரிப்பார்!

வேல் கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ!
சூர்முதல் தடிந்த சுடர் இலை நெடு வேல்!
-ன்னு முருக பக்தரான நக்கீரரே, இரண்டு அடிகள் மட்டுமே பாட...

இரண்டே அடிகளா? இளங்கோ அடிகளா?
என்று வேல் விருத்தத்தை, அன்றே பாடினார் சமணச் செல்வரான இளங்கோ! இளங்கோவின் பண்பட்ட உள்ளம் தான் என்னே!!

சீர்கெழு செந்திலும், செங்கோடும், வெண்குன்றும்,
ஏரகமும், நீங்கா இறைவன் கை "வேல்" அன்றே!
என்னு தொடங்கும் இளங்கோ, வரிசையாக, "வேல் வேல்"-ன்னு ஒரு வேல் விருத்தத்தை, நம்ம அருணகிரிக்கும் முன்பே பாடிவிட்டுச் செல்கிறார்!

சூர் மா தடிந்த சுடர் இலைய வெள் வேலே!
குருகு பெயர்க் குன்றம் கொன்ற நெடு வேலே!....

இணை இன்றி, தான் உடையான் - ஏந்திய வேல் அன்றே!
திரு முலைப் பால் உண்டான் - திருக் கை வேல் அன்றே!
-ன்னு சிலப்பதிகார வேல் வருணனையில், இசையும் கலந்து, 'பாட்டு மடை'யாகப் பெருகி வரும்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேல் பற்றிய பக்தி–இலக்கிய நூல்கள்:

**பின்னாளில், வேல் பற்றிய பல பக்தி–இலக்கிய நூல்கள் வந்துள்ளன!**

❖ இதற்கு முக்கிய காரணம் ஸ்ரீ அருணகிரி!தொலைந்து போன வேல் வழிபாடு, தமிழ் வழி வழிபாட்டை மீண்டும் முன்னிறுத்த, அருணகிரி செய்த முயற்சிகள் சொல்லில் அடங்கா!

ஆலயங்களில், வடமொழி அதிகம் புழங்கத் துவங்கி விட்ட காலத்தில், வடமொழியைப் பகைத்துக் கொள்ள விரும்பாது, அதனொடு கூடவே சென்று, சிறுகச் சிறுகத் தமிழை நுழைக்க, அவர் செய்த முயற்சிகள் பலப்பல! இதற்கு, அவருக்கு முக்கிய ஊக்க சக்தி ஸ்ரீ இன்னொரு தமிழ்த் தெய்வமான திருமாலின் ஆலயங்களில், சில நூற்றாண்டுக்கு முன்பு தான், தமிழ் பரவலாகத் தழைக்கத் தொடங்கியிருந்த புரட்சியைக் கண்டார்!

வேதங்களுக்கு நிகராக ஆழ்வார் அருளிச் செயல் கருவறைகளில் ஓதுதல்!உற்சவங்களில் வேதங்களைப் பின்னுக்குத் தள்ளி, ஆழ்வார்களின் தமிழை முன்னே ஓதிச் செல்ல.... இறைவனே தமிழின் பின்னால் வரும் காட்சிகளைக் கண்ட அருணகிரி, அதிலே மனம் பறிகொடுத்து, திருமால் "வண்டமிழ் பயில்வார் பின்னே திரிகின்றவன்"-ன்னு பாடினார்! இதே நிலை முருகன் ஆலயங்களிலும் வர வேண்டி, அவர் செய்த ஆரம்ப வேலைகள் பலப்பல!

**அதில் ஒன்று தான், வேல் வழிபாடு!**

❖ வேல் வகுப்பு

❖ வேல் விருத்தம்

ஸ்ரீ இவை வேல் வழிபாட்டை முன்னிறுத்த அருணகிரியார் செய்த பனுவல்கள்!

தனித்து வழி நடக்கும் என
திடத்தும் ஒரு வலத்தும் இரு
புறத்தும் அருகு அடுத்து இரவு
பகல் துணை அதாகும்

திருத்தணியில் உதித்தருளும்
ஒருத்தன்மலை விருத்தன் என
உளத்தில் உறை கருத்தன் மயில்
நடத்து குகன் வேலே !! (- வேல் வகுப்பு, அருணகிரிநாதர்)

அந்த வழியில் பின்னர் பாம்பன் சுவாமிகளும், வள்ளிமலை சுவாமிகளும், "வேல் மாறல்", "வேற் பதிகம்" போன்ற பனுவல்களை, வேலின் மீது செய்துள்ளனர்! பின்னால் வந்த பல கவிஞர்களும், வேலைப் போற்றிப் பாடியுள்ளார்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதியாரின் வேலன் பாட்டு, அதில் மிகவும் பிரபலம்!
வில்லினை ஒத்த புருவம் வளைத்தனை வேலவா!-அங்கோர்
வெற்பு நொறுங்கிப் பொடிப்பொடியானது, வேலவா!!

## சிக்கல் சிங்காரவேலன் வேல் வாங்கும் காட்சி:

முருகன் அன்னையிடம் வேல் வாங்கும் காட்சியை, சிக்கல் சிங்காரவேலர் சன்னிதியில், ஒவ்வொரு ஆண்டும் நடித்துக் காட்டுவது வழக்கம்! அப்போது சிங்காரவேலர் திருமேனி, வேலின் கொதியால் வியர்க்கிறது என்று சொல்வாரும் உளர்!

முருகன் திருமேனியைத் துடைத்து எடுப்பதும் வழக்கம்! எந்தத் திருமுழுக்கும் (அபிஷேகம்) இல்லாமலேயே, ஒத்தி எடுக்கும் துணிகள், ஈரமாய் நனைவதைக் காணலாம் என்று கூறுவர்!

## முருகன் வேறு, வேல் வேறு அல்ல!

வேலுக்கு ஸ்ரீ உடம்பிடித் தெய்வம்-ன்னே பேரு! ஸ்ரீ உடன் பிடித் தெய்வம்! முருகனைப் போலவே வேலுக்கும் ஆறு முகம் உண்டு! ஆறு படைகள் உண்டு!பார்த்து இருக்கீங்களா?

இன்னிக்கு பார்த்தீங்கன்னா....பல படைவீடுகளிலும் முருகன், தன் கையில் வேல் ஏந்தியே இருக்க மாட்டான்! அவன் தோளிலே தனியாக, சார்த்தியே வைத்திருப்பார்கள்! ஏனோ, அதைப் பார்க்கும் போதெல்லாம்....நானே அவன் தோளில் சாய்ந்து கொள்வது போல ஒரு உணர்வு எனக்கு!

என்னவனைப் போலவே, உயரமும் - நெடிதும் - அழகும் - அறிவுமான ஸ்ரீ வேல்! தழுவ இனியது வேல்! அவனைத் தழுவும் போது நழுவினால், போடா-ன்னு அவன் அந்தரங்க வேலைத் தழுவிக் கொள்வதில், இன்னும் சுகம்!:)

வேல் வேறு, முருகன் வேறல்ல!
வேலே ஸ்ரீ முருகன்! முருகனே ஸ்ரீ வேல்!
முந்து முந்து.....முருகவேள் என்னுள் முருகவேலாய் முந்து!!

**வெஞ்சமரில் அஞ்சேல் என "வேல்" தோன்றும்...முருகா என்று ஓதுவார் முன்!**

- ❖ முருகன் தோன்றிய நாள் ஸ்ரீ வைகாசி விசாகம்
- ❖ அறுவரும் ஒருவர் ஆன நாள் ஸ்ரீ கார்த்திகையில் கார்த்திகை
- ❖ அன்னையிடம் வேல் வாங்கிய நாள் ஸ்ரீ தைப்பூசம்
- ❖ அசுரரை அழித்தாட்கொண்ட நாள் ஸ்ரீ ஐப்பசியில் சஷ்டி
- ❖ வள்ளியைத் திருமணம் புரிந்த நாள் ஸ்ரீ பங்குனி உத்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்கந்தன் சிறப்பு

ஜகத்குரு சந்திரசேகரேந்த்ர சரஸ்வதி
சங்கராச்சார்ய மஹாஸ்வாமிகள்

காஞ்சி காமகோடி சர்வக்ஞ பீடம் மஹாஸ்வாமிகள் சித்தி பெற்ற ஜகத்குரு சந்திரசேகரேந்த்ர சரஸ்வதி சங்கராச்சார்ய மஹாபெரியவாளின் ஸ்கந்தன்... சொற்பொழிவுகளின் தொகுப்பு..

## குமார சம்பவம்...

ஜனனத்தை எடுத்துக்கொண்டால், "குமார ஸம்பவம்"என்பதாக முருகன் ஜனனம் எடுத்ததற்கு அலாதிப் பெருமை இருக்கிறது. வால்மீகி ராமாயணத்தில் ராம லக்ஷ்மணர்களுக்கு விச்வாமித்ரர் அந்தக் கதையைச் சொல்லி முடிக்கும்போது "குமார ஸம்பவம்"என்ற வார்த்தையைப் போட்டிருக்கிறார் ஆதி கவியின் அந்த வாக்கை எடுத்துக் கொண்டுதான் மஹாகவி காளிதாஸரும் "குமார சம்பவம்" என்றேதலைப்புக் கொடுத்து மஹாகாவ்யம் எழுதினார்.

## அந்த ஸம்பவத்திலே அதாவது ஜனனத்திலே அப்படி என்ன விசேஷம்?

மற்றவர்கள் பிறந்து, வளர்ந்து, கல்வி கேள்விகளில் தேர்ச்சி பெற்ற அப்புறம் பதவிக்கு வருவார்கள். ஆனால் மஹா பெரிய பதவி - தேவர்களுடைய ஸேனைகளுக்கெல்லாம் அதிபதியாக இருக்கும் பதவி- இந்தக் குமாரர் ஸம்பவிக்க வேண்டுமென்று இவருக்காகவே காத்துக் கொண்டிருந்தது! ஜன்மிக்கிறபோதே தேவர்களின் ஸேநாதிபதி அஸுரர்களிடம் அடி உதை பட்டுச் சொல்லமுடியாத க்'டத்திலிருந்த தேவர்கள் இவர் ஸம்பவித்தால்தான் தங்களுக்கு விடிவு, விமோசனம் என்று காத்துக் கொண்டு, எதிர்பார்த்துக் கொண்டு இருந்த நிலையில் ஏற்பட்டது அவருடைய "ஸம்பவம்", அதாவது தோற்றம். சிவனுக்கு ஸமானமான ஒருத்தர்தான் தங்களை வதைக்க முடியும் என்று சூரபத்மாஸுரன், தாரகாஸுரன் ஆகியவர்கள் அந்த சிவனிடமே வரம் வாங்கி வைத்துக் கொண்டு விட்டார்கள். சிவனுக்கு ஸமானம் வேறே யார்?அவரே தான் அவருக்கு ஸமம். வரம் கொடுத்த அவரே வரம் வாங்கிக் கொண்டவர்களை வதம் பண்ணுவது நியாயமாகாது. அதனால்தான் இப்படி ஸாமர்த்தியமாக வரம் கேட்டு வாங்கிக் கொண்டு, அப்புறம் சத்ருபயம் என்பதே இல்லாமல் அந்த அஸுரர்கள் தேவர்களை ஹிம்ஸித்து வந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலோசித்துப் பார்த்த பிறகு இதற்கு தேவர்கள் வழி கண்டு பிடித்தார்கள்."ஆத்மாவை புத்ர நாமாஸி"என்ற ச்ருதி வாக்கியப்படி ஒருத்தனுக்கு ஸமதையாக இருப்பது அவனுடைய புத்ரன். இவன் வீர்யத்திலே அவன் உண்டாவதால் இரண்டு பேரும் ஒன்று சாஸ்த்ரம். ஆகையால் தங்களையெல்லாம் அஸுரர்களிடமிருந்து ரட்சிப்பதற்காக தங்களுடைய நாயகனாக,ஸேனா நாயகனாகப் பரமேச்வரன் ஒரு புத்ரனை உண்டு பண்ணித் தந்துவிட்டால் வழி பிறந்துவிடும், விமோசனம் கிடைத்து விடும் என்று தேவர்கள் முடிவு பண்ணி, அதற்காகத் தபஸிருந்தார்கள். ஸ்வாமியும் தககூஷிணாமூர்த்தி யாகத் தபஸிருந்த ஸமயம் அது. அவருக்குப் பணிவிடை செய்ய வந்த அம்பாள் பார்வதியும் தபஸிருந்தாள். இப்படி ஒரே தபோமயமான புண்ய background -ல் குமார ஸம்பவம் ஏற்பட்டது. அதுதான் அதன் பெருமை.

குழந்தையாகப் பிறந்தோமே என்பதற்காக ஆறு நாள் - ஆறே நாள்தான் - குமாரஸ்வாமி பால லீலைகள் பண்ணினார். அவருக்கு எல்லாம் ஆறு. முகம் ஆறு. அவர் மந்திரத்தில் அக்'ரம் ஆறு. அவர் பிறந்தது ஆறாம் திதியான "டி. அவருக்குப் பால் கொடுத்தது க்ருத்திகா தேவிகள் என்று ஆறுபேர்.வேடிக்கையாகச் சொல்வதுண்டு - அவர் உத்பவித்த கங்கையும் "ஆறு"என்று!"குமாரர்"என்றே குழந்தை பேர் வைத்துக் கொண்டிருந்தாலும் அவர் குழந்தை விளையாட்டு ஆறே நாள்தான் செய்தார். ஆறு நாளிலியே அபரிமித லீலைகள் பண்ணினார். அப்புறம், உடனேயே, தேவ ஸேநாதிபத்யம் தாங்கி, சூராதி அஸுரர்களை ஸம்ஹாரம் பண்ணி தேவர்களையும், ஸர்வ லோகத்தையுமே ரக்ஷித்து விட்டார். மனு, கினு போட்டு "அப்பாயின்ட் மென்ட்"என்றில்லாமல் ஸகல தேவ ஸமூஹத்திற்கும் ரக்'கனாக, "கம்மான்டர்-இன்-சீ.்.ப்" ஆகப் பெரிய்ய்ய்ய அப்பாயின்ட்மென்ட்டோடேயே அவர் பிறந்ததுதான் குமார ஸம்பவத்தின் விசே'ம்!

## விக்னேஸ்வரரும் ஸ்கந்தரும்..

சிவனுக்கு ஸமானமானவர் சிவஸுதானே என்றால், விக்நேச்வரர் சிவஸுதர்தானே? அப்படியிருக்க, குமாரஸ்வாமி உண்டாகனுமென்று தேவர்கள் தபஸ் பண்ணினார்கள் என்றால் அப்போது விக்நேச்வரர் தோன்றியிருக்க வில்லையா? ஸுப்ரஹ்மண்யருக்கு அப்புறந்தான் அவர் தோன்றினாரா என்றால், இல்லை. இதை "அன்டர்லைன்"பண்ணிக் காட்டத்தான் "ஸ்கந்த பூர்வஜர்" என்று அவருக்குப் பேர் சொல்லி இருக்கிறது. "ஸரி, அவர் அப்போதே இருந்தாரென்றால், அவரிருக்கும் போது இன்னொரு சிவஸுதருக்காக தேவர்கள் தபஸ் செய்வானேன்?ஸுதராயிருந்தும் அவர் அப்பாவுக்கு ஸமானமாயில் லாதவர் என்று அர்த்தமா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியில்லை. அவர் அப்பாவுக்கு ஸமதையானவர்தான். த்ரிபுர ஸம்ஹாரத்தின் போது அப்பாவும் தம்மைப் பூஜை பண்ணின பிறகுதான் கார்யஸித்தி பெறமுடியும் என்று காட்டியிருக்கிறாரே! பின்னே ஏன் இன்னொரு சிவஸுதர் ஸம்பவிக்க வேண்டுமென்று தேவர்கள் நினைத்தார்கள்?சூரபத்மா கேட்டிருந்த வரத்தின் ஒரு நிபந்தனைதான் காரணம். தாங்கள் வரம் கேட்கிற காலத்தில் இருக்கிற எவருமே தங்களை வதம் பண்ண முடியாதபடிதான். அஸுரர்கள் ஸாமர்த்தியமாக நிபந்தனை போடுவார்கள். அப்படித்தான் இவனும் பண்ணினான். தன்னைக் கொல்லக் கூடிய சிவஸத்ருசன் (சிவனுக் கொப்பானவன்) எகுப ஸம்பந்தமில்லாமலே பிறந்தவனாயிருக்கணும் என்று அவன் கண்டிஷன் போட்டிருந்தான். ஸர்வ சக்தரான பிள்ளையார் தன்னை வதம் பண்ண முடியாதபடி னநடியச பண்ணிவிட வேண்டுமென்றே இப்படி ஸாமர்த்யமாகக் கேட்டிருந்தான்!

அவர் பல விதங்களில் பல ஆவிர்பாவங்கள் செய்திருக்கிறார். அதில் நான் சொன்ன ஒன்றின்படி அவர் புருஷஸம்பந்தந்தான் அடியோடு இல்லாமல் அம்பாளுடைய சரீர மஞ்சள் பொடியிலிருந்தே, அவளாலேயே வழித்தெடுக்கப் பட்டு ஸ்ருʼடியானதாகப் பார்த்தோம். புராணாந்தரங்களில் வேறே அவதாரக் கதைகளும் இருக்கின்றன. ஸ்வாமி, அம்பாள் இரண்டு பேரும் கைலாஸத்திலுள்ல சித்ர சாலையில் அலங்காரமாக எழுதியிருந்த ப்ரணவாக்ஷரத்தை ஒரே ஸமயத்தில் பார்த்தார்கள்.அப்போது அவர்களுடைய வீக்ஷணங்கள் (பார்வைகள்) அந்த அககூஷரத்தில் ஒன்று சேர்ந்தன. உடனே அதிலிருந்து விக்நேச்வர ஸ்வரூபம் அவதாரம் பண்ணின்று என்று ஒரு கதை. ஒரு ஸமயம் அம்பாள் பெண் யானை ரூபம் எடுத்துக் கொண்டிருந்தாள்.அப்போது ஸ்வாமியும் ஆண் யானையாக ரூபம் தரித்துக் கொண்டிருந்தார் அந்த யானைகளுக்குப் பிறந்த குட்டியே கணபதி என்று இன்னொரு கதை. ஞானஸம்பந்தர் திருவாரூர் கிட்டேயுள்ள வலிவலம் என்ற க்ஷேத்ரத்தில் பாடிய தேவாரத்தில் இதை சநகநச செய்திருக்கிறார்.

*பிடியதன் உருஉமை கொமிகு கரியது*
*வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்*
*கடிகண பதிவர அருளினன்*

"பிடி"என்றால் பெண் யானை. "களிறு"என்றால் ஆண் யானை. சிவ சக்திகள் இப்படி யானைத் தம்பதியாக வந்ததை அப்பர் ஸ்வாமிகள் ப்ரத்யக்ஷ தர்சனமாகவே பார்த்துப் பாடி வைத்திருக்கிறார்.

*காதன் மடிப்படி யோடுங் களிறு வருவன கண்டேன்*
*கண்டேன் அவர்திருப் பாதம், கண்டறி யாதன கண்டேன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டாஸுரன் மேல் லலிதாம்பாள் படையெடுத்துப் போனபோது, அவன் விக்ன யந்த்ரம் போட்டு அவளுடைய படை முன்னேற முடியாதபடி ஸ்தம்பிக்க வைத்தான்அப்போது அவள் காமேச்வரன் என்ற பெயரில் அவளைப் போலவே தநுர்-பாண-பாச-அங்குசங்களோடு ரூபம் எடுத்துக் கொண்டிருந்த பரமசிவனுடைய முகத்தைப் பார்த்தாள் உடனே கணபதி விர்பவித்தார் என்று இன்னொரு கதை.

இப்படியுள்ள அநேகக் கதைகளில் எல்லாவற்றிலுமே அம்பாள் ஸம்பந்தத்தோடு விக்நேச்வரர் தோன்றியதாகத் தான் இருக்கிறது. ஆகையால் சூரபத்மா போட்ட "கண்டிஷன்" படி அவரைக் கொண்டு அவனை வதைப்பது முடியாத கார்யமாகி விட்டது.

சிவனுக்காக, சூராதி அஸுரர்களுக்கோ விக்நேச்வரர் சக்தியில் குறைந்தவரில்லை யானாலும், அவருடைய அஸுர ஸம்ஹாரம் நடப்பதற்கில்லாமலாயிற்று. அதனால் தான் தேவர்கள் இன்னொரு சிவஸுதனுக்காக ப்ரார்த்திக்க ஸ்வாமியும் அம்பாள் ஸம்பந்தமில்லாமல் தன்னுடைய நேத்ரங்களிலிருந்து வெளியேவிட்ட அக்னி பொறிகளிலிருந்தே குமாரஸ்வாமியை உண்டு பண்ணினார்.

இதையே இன்னொரு விதத்தில் சொன்னால், விக்நேச்வரர் இடம் ஒழித்துக் கொடுத்தால்தான் குமாரஸ்வாமி என்று ஒருத்தர் ஸம்பவிக்கவே முடிந்தது!விக்நேச்வரருக்கே ஸர்வ சக்தியும் இருந்தும், தகப்பனார் அஸுரர்களுக்குக் கொடுத்த வரத்தின் நிபந்தனையைக் காப்பாற்ற வேண்டுமென்றே அவர் அஸுர ஸம்ஹாரத்திற்குப் புறப்படாமலிருந்தார். அவர் அப்படிப் புறப்படாததால் தான் ஸுரஸேனைக்கு நாயகராக குமாரஸ்வாமி ஸம்பவிக்க முடிந்தது!தாம் ஸர்வ சக்தராயிருந்தும், "மூத்தது மோழை, இளையது காளை"என்று பழமொழி ஏற்படும் படியாகத் தாம் ஒதுங்கியிருந்து கொண்டு, குழந்தைத்தம்பியே மஹா அஸுரர்களை ஜயித்து பெரிய கீர்த்தி பெறும்படி- "வெற்றிவேல்,வீரவேல்"என்று "அப்ளாஸ்"வாங்கும்படி - பெருமை சேர்ந்து கொடுத்தார்.

தம்மைத் தாமே பல ரூபங்களில் பிறப்பித்துக் கொள்ளும் சக்தி அவருக்குண்டு. அவர் நினைத்திருந்தால் தகப்பனாருக்குள்ளே ஆவேசித்து அவரிடமிருந்து மட்டும், அம்பாள் ஸம்பந்தமில்லாமல் வேறே ஒரு ரூபத்தில் அவதாரமெடுத்து இருக்கலாம்தாமே தேவ ஸேநாதிபதியாகி அஸுரர்களை வதம் செய்து மஹா கீர்த்தி. பெற்றிருக்காம். அவர் அப்படிச் செய்யாமலிருந்ததாலேயே லோகத்துக்கு ஸுப்ரஹ்மண்யம் என்ற திவ்யமூர்த்தி கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வள்ளி கல்யாண சுந்தரன்

அடுத்தாற்போல் தம்பி ஸ்வாமியுடைய விவாஹம். வள்ளி கல்யாணம் என்று உத்ஸவமாகப் பண்ணும் விவாஹம். கதை, உபந்நியாஸம், ட்ராமா, ஸினிமா, டான்ஸ்-ட்ராமா என்றெல்லாம் அமர்க்களமாகப் பண்ணுகிறதற்கு இடம் கொடுக்கிற விவாஹம். அநேகமாக எல்லாருக்கும் தெரிந்திருக்கும்-விக்நேச்வரர் மதயானையாக வள்ளியைத் துரத்திக் கொண்டு வந்ததால் தான் அவள் ஸுப்ரம்மண்யரிடம் சேர்ந்தாள் என்ற கதை. இந்த இடத்திலே மூத்தது மோழையில்லை, காளைக்கு மேலே, மத்த கஜமே என்று அண்ணா ஸ்வாமி காட்டினார். வள்ளி சேரமாட்டேன் என்கிறாளே என்று தம்பிதான் அப்போது செயலில்லாமல் நின்றார். அப்புறம் தமையனாரைப் பிரார்த்தித்துக் கொண்டால்தான் இடையூறு நீங்கும் என்று மஹாசக்திமானான தேவஸேனாநாயகர் புரிந்து கொண்டார்விக்நேச்வரரை ஸ்மரித்து வேண்டிக் கொண்டார். அவரும் உடனே தம்பிக்கு ஸஹாயம் செய்வதற்காக மத யானையாக வந்து வள்ளியை துரத்தியடித்து, தம்பியை அவள் சேரும்படிப் பண்ணினார். "கைத்தலம் நிறைகணி"என்ற பிள்ளையார் வணக்கத் திருப்புகழில் இதைச் சொல்லித்தான் முடித்திருக்கிறது. அதிலே "சிறு முருகன்"என்று சொல்லியிருக்கிறது. இதற்கும் முந்தி சின்னஞ்சிறு முருகனாக இருந்தபோதுதான் அவர் சூர ஸம்ஹாரமே பண்ணி, பிற்காலத்தில் "ஸேநாநீநாம் அஹம் ஸ்கந்த:" (படைத்தலைவர்களில் நான் முருகன்) என்று கீதையில் கிருஷ்ணர்கூட சொல்லும்படியான கீர்த்தியடைந்தது. அப்படிப்பட்டவர் இப்போது நல்ல கட்டிளம் காளைப் பருவத்திலே ஒரு ஸாதாரண வேடப் பெண்ணை அடைய முடியாமல் செயலற்றுப் போயிருந்தார். அந்த அசக்த நிலையை வைத்துத்தான்- வயஸை வைத்தல்ல - "சிறு முருகன்"என்று அருணகிரிநாதர் போட்டிருக்கிறார். அப்போது அவருக்குக் கார்யஸித்தி ஏற்படச் செய்த "பெரும்" ஆள் - பெருமாள்-விக்நேச்வரர்தான். அதனால்தான் திருப்புகழ்களின் முடிவில் ஸுப்ரம்மண்யருக்கே உரியதாக: வருகிற "பெருமாளே"என்ற வார்த்தையை இந்தத் திருப்புகழில் மட்டும் விக்நேச்வரருக்குச் சூட்டி முடித்திருக்கிறார். தம்பியையே இஷ்ட தெய்வமாகக் கொண்ட அருணகிரிநாதர் அவரைச் "சிறுவராக்கி" அண்ணாவைப் "பெருமாள்" என்று பெருமைப் படுத்துவது விசேஷம்! ஆக, ஸுப்ரமண்ய ஸ்வாமியின் விவாஹத்தில் நேராகவே விக்நேச்வரருக்குப் "பார்ட்" இருக்கிறது. Key role என்றே சொல்லும்படியாக இருக்கிறது.

## முருகன் சம்சாரி மட்டுமல்ல... விநோத சந்நியாசியும்...

ஸ்கந்த சரித்திரத்தில் இது விவாஹம். அந்தச் சரித்திரத்திலே ஸந்நியாஸமும் உண்டு. ஆனால் விசித்ரமாக, ஸுப்ரமண்ய ஸ்வாமி விவாஹத்துக்கு முந்தி ஸந்நியாஸம் வாங்கிக் கொண்டவர்! க்ருஹஸ்தாச்ரமத்துக்கு முந்தி ஸந்நியாஸாச்ரமம்!முதலில் ஸந்நியாஸம், அப்புறம் மஹாசக்திமானாக யுத்தம் செய்து சத்ரு ஸம்ஹாரம், அதற்கும் அப்புறம் அண்ணாவின் அநுக்ரஹ சக்தியைக் கொண்டு கல்யாணம் என்று ஸ்கந்த சரித்ரம் வேடிக்கையாக, புதுமையாகப் போகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் ஸந்நியாஸியான நிலைதான் தண்டாயுதபாணி. "பழம் நீ-பழநிக் கதை தெரியாதவர்கள் இருக்க மாட்டார்கள். வாஸ்தவத்தில் அது தண்டாயுதமில்லை. தண்டம்தான். நாங்கள் வைத்துக் கொண்டிருக்கிற, ஆயுதமாயில்லாத, மூங்கில் கழிதான். தண்டாயுதம் என்று ஆயுதமாக இருக்கப்பட்டது ஸேநா நாயகனின் ஆயுதம். லலிதாம்பாளுடைய ஸேநாநாயகிக்கு தண்டினி என்றே பேர். அப்படிப்பட்ட ஆயுத தண்டத்தை வீசிச் சண்டை போடுவதற்கு முந்தியே மனஸை அடக்கி வைப்பதற்கு அறிகுறியான சாந்தி தண்டத்தைப் பிடித்துக் கொண்டு பழநி மலை உச்சியில் நின்றவர் தண்டபாணி. நமக்கு வேண்டுமானால் மனஸை அடக்குவதுதான் மஹாயுத்தமாயிருப்பதால் இந்த தண்டமும் ஆயுதமாயிருக்கலாம். அவருக்கு அது ஒரு அலங்காரம் தான். நமக்கு remind பீக்-ஆக (ஞாபகமூட்டியாக) அவர் வைத்துக் கொண்டிருப்பதுதான்.

எந்த ஸ்வாமிக்குமில்லாத பரமஞானமான துறவறக்கோலம்!இப்படி அதிபால்யத்தில் மொட்டை அடித்துக் கொண்டு, ஒரு சின்ன கோவணத்தைக் கட்டிக் கொண்டு தண்டமும் கையுமாக வேறே ஸ்வாமி உண்டா?அழகுக்கு ஈடில்லாதவர், சக்தியில் ஈடில்லாதவர், ஸ்தானத்தில் ஈடில்லாமல். தேவ நாயகனாக அவதரித்தவர் ஆறு நாள் பால்ய லீலைக்குள்ளேயே இப்படி ஆண்டி ஆகி, "ஞானபண்டித ஸ்வாமி!" என்று பாடி மனஸ் உருகும்படியான சாந்தி ஸ்வரூபமாக நிற்கிறாரென்றால், அதற்கு யார் காரணம்?

## விக்நேச்வரர்தான்!

இவர் அப்பா-அம்மாவைப் பிரதக்ஷிணம் பண்ணிப் பழத்தை அடித்துக் கொண்டு போனதால்தான் அவர் தோற்றுப் போய் ஆண்டியாகி விட்டார். லோகத்துக்கெல்லாம் பரம சாந்திக்கும் ஞானத்துக்கும் மூர்த்தியாக அவரை இப்படி ஆக்கின "கிரெடிட்" பிள்ளையாருக்குத்தான்! அப்புறம் தாயார்- தகப்பனார் போய் ஸமாதானம் பண்ணினார்கள். இதெல்லாம் ஒரு நாடகந் தானே? கோவணாண்டியும் தடபுடலாக யூனி.ஃபார்ம் போட்டுக் கொண்டு கமான்டர்-இன்-சீ.ஃபாகக் கிளம்பினார். ஆனாலும் தாம் ஆண்டியாயிருந்த அவஸரம் (கோலம்) லோகத்தில் என்றைக்கும் இந்த்ரிய நிக்ரஹத்தையும், ஞானத்தையும், சாந்தத்தையும் "வைப்ரேட்"செய்து கொண்டிருக்கட்டுமென்று கிருபை கூர்ந்து அந்த அவஸரம் என்றைக்கும் பிம்பரூபத்தில் ஜீவகலையோடு இருக்கும்படியாக சார்ஜ் பண்ணிவிட்டுக் கிளம்பினார்.

தேவஸேநா நாயகன் என்ற உச்சமான அப்பாயின்மென்டுடனேயே ஸுப்ரஹ்மண்யர் பிறந்தது அவர் வள்ளி கல்யாண மூர்த்தி என்ற கோலத்தில் தம்பதியாக, நமக்கு ஒரு கருணைத் தாயாரைச் சேர்த்துக் கொண்டே பிரபுத் தகப்பனாராக ஆனதுஞான வைராக்ய ஸ்வாமியாகப் பழநியில் நித்ய ஸாந்நித்யம் கொண்டது ஆகிய மூன்று முக்கியமான ஸம்பவங்களிலும் விக்நேச்வரரின் நெருங்கிய ஸம்பந்தமிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால்தான் அந்தத் தம்பிக்கு இவர் தமையன் என்று தெரிவிக்கவே ஸ்பெ'லாக ஒரு நாமா இருக்கணுமென்று "ஸ்கந்த பூர்வஜன்"என்று ோடச நாமாவளியில் கொடுத்திருக்கிறது. பூர்வஜர் என்றால் முன்னவர், முதலில் தோன்றியவர் - ஆதி. இந்தப் பேரோ பதினாறில் கடைசியாக, அந்தமாக, வருகிறது. ஆதியையும் அந்தத்தையும் சேர்த்து ஸம்பூர்ணத்வத்தைக் காட்டுவதாகத் தோன்றுகிறது.

வள்ளி கதை வருவதற்கு முந்தியே தேவஸேனா கல்யாணமாகி இருந்தது. அவர் லோகத்தில் அவதாரம் பண்ணியதற்கு இரண்டு காரணம். சூரஸம் ஹாரம் ஒன்று. இன்னொன்று, அவருடைய மாமா மஹாவி'ணுவின் இரண்டு பெண்களில் ஒருத்தி தேவராஜன் பெண்ணாகவும், மற்றவள் வேடராஜன் பெண்ணாகவும் வளர்த்து வந்தவர்களை அவர் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்பது.

முதலில் திருச்செந்தூர் தாண்டி ஸமுத்ரத்தில் போய் அஸு"ரஸம்ஹாரம் முடித்தார். அப்புறம் திருப்பரங்குன்றத்தில் தேவஸேனையைக் கல்யாணம் பண்ணிக்கொண்டார். அங்கே அவளோடு இருந்து கொண்டிருக்கும்போது நாரதர் வந்து சித்தூரில் வள்ளி அவரே நினைவாக ப்ரேமையில் உருகிக் கொண்டிருப்பதை சொன்னார். ஆகையால் திருப்பரங்குன்றம் கோவிலில் அவர் வள்ளி-தேவஸேனா ஸமேதராக இல்லாமல், ஒரு பக்கம் தேவஸேனையும், மறுபக்கம் வள்ளிக்குப் பதில் அவளுக்காகத் தூது சொல்ல வந்த நாரதருமாகத்தான் இருக்கிறார். ஸத்குருவானவர் ஜீவாத்மாவிடம் பரமாத்மாவின் க்ருபையை திருப்பி விடுவதற்கு ரூபகமாக நாரதர் வள்ளியிடம் ஸு"ப்ரம்மண்யரைத் திருப்பிவிட்டார். அதனால் சிவனுக்கும் குருவான ஸ்வாமி, நாரத குருவுக்குத் தன்னுடைய ஸந்நிதியிலேயே ஒரு பக்கம் இடம் கொடுத்து வைத்துக் கொண்டிருக்கிறார்.

நாரதர் சொன்னதன் மேல் அவர் புறப்பட்டுப் போய் வேடன், விருத்தன், வேங்கைமரம் எல்லாமாக வே'ம் போட்டு அப்புறம் அண்ணாவின் அருளால் வள்ளியைக் கல்யாணம் பண்ணிக் கொண்டார். அதற்கப்புறம் புக்தி-முக்தி என்கிற இம்மை மறுமைத் தத்வங்கள் இரண்டோடும் சேர்ந்துள்ள தம்முடைய ஸாந்நித்யம் பூலோகத்தில் இருக்க வேண்டும் என்று இரண்டு பத்னிகளோடும் "ஹனிமூன்"மாதிரிக் கொஞ்சநாள் திருத்தணியில் இருந்தார். பிற்பாடு ஸ்கந்தலோகம் போய்விட்டார். அது தான் நிர்கமம். அதற்குப் படி போட்டுக் கொடுத்தது வள்ளி கல்யாணம். அதோடு அவருடைய அவதாரத்தின் இரண்டாவது "பர்ப"ஸு"ம் நிறைவேறி விட்டது. வள்ளி கல்யாணத்திற்குப் படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டுக்கொடுத்தவர் யானையாக வந்து அவளைத் துரத்திய பிள்ளையாரே யாகையால், ஸுப்ரஹ்மண்யர் நம் லோகத்திலிருந்து ஸ்கந்த லோகத்திற்கு "நிர்கமம்" பண்ணவும் அவர்தான் உதவி இருக்கிறார்.

## ஸ்கந்த நாமச் சிறப்பு

"ஸ்கந்தர்" என்றால் "துள்ளிக் கொண்டு வெளிப்பட்டவர்"என்று அர்த்தம். பரமேச்வரனுடைய சக்தி நேத்ர ஜ்யோதிஸ்ஸாக ஒரே துடிப்போடு, லோகா நுக்ரஹம் பண்ண வேண்டுமென்ற துடிப்போடு, துள்ளிக்கொண்டு வெளிப்பட்டே ஸ்கந்தமூர்த்தி உத்பவமானார். அந்த விசேஷத்தால்தான் அவருக்கு ஸுப்ரஹ்மண்யர், கார்த்திகேயர், குமாரர், சரவணபவர் என்றிப்படி அநேக நாமாக்கள் இருந்தபோதிலும் அவரைப் பற்றிய புராணத்திற்கு ஸ்கந்த புராணம், ஸ்காந்தம் என்றே பெயரிருக்கிறது. அவருடைய லோகத்துக்கு ஸ்கந்தலோகம் என்றே பெயர்.அவர் ஸம்பந்தமான விரதத்தை ஸ்கந்த "டி என்றே சொல்கிறோம். அம்பாளோடும் முருகனோடும் இருக்கும் பரமேச்வரமூர்த்திக்கும் ஸோமாஸ்கந்தர் என்றே பேர் இருக்கிறது. "முருகன்"என்று அவருக்குச் சிறப்பாகத் தமிழ்ப் பெயர் கொடுத்திருக்கும் நம் பாஷயிலும் கந்தரநுபூதி, கந்தரலங்காரம், கந்தர் கலிவெண்பா என்றெல்லாம் ஸ்தோத்திரங்கள் இருக்கின்றன. சென்னை பட்டணத்தின் சிறப்பாகக் கந்தக் கோட்டம் இருக்கிறது.

ச்ருதியிலே (வேதத்திலே) ஒன்று வந்துவிட்டதென்றால் அதற்குத் தனிப் பெருமை, தனி கௌரவம் உண்டு. அப்படி இந்த ஸ்கந்த நாமத்திற்கு இருக்கிறது. புராணமான ஸ்காந்தத்தில் வள்ளி என்ற ஜீவனுக்கு நாரதர் குரு ஸ்தானமென்று வருகிறதென்றால், ச்ருதியைச் சேர்ந்த சாந்தோக்ய உபநி'த்தில் அந்த நாரதருக்கு ஸுப்ரஹ்மண்யரின் பூர்வாவதாரமான ஸநத்குமாரர் ஞானோபதேசம் பண்ணியதாக வருகிறது. ஸநத் என்று பிரம்மாவுக்குப் பெயர். ஸ்ரு'டி ஆரம்பத்திலேயே பிரம்மாவின் மானஸீக புத்ரராகப் பிறந்தவர் ஸநத்குமாரர். ஸநக, ஸநந்தன, ஸநாதன, ஸநத்குமாரர் என்ற நால்வரில் முக்யமானவர்.

பிறக்கும்போதே ப்ரஹ்மஞானியாக இருந்த அவர்கள் நிவ்ருத்தி மார்க்கம் என்ற ஸந்நியாஸத்திற்கு ஆதர்ச புரு'ர்கள். காமமே தெரியாத நித்ய பாலகர்களாக இருப்பவர்கள். ப்ரம்ம குமாரரான அந்த ஸநத்குமாரரே தான் சிவக்குமாரரான ஸுப்ரஹ்மண்யராக வந்தாரென்று சாந்தோக்யத்தில் இருக்கிறது. சிவகுமார அவதாரத்தில் அவர் வீராதிவீர ஸேநாதிபதியாகவும், இரட்டைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்னிகளைக் கொண்டவராகவும் இருந்தபோதிலும் பழைய ஸநத்குமார "வாஸனையால்"தான் நடுவிலே கொஞ்ச காலம் பழநியில் கோவணாண்டி ஸந்நியாஸியாக நின்றார் போலிருக்கிறது! இவர் கோவணாண்டி என்றால் ஸநத்குமாரருக்கு அந்தக் கோவணங்கூட கிடையாது. ஏனென்றால் இந்த சிவக்குமாரர் "என்றும் இளையவர்"என்றால் அந்த ஸநத்குமாரரோ இன்னும் இளசாக என்றும் குழந்தையாகவே இருந்தவர். அது இருக்கட்டும். என்ன சொல்ல வந்தேனென்றால், ச்ருதி சிரஸான சாந்தோக்யத்தில், ஸநத்குமாரர்தான் ஸுப்ரஹ்மண்யர் என்று முடிக்கிற இடத்தில் ஒரு தரத்துக்கு இரண்டு தரமாக "ஸ்கந்த, ஸ்கந்த"என்று இந்த நாமாவையே சொல்லியிருக்கிறது.

ஸ்கந்தன் என்பது லோகம் முழுக்கப் பரவி ப்ரக்யாதியான பெயர். "ஸ்கூல்"என்பதை "இஸ்கூல்"என்கிற மாதிரி இந்த ஸ்கந்த நாமாவைத்தான் தேசாந்தரங்களில் "இஸ்கந்தர்"என்று ஆக்கிக் கொண்டார்கள். "அல்"என்பது ஸெமிடிக் பாஷைகளில் ஒரு குறிப்பிட்ட வஸ்துவைத் தெரிவிக்கும் definite article இங்கிலீஷ் "வாந" மாதிரி. மரியாதையைக் காட்டும் வாசகமாகவும் ஒரு வார்த்தைக்கு முன்னே "அல்"சேர்ப்பார்கள். இப்படி உருவான "அல் இஸ்கந்தர்"தான் க்ரீஸ்வரை போய் "அலெக்ஸாண்டர்"என்று ஆனது!

ஸிக்கந்தர் என்பதும் ஸ்கந்தர் என்பதன் இன்னொரு திரிபுதான். ஆகையால் ஸெகந்திராபாத் என்கிற ஸிக்கந்தராபாத்தில் ஸமீபத்தில் ஸ்கந்தகிரி ஆலயம் விசேஷமாகத் தோன்றியிருப்பதும் பொருத்தந்தான். ஸ்வீடன், நார்வே, டென்மார்க் எல்லாம் சேர்ந்து ஸ்கான்டிநேவியா என்றிருக்கிற தல்லவா? ஸ்கான்டியா என்ற பிரதேசத்தை வைத்துத்தான் அந்தப் பெயர் ஏற்பட்டது. ஹிந்து-இன்டியா மாதிரி ஸ்கந்த- ஸ்கான்டியா!

*நன்றி- தெய்வத்தின் குரல்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வள்ளி மணவாளனாய் வழிபடுவோம் (வள்ளி சன்மார்க்கம்)

முனைவர் கோ. ந. முத்துக்குமாரசுவாமி
ஓய்வுபெற்ற தமிழ்ப் பேராசிரியர்.
கோயம்புத்தூர், தமிழ்நாடு.

நாதா குமரா நம: ' எனத் துதித்து மாணவக பாவத்தில் நின்று, 'ஓதாய்' எனக் கேட்ட அரனுக்குச் சாமிநாதனாய் குகப் பெருமான் உபதேசித்தது, இந்த வள்ளி சன்மார்க்கம் என்றார், அருணை முனிவர்.

"வள்ளிச் சன்மார்க்கம் விள்ளைக்கு நோக்க
வல்லைக்கு ளேற்றும் இளையோனே" (திருப்புகழ் 317)

(விள்ளை ஸ்ரீ விள்ளிக்கு, கேட்ட தந்தைக்குத் நோக்க வல்லைக்கு கண்ணிமைப் போதில், நொடியில் ஏற்ற மனதில் கொள்ளும்படி உபதேசிக்க) வள்ளிச்சன்மார்க்கம் என்றால் வள்ளி கடைப்பிடித்த நன்னெறி என்று பொருள். இம்மார்க்கத்தையே திருஞானசம்பந்தர் நன்னெறி, அருள்நெறி, பெருநெறி என்று உரைக்கின்றார்.

இந்தச் சன்மார்க்கம், இம்மார்க்கத்தில் பயணிப்பவர்களை எங்கு அழைத்துச் செல்லும் என்பதை அருணை முனிவர் பலதிருப்புகழ்ப் பாடல்களில் தெளிவாக விதந்து ஓதுகின்றார்.

"நீவேறெ னாதிருக்க நான்வேறெ னாதிருக்க
நேராக வாழ்வ தற்குன் னருள்கூற"
(நாவேறு, சுவாமிமலைத் திருப்புகழ்)
"இருவினைமு மலமுமற இறவியொடு பிறவியற
ஏக போகமாய் நீயு நானுமாய்
இறுகும்வகை பரமசுகம் அதனையருள் இடைமருதில்
ஏகநாயகா"
(திருவிடைமருதூர்த் திருப்புகழ், அருகுநுனி)

இத்திருப்புகழ்களில் எல்லாம் உயிர் இறை எனும் இருபொருள்கள் உள்ளன் மங்கலம் அல்லது சிவம் எனப்படும் இறை இன்பவடிவானது, ஆனந்தமயமானது, அதனைத் துய்க்கும் உரிமை உயிர்க்கு உளது, அந்த இன்பத்தைத் தடுப்பது மும்மலங்கள், அவையாவன சகசமலம் எனப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணவம், ஆகந்துகம் எனப்படும் மாயை கன்மங்கள், இவை நீங்கினால் உயிர் இறையின்பத்தைத் துய்க்கும் இறையின்பத்தைத் துய்க்க ஒட்டாமல் தடுக்கும் தடை நீங்கும், தடைநீங்கிய உயிர் சிவத்தைக் காணும், கண்டால் அதனுடன் தான்வேறு சிவம் வேறு என்று தோன்றாத வகையில் இரண்டற்ற நிலையில் ஏகபோகமாய் இறுக வேண்டும். அவ்வாறு இறுகும் நிலையில் முத்தியாகிய பரமசுகம் விளையும் அதுவே உயிர் அடையவேண்டிய கதி என்பனவாகிய பொருள்கள் விளங்குகின்றன.

இத்திருப்புகழ்களில் எல்லாம் உயிர் இறை எனும் இருபொருள்கள் உள்ளன் மங்கலம் அல்லது சிவம் எனப்படும் இறை இன்பவடிவானது, ஆனந்தமயமானது, அதனைத் துய்க்கும் உரிமை உயிர்க்கு உளது, அந்த இன்பத்தைத் தடுப்பது மும்மலங்கள், அவையாவன சகசமலம் எனப்படும் ஆணவம், ஆகந்துகம் எனப்படும் மாயை கன்மங்கள், இவை நீங்கினால் உயிர் இறையின்பத்தைத் துய்க்கும் இறையின்பத்தைத் துய்க்க ஒட்டாமல் தடுக்கும் தடை நீங்கும், தடைநீங்கிய உயிர் சிவத்தைக் காணும், கண்டால் அதனுடன் தான்வேறு சிவம் வேறு என்று தோன்றாத வகையில் இரண்டற்ற நிலையில் ஏகபோகமாய் இறுக வேண்டும். அவ்வாறு இறுகும் நிலையில் முத்தியாகிய பரமசுகம் விளையும் அதுவே உயிர் அடையவேண்டிய கதி என்பனவாகிய பொருள்கள் விளங்குகின்றன.

உயிரும் சிவமும் 'ஏக போகமாய் (நீயு நானுமாய்) இறுகும்வகை'யைச் சைவசித்தாந்தம் அத்துவித சம்பந்தம் என்கின்றது. அத்துவித சம்பந்தம் என்பது யாது? பேதமான பொருள்கள் இரண்டு தம்முள் அபேதமாதற்குரிய சம்பந்தம், அத்துவித சம்பந்தம். அந்த சம்பந்தத்தால் உயிருக்கு அழியாப்பரமானந்தம் விளைகின்றது. அதுவே முத்தி.

பொருள் இரண்டாக இருந்தும் பேதப்படுத்தும் குற்றம் நீங்கித் தம்முள் வேறறக் கலந்து நிற்கும் தன்மையே அத்துவிதம். அத்துவிதம் என்றால் ஏகம் அல்லது ஒன்று என்பது பொருள் அன்று துவிதம் அல்ல, இரண்டல்ல ஒன்றுமல்ல என்பதுதான் பொருள்.

சிவமும் உயிரும் இரண்டும் சித்து அதாவது அறிவுடையன என்பதால் ஓரினத்தன எனினும் சிவம் அருளும் சித்து, உயிர் அருளினைச் சேரும் சித்து சிவம் முற்றறிவுடையன், சர்வஞ்ஞன் உயிர் சிற்றறிவினன், கிஞ்சிஞ்ஞன். சிவம் தானே அறிவன் சிவன் அறிவிக்க உயிர் அறிவன். சிவன், வியாபகன் ஆகையால் இருந்தாங்கு இருந்தபடி அறிவன், உயிர் ஏகதேசன், கால இட எல்லைக்குட்பட்டவன். ஆதலால் எதனையும் அழுந்தி அனுபவித்து அறிவன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவன் உயிர்களின்பொருட்டு ஐந்தொழிற் செய்வன் உயிர் ஐந்தொழிலிற் படுவன். இவைபோல சிவத்துக்கும் உயிர்களுக்கும் பேதம் உண்டு.

எனவே, சிவம் உயிர் இரண்டும் சித்தென ஓரினமே என்றாலும் உயிர் சிவானுபவம் ஒன்றற்கே உரியது. அந்த அனுபவம் சிவமும் உயிரும் தனித்தனியிராமல் ஒன்றெனுமாறு கூடினாலே உண்டாவது. இதுவே

## சைவசித்தாந்தம் கூறும் சுத்தாத்துவிதமுத்தி.

இந்தச் சுத்தாத்துவித முத்தி நிலையை அடைய உபதேசிக்கப் பெற்ற மார்க்கமே வள்ளி சன்மார்க்கம். இந்தச் சன்மார்க்கத்தில் ஒழுகுவோரை முருகன் ஆட்கொள்ளும் நெறியினை வள்ளியை முருகப்பெருமான் காதற் திருமணம் செய்து கொண்ட திருவிளையாடலை ஏதுவாக வைத்து அருணைமுனிவர் கந்தரலங்காரப் பாடலில்(24) விளக்குகின்றார்.

**"கின்னங் குறித்தடி யேன்செவி நீயன்று கேட்கச்சொன்ன**
**குன்னங் குறிச்சி வெளியாக்கி விட்டது கோடுகுழல்**
**சின்னங் குறிக்கக் குறிஞ்சிக் கிழவர் சிறுமிதனை**
**முன்னங் குறிச்சியிற் சென்றுகல் யாண முயன்றவனே"**

(கின்னம் துயரம். குன்னம் இரகசியம். குறிச்சி வேடுவர் வாழிடம். கோடு குழல் சின்னம் வேட்டுவர்களின் இசைக்கருவிகள்) முருகா! நீ எனக்கு இரகசியம் என்று உபதேசித்த பொருளை வள்ளிமலை வெட்ட வெளிச்சமாகி விட்டது. நீ எனக்கு உபதேசித்த மந்திரத்தின் பொருள் 'யான் எனது' என்னும் தற்போதத்தை விடவேண்டும் என்பது. 'யாரொருவர் யான் எனது என்னும் ஆணவச் செருக்கற்று என்னை வழிபடுகின்றார்களோ அவர்களுக்கு நான் எளியன் குற்றேவல் செய்பவன்' என்பதல்லவா நீ எனக்கு உபதேசித்த இரகசியம். நீ உபதேசித்த முறையில் உன்னை வழிபட்டவள் வள்ளிப் பிராட்டி. அதனால் அல்லவா நீ அவளுக்கு 'திருவேளைக்காரன்" ஆனாய். அதனால் அல்லவா, நீ அவள் வாழ்கின்ற குறிச்சிக்குச் சென்று அவள் மகிழும்படியாக பல விளையாடல்கள் நிகழ்த்தி, அவளுக்குக் குற்றேவல் செய்து, அவளைத் திருமணமும் செய்து கொண்டு உன் தேவியாக்கிக் கொண்டாய். முருகா! நீ நான் பிறவிநோய் நீங்கி வாழும்பொருட்டு என் செவிக்கு மட்டும் கேட்கும்படியாகச் சொன்ன குன்னத்தை (தெய்வ ரகசியத்தை), கோடு குழல் சின்னம் முதலிய இசைக்கருவிகள் முழங்க நீ வள்ளியைத் திருமணம் செய்து கொண்ட இடமாகிய குறிச்சி ஊருலகம் எல்லாம் அறிய வெட்ட வெளியாக்கிவிட்டதே. தெய்வ ரகசியத்தை கொட்டுமுழக்கோடு வெளியிடுவதாக அல்லவா இச்செயல் உள்ளது?!" எனக் கேட்டு அருணகிரிநாத சுவாமிகள் முருகப் பெருமானைப் பழிப்பதுபோலக் கொண்டாடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமனை முனிந்த கடவுட் குமரனாகிய செவ்வேட் பரமன், வள்ளி தனக்காகப் பக்குவப்படுள்ளாள் என நாரதமுனிவர் உரைக்கக் கேட்டு, 'மையல் மானுட வடிவந் தாங்கினான், வேட்டுவக் கோலத்தைக்கொண்டு குமரன் தோன்றினான், தூண்டியே கன்று காமநோய்க் கவலையுள் வைத்தான்' எனக் கச்சியப்ப சிவாச்சாரியர் முருகன் தன் தெய்வநிலையை விட்டு வள்ளியின் பொருட்டு மையல் மானுடனாய் வந்த எளிமையைப் பாடுகின்றார்.

வள்ளியின் மனத்தைத் தன்பால் ஈர்க்க முருகன் மேற்கொண்ட திருவிளையாடல்கள் அனைத்தும் தமிழ் அகப்பொருள் இலக்கணத்திற்கேற்ப அமைந்திருப்பதால் அவை, கந்தபுராணத்தில் வள்ளியம்மை திருமணப் படலத்திலும் திருத்தணிகைப் புராணத்தில் களவியற் படலத்திலும் காவியச் சுவை படப் பாடப்பட்டுள்ளன.

அந்த நிகழ்ச்சிகள் அருணகிரிநாதப் பெருமானால் திருப்புகழிலும் பாடப்பட்டுள்ளன. இவ்விரு புராணங்களிலும் சொல்லப்படாத பல திருவிளையாடல்களும் திருப்புகழில் பாடப்பெற்றுள்ளன. அவை வள்ளி மீது முருகன் கொண்ட அளவிலா மோகத்தை (அதாவது, அடியவர்மீது இறைவன் கொண்டுள்ள கருணையை) வெளிப்படுத்துகின்றன.

முருகன் வள்ளி மீது கொண்ட காதலை விளக்கும் பல திருப்புகழ் பாடல்களில் சிருங்கார ரசம் கொப்பளித்துப் பொங்குகின்றது.

"வேடுவர் சிறுமி ஒருத்திக்கு
யான் வழி அடிமை எனச்செப்பி
வீறுள அடியினைப்பற்றிப் பலகாலும்
வேதமும் அமரரும் மெய்ச்சக்ர
வாளமும் அறிய விலைப்பட்டு
மேருவில் மிகவும் எழுத்திட்ட பெருமாளே"
(திருப்புகழ், 1199)
"கொங்கைக் கொப்பாகும் வடகிரி
செங்கைக் கொப்பாகும் நறுமலர்
கொண்டைக் கொப்பாகும் முகிலென வருமாதைக்
கும்பிட்டுக் காதல் குனகிய
இன்பச்சொற் பாடும் இளையவ"
(திருப்புகழ், 945)
"குறப்பொற் கொம்பை முன்
புனத்தில் செங்கரம்
குவித்துக் கும்பிடும் பெருமாளே"
" ஒரு
பெண் காதலொடு வனமேவி வளிநாயகியை
இன்பமான தேனிரச மார்முலை விடாத கர மணிமார்பா"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வங்கார மார்பிலணி)
" புனம் வாழும்
கோலப்பெண் வாகு கண்டு
மாலுற்று வேளைகொண்டு
சுழைக் குலாவும் பெருமாளே"
(திருப்புகழ், 1241)
மதனன்விடு புட்பசர படலமுடல் அத்தனையும்
மடலெழுதி நிற்குமதி மோகத் தபோதனன்"
(வேடிச்சி காவலன்)

நற்பண்புகளையுடைய தம்பதியரிடையே அமைந்த நற்காமம் பத்தியாக, சிவ- சக்தி ஐக்கிய அனுபவமாக அமையும்.. நற்காமம் தம்பதியரிடையே உயர்ந்த அனுபவத்திற்கு வழியமைக்கும்.

லலிதாம்பிகை "சிருங்காரரச சம்பூர்ணா" என எம்பிரானைத் தன்வசப் படுத்துகின்றாள். அச்செயல் அவள் பொருட்டன்று அவளீன்ற பிள்ளைகளாகிய உயிர்களின் நலன் கருதி. லலிதையின் பலநாமங்கள் அவள் காமேஸ்வரனை சிருங்காரத்தில் அன்புகாட்டித் தன் வசப்படுத்தலை வெளிப்படுத்துகின்றன. 'காமகலா ரூபா", "காமகேளீ", "காமகோடிகா", "காமதாயினி", "காமசேவிதா", "காமேசக்ஞாத ஸௌபாக்ய மார்த்தவோரு த்வயான்விதா". "ரமண லம்படா" (தன்னுடைய பதியுடன் ரமிப்பதில் ஆசையுடையவள். ரமணம் சம்போகம்,கிரீடை), என்னும் நாமங்கள் அம்பிகையின் ஸ்ருங்காரத்தை வெளிப்படுத்துகின்றன.

***அபிராமி அந்தாதியிலும் அம்மையின் சிருங்காரரசத்தை வெளிப் படுத்தும் பாடல்கள் உள்ளன.***

"அதிசய மான வடிவுடை யாளர விந்தமெல்லாந்
துதிசய வானன சுந்தர வல்லி துணையிரதி
பதிசய மான தபசய மாகமுன் பார்த்தவர்தம்
மதிசய மாகவன் றோவாம பாகத்தை வவ்வியதே (17)
(தமது வேலைக்காரனாகிய மன்மதன்பொருட்டுத் தமது நாயகராகிய
சிவபெருமானது புத்தி குன்றும்படி அவரது வாமபாகத்தை வௌவிய அபிராமிதேவி
தமதன்பனாகிய தமியேனுக்கு அனுக்கிரகத்தைச் செய்யாதொழியார். மதிசயமாக
புத்திசயமாக)
"இடங்கொண்டு விம்மி யிணைகொண் டிறுகி யிளகிமுத்து
வடங்கொண்ட கொங்கை மலைகொண் டிறைவர் வலியநெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்
படங்கொண்ட வல்குற் பனிமொழி வேதப் பரிபுரையே" (42)
(ஸ்தனங்களாகிய மலையரணையும் அல்குலாகிய தேரினையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்துணையாகக் கொண்டு இறைவரது வலிய நெஞ்சை வென்று அந்நெஞ்சைத் தமக்கு நடனத் தானமாகக் திறைகொண்டவர்)

"ககனமும் வானும் புவனமுங் காணவிற் காமனங்கந்
தகனமுன் செய்த தவப்பெரு மாற்குத் தடக்கையுஞ்செம்
முகனுமுந் நான்கிரு மூன்றெனத் தோன்றிய மூதறிவின்
மகனுமுண் டாயதன் றோவல்லி நீசெய்த வல்லபமே" (65)

(அபிராமிதேவியே, தங்களுடைய வல்லமையினால், யோகமூர்த்தியாய் ஞானோபதேசம் செய்து கொண்டிருந்த தட்சிணாமூர்த்திக்கும் ஷண்முகக் கடவுளாகிய ஒரு குழந்தை உண்டாய தென்றால், தேவி!, நும் வல்லமைக்கு முடியாத காரியம் ஒன்றும் இல்லை)

"தைவந்து நின்னடித் தாமரை சூடிய சங்கரற்குக்
கைவந்த தீயும் தலைவந்த ஆறும் கரந்ததெங்கே
மெய்வந்த நெஞ்சினல்லால் ஒருகாலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புகவறி யாமடப் பூங்குயிலே" (98)

(பூங்குயில் போன்ற அபிராமிதேவியே!, தங்களுடைய திருவடித் தாமரைகளை வருடிப் பின் சிரசிற் சூடி ஊடல் தீர்த்த சிவபெருமானுக்குப் பற்றிச் சூடுதற்குக் கருவியாகிய தம்முடைய திருக்கரத்திலுள்ள ஓமாக்கினிநெருப்பும் சூடுதற்கு இடமாயுள்ள சிரசின்கண் உள்ள கங்காநதியும் அப்படித் திருவடிகளைப் பற்றிச் சூடும்போது எவ்விடத்திலே ஒளித்துக்கொண்டன திருவாய் மலர்ந்தருளுக)

நற்காமம் பத்தியனுபவத்துக்குத் தடையன்று. இயல்பாகக் குழந்தையின் மேலுள்ள பாசத்தை அக்குழந்தையை முருகனாகவும் கண்ணனாகவும் பாவித்து, அக்குழந்தையைப் பேணும் செயலை இறைவழிபாடாக மாற்றிக் கொள்ளுதலைப் போல, இயல்பாகத் தம்பதியருக்குள் இருக்கும் நற்காமத்தை சிவசத்தி ஐக்கிய பாவனையால் சிவானுபவமாகவும் தாம்பத்திய வாழ்க்கையே சக்தி உபாசனையாகவும் மடை மாற்றம் செய்து கொள்ளும் வழியைப் பெரியோர்கள் அருளி யுள்ளார்கள். சைவமரபில், பெண்கள், பாவை நோன்பிருந்து, சிவனடியார்களே தங்களுக்குக் கணவனாக வாய்க்கப்பெற வேண்டும் என பெருமானிடம் வேண்டினார்கள். கணவனுக்குச் செய்யும் உபசாரங்களே சிவபூசையாக அமையும் பேறு அதனால் வாய்த்தது. பெண்ணுக்குச் சொன்னது ஆணுக்கும் பொருந்தும்.

அவரவர்க்கு உகந்த மார்க்கத்தைக் கைக்கொண்டு ஒழுகி இறையருளைப் பெற வைதிகம், இந்து தருமம் அனுமதிக்கின்றது. வள்ளி மீது முருகன் கொண்ட மோகத்தை வெளிப்படுத்தும் பாடல்கள் ஜெயதேவரின் அஷ்டபதிக்கு நிகராகக் காதலின்பத்தை வெளிப்படையாகப் பாடுகின்றன. வடநாட்டு பக்தி மரபு தமிழ்நாட்டில் வேர்கொண்டபோது அஷ்டபதி பாடி இராதாகல்யாணம், சீதாகல்யாணம், திவ்யநாம பஜனை ஆகியனவற்றை மகோற்சவமாகக் கொண்டாடும் மரபு திருவிடைமருதூர், கும்பகோணம், பாலக்காடு முதலிய பகுதிகளில் பிராமணர்களால் மேற்கொள்ளப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்புகழ்வழி வள்ளி திருக்கல்யாணம் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வள்ளிமலைச்சுவாமிகள் என்னும் மகானால் உருவாக்கப்பட்டது. திருப்புகழின் பெருமையை உலகறியச் செய்த பெருமை இம்மகானுக்கே உரியது. அர்த்தனாரி எனப் பூர்வாசிரமப் பெயர்கொண்ட இப்பெருமான், மைசூர் அரண்மனையில் தலைமைச் சமையற்காரராகப் பணியாற்றி வந்தார். வினை வயத்தால் அருமை மனைவி மக்கள் ஆகியோரை இழந்து விரக்தியோடு திருப்பழனிக்கு வந்தார். அங்கு பூரணநிலவொளியில் திருக்கோயில் தாசி, சுவாமி ஊர்வலத்தின்போது, 'வங்கார மார்பிலணி' எனத் தொடங்கும் திருச்செங்காட்டங்குடித் திருப்புகழுக்கு அற்புதமாக அபிநயம் செய்தாடினாள். தமிழ் எழுதப் படிக்க அறியாத அர்த்தனாரிக்கு இந்த நிகழ்ச்சி திருவருள் விளக்கமாக அமைந்தது. முருகன் அர்த்தனாரியை இந்த நிகழ்ச்சியின் வழியே ஆட்கொண்டான். இந்தத் திருப்பாடலை அறிய வேண்டும் என்பதற்காகவே அர்த்தனாரி தமிழ் எழுதப்படிக்கத் தொடங்கினார். திருப்புகழ் அவரைப் பற்றிக் கொண்டது. வள்ளியம்மை அவருக்குக் குருவானார். வள்ளித் தாயைப் 'பொங்கி' எனப் பெயர் சூட்டிக் கொண்டாடினார். அர்த்தனாரி வள்ளிமலைச்சுவாமிகள் ஆனார். வள்ளிமலைச் சுவாமிகள் தம்மை வள்ளியாகவே பாவித்து கொண்டார். முருகனைக் காட்டிலும் வள்ளியை ஆராதிப்பதில் பெருமகிழ்ச்சி கொண்டார். வேதா முதல் விண்ணவர் சூடும் மலர்ப் பாதனாகிய முருகனே வள்ளியை அல்லது பிறரைத் துதியா விரதன்தானே! குருஜி டாக்டர் ராகவன்

கொச்சி சமஸ்தானத்து தலைமை நீதியரசராகவும் பின்னர் சென்னையில் புகழ்பெற்ற வழக்கறிஞராகவும் விளங்கிய டி.எம். கிரு'ணசுவாமி ஐயர், வடக்குப்பட்டு சுப்பிரமணிய பிள்ளை, சாது பார்த்தசாரதி சுவாமிகள் போன்றோர் இவருடைய சீடர்களானார்கள்.

வள்ளி திருக்கலியாண மகோற்சவம் கொண்டாடுவதில் இரு பத்ததிகள் இன்று நிலவுகின்றன. ஒன்று, வள்ளிமலைச்சுவாமிகள் அமைத்த பத்ததி. மற்றொன்று குருஜி டெல்லி இராகவன் அவர்கள் உருவாக்கித் திருப்புகழ் அன்பர்கள் மேற்கொண்டுள்ள பத்ததி.

நன்மணம் விரும்பி வள்ளி சமேத முருகப்பெருமானை வழிபடுதல் சிலப்பதிகாரகாலத்துக்கும் முந்திய மரபு.

**குறமக ளவளெம குலமக ளவளொடும்**
**அறுமுக வொருவனின் னடியிணை தொழுதேம்**
**துறைமிசை நினதிரு திருவடி தொடுநர்**
**பெருகநன் மணம்விடு பிழைமண மெனவே"**
**(சிலப்பதிகாரம், குன்றக்குரவை).**

(முனைவர் கோ. ந. முத்துக்குமார சுவாமி அவர்கள் ஓய்வுபெற்ற தமிழ்ப் பேராசிரியர். சைவசமயத்திலும், மரபிலக்கியங்களிலும் ஆழ்ந்த புலமை வாய்ந்தவர். திருமுறைகள், சைவசித்தாந்தம், தல புராணங்கள் ஆகியவை குறித்த விரிவான, ஆழமான கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதி வருகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கந்தபுராணம் நம் சொந்தப்புராணம்

நீர்வை. தி. மயூரகிரி சர்மா

*"இந்திராகிப் பார் மேல் இன்பமுற்றினிது மேவிச்*
*சிந்தையில் நினைந்த முத்தி சிவகதி அதனில் சேர்வர்*
*அந்தமில் அவுணர் தங்கள் அடல் கெட முனிந்த செவ்வேள்*
*கந்தவேள் புராணம் தன்னைக் காதலித்தோதுவோரே"*

என்று நூற்பயன் கூறும் பாடலில் விதந்துரைக்கப்படும் வண்ணம் முருகப்பெருமானின் திருவரலாறாகிய கந்தபுராணத்தை காதலுடன் இப்புவியில் படிப்போர், கேட்போர், நினைப்போர் யாவரும் இந்திரனைப் போலத் தலைமைத்துவமும் இன்பமும் மிக்க வாழ்வை வாழ்ந்து இறுதியில் பரமானந்த நிலையாகிய சிவபதப் பேறும் பெறுவர் என்று சொல்லப்படுகிறது.

சம்ஸ்க்ருதத்தில் உள்ள பதிணெண் புராணங்களான சைவம், பவி'யம், மார்க்கண்டேயம், லிங்கம், ஸ்காந்தம், வராஹம், வாமனம், மத்ஸயம், கூர்மம், பிரம்மாண்டம், காருடம், நாரதீயம், வை'ணவம், பாகவதம், பிரம்மம், பத்மம், ஆக்னேயம், பிரம்மகைவர்த்தனம் என்பவற்றுள் ஸ்கந்தபுராணம் என்ற மஹாபுராணத்திலுள்ள ஆறு பெரிய சங்கிதைகளுள் ஒன்று சங்கரசங்கிதை. இச்சங்கிதையிலுள்ள பதின்மூன்றாயிரம் ஸ்லோஹகளால் ஆக்கப்பெற்ற சிவரஹஸ்ய காண்டம் என்ற உயர்ந்த பகுதியில் ஏழு காண்டங்கள் உள்ளன. அவ்வேழு காண்டங்களுள் முதன்மையான ஆறு காண்டங்களை இணைத்து அழகு தமிழில் 'கந்தபுராணம்' என்ற ஞானக்களஞ்சியமாக தந்திருக்கிறார் கச்சியப்ப சிவாச்சாரியார்.

பொ.பி 12ம் 13ம் நூற்றாண்டில் தமிழகத்தின் காஞ்சியில் குமரகோட்டம் முருகன் ஆலய அர்ச்சகராகத் திகழ்ந்தவர் கச்சியப்ப சிவாச்சாரியார். அவர் முருகனே 'திகட சக்கர' என்று முதல் அடியெடுத்துக் கொடுக்க 10345 அருந்தமிழ்ச் செய்யுள்களால் கந்தபுராணத்தை ஆக்கியிருக்கிறார்.

'உபதேசரத்னாகரம்' என்று போற்றப்படும் கந்தபுராணம் காப்பிய இலக்கணங்கள் மிக்கதாக, சிந்தாந்தக் கருத்துக்களின் செறிவுடையதாக, தத்துவார்த்த உண்மைகள் பொருந்தப் பெற்றதாக அமைந்திருக்கிறது. தமிழ்க் கந்தபுராணத்தின் தமிழ் நடையும் வியந்து நயந்து உண்ண வேண்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகப்பெருமானாலேயே ஆணையிடப்பெற்று, அவனாலேயே தினமும் பரிசீலனை செய்யப்பெற்று, அரங்கேற்றத்தில் அறிஞர் முன்றலில் இலக்கணச் சந்தேகம் உண்டான போது கந்தவேட் பெருமானே சிறுவடிவு தாங்கி வந்து அதனையும் நீக்கி யாவரும் அறிய தன்னால் அங்கீகரிக்கப்பெற்ற நூல் என்று மிகத் தெளிவாக 'இறையாணை' பெற்ற நூல் கந்தபுராணம் என்பது சைவத்தமிழ் மக்களின் நம்பிக்கை.

## அரிய தத்துவப்புதையல்

கந்த புராணம் ஒரு தத்துவப்புதையல். இப்புராணத்தின் ஒவ்வொரு நிலையிலும் இதனை உணர்ந்து அனுபவிக்க வேண்டும். சிவனார் சனாகாதி முனிவர்கள் நால்வருக்கு உபதேசித்தமை ஆன்மாக்கள் நல்லறிவை நாடித் தவிக்கும் போது இறைவனே குருவாக வந்து அருள்வான் என்பதையும், சிவனார் காமனை எரித்தமையும் காலனைக் காலால் உதைத்தமையும் அவன் காமத்தையும் மரணத்தையும் வென்றவன் என்பதையும் அவன் அடியார்களுக்கும் அவற்றால் துன்பமில்லை என்பதையும் உணர்த்தி நிற்கிறது.

தக்கன் யாகத்தை அழித்தமை இறைவனை இகழ்ந்து அவனை அவமதிப்பவர்கள் மிகுந்த அல்லல்களை அநுபவிப்பர் என்பதையும் காட்டுகின்றது. அன்னை உமையாளுக்கும் இறைவனுக்கும் நிகழ்ந்த திருமணம் காதற்ச்சிறப்பையும் இந்துப்பண்பாடு ஆணும் பெண்ணும் கூடி வாழும் வாழ்விற்குக் கொடுத்த முதன்மையையும் வெளிப்படுத்துகின்றது.

'கண்ணில் நல்ல.்.துறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே'

என்ற ஞானசம்பந்தர் வாக்கு ஈண்டு சிந்திக்கத்தக்கது.

## மூவுலகிற்கும் முதல்வன் குழந்தையானான்

தேவர்களின் வேண்டுகோளின் படி சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து ஆறு தீப்பொறிகள் பிறந்து ஆகாயத்தில் தவழ்ந்து வாயுவாலும் அக்கினியாலும் தாங்கப் பெற்று ப்ருதிவியிலே 'சரவணப்பொய்கை' ஜலத்திலே குழந்தையாய் மாறியது என்று சொல்வது பஞ்சபூதங்களினூடாக இறையாட்சியை அவதானிக்கச் செய்கிறது. முருகனின் தோற்றத்தில் பஞ்சபூதங்களின் பங்களிப்பு வியக்க வைக்கிறது.

ஆலய கும்பாபிேேக்க் கிரியைகளில் ஆகாய சூரியனிலிருந்து 'சூரியாக்கினி' என்ற நெருப்புப் பெறப்பட்டு மண்ணில் குண்டத்தில் ஸ்தாபிக்கப்பட்டு வாயுவின் துணையுடன் வளர்க்கப்பெற்று பின், அதனை கும்பஜலத்தில் இணைத்து வழிபாடாற்றுவதுடன் அதை இறுதியில் இறை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவுருவத்தில் அபிஷேகித்து இறைசாந்தித்யம் உண்டாகப் பிரார்த்திப்பதையும் இதனையும் இணைத்து நோக்கலாம்.

இந்த இடத்தில் 'ஒருதிரு முருகன் வந்து உதித்தனன்' என்று கச்சியப்பர் குறிப்பிடுவார். அதாவது என்றுமுள்ள இறைவன் இந்த வேளையில் முருகனாக உதித்தனன். (காலையில் சூரியன் பிறப்பதில்லை. உதிக்கிறான். ஏனெனில் அவன் முன்னரே இருப்பவன்) முருகனுடைய ஆறதிருமுகங்களும் அன்பு, அறிவு, ஆற்றல், அழகு, அமைதி,ஆளுமை ஆகிய பண்புகளை உணர்த்தும். நாற்றிசையும் மேலும் கீழும் ஆக, ஆறு பக்கமும் பார்த்து நிற்கும் இத்திருமுகங்களை நம்புவோருக்கு துன்பம் எத்திசையாலும் வாரா. அவனது கரங்கள் பன்னிரண்டும் கொடுப்பதற்கென்றே பிறந்தன. என்றும் இளையான், எவர்க்கும் மிகப்பெரியான், என்றும் அழகியான் என்று சநாதன தர்மம் போலவே விளங்குபவன் அந்த ஸ்கந்தன் என்ற முருகன். அதனை

*"முழுமதி அன்ன ஆறுமுகங்களும் முன் நான்காகும்*
*விழிகளில் அருளும் வேலும் வேறுள படையும் சீரும்*
*அழகிய கரம் ஈராறும் அணிமணித் தண்டை ஆர்க்கும்*
*செழுமலரடியும்."*

என்று தெவிட்டாத தேனாக தமிழில் பாடுவார் கச்சியப்பர்.

## போரும் சீரும்

கந்தபுராணத்தில் தாரகன், சிங்கன், சூரபத்மன் என்ற மூன்று அசுரச் சகோதரர்களின் கதை கூறப்படுகின்றது. சைவசித்தாந்த நிலையில் தாரகன் உலகமே உண்மை என்று வாழ்ந்தவன். அவனை மாயா மலத்திற்கு உவமிப்பர். சிங்கன் கன்மத்திற்குக் கட்டுப்பட்டவன். கன்மமலத்திற்கு உவமிப்பர். சூரபத்மன் ஆணவமலம். இறுமாப்பே அவன் இயல்பு. இம்மூவரையும் முறையே அழித்தமை வேல் கொண்ட வேந்தனாலேயே இயல்பாகச் செய்ய வல்ல பெருஞ்சிறப்பு.

*"தன்னைத் தான் காதலாகில் எனைத் தோன்றும்*
*துன்னற்க தீவினைப் பால்"*

என்பது வள்ளுவர் மொழி. அதாவது 'நீ உன்னை விரும்பி, உனக்கு நன்மையை விரும்பி, தீவினை ஏதும் செய்யாமல் இருப்பாயாக' என்று அறிவுறுத்துகிறார். சூரனோ எல்லா வித திறனும் அறிவும் உடையவனாய் இருந்தும் இறையருள் பெற்றவனாய் இருந்தும் தீவினை செய்து தன்னைத் தானே அழித்துக் கொண்டமை இதற்குத் தக்க சான்றாகும். போருக்கு முன் இரு முறை தூதனுப்பியமை, மறைந்து நின்று போராடாமை, ஆயுதம் ஏந்தாதவனுடன் போராடாமை, தனக்குச் சமானமற்ற வீரனுடன் போராடாமை, புறங் கொடுப்பவனைக் கொல்லமை ஆகிய செயற்பாடுகள் கந்தபுராணத்திலுள்ள போரில் அசுரர்களால் கூட அநேகமாகக் கடைப்பிடிக்கப்படுகிவதை பார்க்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இன்றைய உலகில் நடைபெற்ற, நடைபெறும் மோதல்கள் இவற்றை எல்லாம் புறக்கணித்து தன்னிச்சையானதாக மருத்துவமனையையும் தாக்குவதாக இருப்பது நிச்சயமாக இன்றைய சமூகத்தைக் காட்டிலும் கந்தபுராண காலச் சமூகம் உள, ஒழுக்க ரீதியில் உயர்வானதாகவே இருந்திருக்கும் என நம்பச் செய்கின்றன.

கந்தபுராண கதையுடன் இராமாயணக் கதையை ஒப்பு நோக்கும் போது சைவவை'ணவ ஒற்றுமையை உணரலாம். கந்தபுராணம் என்பது தமிழரின் வாழ்வோடு இணைந்தது. ஆக, இதில் ஊறிய எவரும் இதைக் கதை என்று சொல்வதில்லை. சிற்சில இடங்களில் கதைக்குரிய உயர்வு நவிற்சி இருந்தாலும் இது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் உண்மையில் நடந்த சம்பவம் என்றே அவர்கள் நம்புகிறார்கள். இவ்வாறான ஆய்வுகளின் படி முருகன் பிறந்தது கைலாசசாரல் என்றும் தரை வழி யுத்தம் நடந்தது திருப்பரங்குன்றம் என்றும் விண் வெளி யுத்தம் நடந்தது திருப்போரூர் என்றும் கடல் வழிச் சமர் நடந்தது திருச்செந்தூருக்கு அப்பாலுள்ள கடல் என்றும் ஐதீகம். இலங்கையின் கதிர்காமத்தில் படைவீடு அமைத்துத் தங்கி அப்பால் தெற்கே சூரனுடைய நகரை நோக்கி சென்றதாகக் கூறப்படுவதால் சூரன் அக்கால ஆபிரிக்கதேச அரசன் என்று கருதுவாரும் உள்ளனர். முருகனின் வலது புறம் எழுந்தருளியிருக்கும் வள்ளியம்மை தமிழ் மொழி பேசும் குறவர் இனப் பெண் என்பது வேறு ஐதீகம். இதுவும் ஆய்விற்குரியதே.

முருகன் கைவேலுக்கு உரிய சிறப்பும் வேறு எப்படைக்கும் இல்லை. தமிழ் இந்துக்களில் பலருக்கு 'வேலாயுதம்' என்றே பெயர் இருக்கிறது. இப்படி எவரும் வேறு எந்தப் படைக்கலனையும் தங்கள் பெயராகக் கொள்வதாகத் தெரியவில்லை. இலங்கையிலுள்ள பிரபல யாழ். நல்லூர் போன்ற பல முருகன் ஆலயங்களில் கருவறையில் முருகனின் திருவுருவத்திற்குப் பதிலாக வேலாயுதமே விளங்கிடவும் காணலாம். கந்தபுராணம் தேவர்களின் வாக்காக இதனை

*"அந்தமில் ஒளியின் சீரால் அறுமுகம் படைத்த அன்பால்*
*எந்தை கண்ணின்றும் வந்த இயற்கையால் சக்தியாம் பேர்*
*தந்திடும் பனுவல் சொன்ன தன்மையால் தனிவேற் பெம்மான்*
*கந்தனே என்ன நின்னைக் கண்டு உளக்கவலை தீர்த்தோம்"*

என்று வேலாயுதத்தை கந்தவேளாகவே கண்டு போற்றியதாக குறிப்பிடுகின்றது. இறையருட்டுணையுடன் ஆணின் விந்துவும் பெண்ணின் நாதமும் கலந்து குழந்தையாகிறது. (அருணகிரிநாதர் 'நாத விந்து கலாதீ நமோ நம' என்று இதனைத் திருப்புகழில் பாடுவார்) இறைவனிடமிருந்து வந்த நாமெல்லோரும் இறுதியில் இறைவனையே சென்றடைய வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைத் தான் சூரபத்மன் அழிவின் பின்னர் நாதவுருவாக சேவலாக மாறி இறைவனின் கொடியாகவும் விந்துருவுருவாக மயிலாக மாறி அவனின் வாகனமாயும் மாறியது வெளிப்படுத்துகின்றது என்பர். அவனையே அடைந்து அவனருளாலே அவன் தாள் வணங்குதலே முக்தி. இதனைப் பெற்றான் சூரன். இச்சம்பவத்தை 'சூரன் பெற்ற பேறு' என்று கொண்டாடுவார்கள்.

செஞ்சோற்றுக்கடனுக்குச் சிங்கனும் பிதிர்க்கடனுக்கு இரணியனும் மானத்திற்குச் சூரனும் கற்பிற்கு சூரன் மனைவியும் கந்தபுராணத்தில் எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றனர். யாழ்ப்பாணத்தின் கடற்கரையோரத்தில் உள்ள பிரபல ஸ்கந்த ஸ்தலம் 'மாவிட்டபுரம்'. ஆக, திருச்செந்தூருக்கும் மாவிட்டபுரத்திற்கும் இடைப்பட்ட பரந்த சமுத்திரப் பகுதியில் மாமரமாகி மாயா ஜாலங்கள் செய்து முருகனுடன் சூரன் போராடியிருக்கிறான்.

*"தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன் உற்றால்*
*தூயவராகி மேலைத் தொல்கதி அடைவர்"*

என்ற கந்தபுராண அறைகூவல் எங்கள் ஒவ்வொருவரையும் தட்டி எழுப்பி "ஓ... பாவிகளே, கடந்த காலம் போயது. உங்கள் பாவ மூட்டைகளை நீக்க நல்ல ஒரு வழி கிடைத்திருக்கிறது. உடனடியாக கந்தப்பெருமானின் கழலடிகளைப் போய்ச் சேருங்கள்.நீங்கள் புனிதராவீர்கள்..." என்று நமக்கெல்லாம் அரிய பெரிய நற்செய்தி சொல்கிறது.

முருகனின் கரத்தில் விளங்குகிறது வேல். வெல் என்ற வினையடியில் தோன்றியது 'வேல்'. அது ஞானமே உருவானது. ஆழந்து அகன்று கூர்மையாகி அறிவின் வெளிப்பாடாகத் திகழ்கின்றது. செவ்வேட் பெருமானின் திருக்கரத்தில் விளங்கும் சேவற்கொடி அஞ்ஞான இருளகற்றி ஞானஒளி வரக் கூவுகிறது. (கொக்கு- மாமரம், அற- அறுத்த, கோ- நம் அரசே) வாகனமான மயில் ஆசை என்ற பாம்பை அடக்கி பிரம்மசக்தியாக ஓம்கார ரூபமாக விளங்குகிறது.

## காதல் முருகனைக் காதலி

முருகு என்பது அழகு. அதன் மறு பெயர் அன்பு. அவன் பால் காதல் கொண்டோர் அனேகர். அவன் இளமையின் வடிவம். ஆற்றலின் நிலையம் அவனது மனைவியராகப் புராணம் இரு தேவியரைக் காட்டும். அவளுடைய வலது பக்கம் விளங்குபவள் வள்ளி. ஆவள் இச்சாசக்தி. மண்ணுலகில் பிறந்து வளர்ந்தவள். தமிழ்மகள். வேடுவனான நம்பிராஜன் புதல்வி. அத்தேவி இகலோக சுகத்தைத் தருவாள். ஆத்தேவியை முருகன் காந்தர்வ விவாகம் செய்துகொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகனின் இடது பக்கம் எழுந்தருளியிருப்பவள் தேவசேனா. விண்ணுலகில் பிறந்தவள் தேவராஜனின் புதல்வி. கிரியாசக்தி. அவளை இறைவன் கற்பு முறையில் பிரம்ம விவாகம் செய்தான். முருகனை வழிபடுவோருக்கு அத்தாய் பரலோக வாழ்வில் இடம்தருவாள். முருகனின் மூன்றாவது சக்தி வேல். வெற்றியைத் தருவது ஞானமே வடிவெடுத்த ஞானசக்தி அது. இது தவிர இறைவனின் இரு பெண் மணம் சமத்துவத்தைக் காட்டி நிற்கிறது. தேவலோக அரசனின் மகளைத் திருமணம் செய்த அதே இறைவன் தானே வலிய வந்து மனிதர்களில் அதிலும் சாதி, முதலியவற்றால் ஒடுக்கப்பட்ட வேடுவர் குல மகளைத் திருமணம் செய்திருக்கிறான். இதை நம் புராணங்கள் மிகவும் தெளிவாக காட்டி வந்துள்ளன. இது தவிர சாதாரணமாக ஒடுக்கப்பட்டவளான வள்ளியம்மைக்குக் கொடுக்கப்படும் உயர்ந்த அந்தஸ்து தனிச்சிறப்பு. எவருமே 'முருகனுக்கு வள்ளி' என்றே கூறக் கேட்கிறோம். மேலும் வள்ளி தமிழ் மகள். இது தமிழுக்குக் கிடைத்த சிறப்பு.

“..... ஒரு கோடி முத்தம் தெள்ளிக் கொழிக்கும் கடற் செந்தில் மேவிய சேவகனே வள்ளிக்கு வாய்த்தவனே மயிலேறிய மாணிக்கமே” இதை என்று அருணகிரிப் பெருமான் உருகிப்பாடுகிறார். சைவசமயிகளின் பரம்பொருளான சிவபெருமானின் புதல்வன் முருகன். வைஷ்ணவர்களின் பரம்பொருளான விஷ்ணுவின் புதல்விகளாகவும் கொண்டாடப்பெறும் வல்லி, தேவசேனா தேவியரை கல்யாணம் செய்தமை சமய ஒற்றுமை. தவிர முருகன் சிவகுமாரனே ஆகிலும் விஷ்ணு அம்சம் நிரம்பப்பெற்றவன். அவனது ஒவ்வொரு செய்கையையும் ஸ்ரீமந் நாராயணனின் அவதாரங்களில் நடைபெற்ற அத்புத நிகழ்ச்சிகளோடு இணைத்துப் பார்க்கும் போது ஏற்படும் இன்பமே தனியானது. அலாதியானது இதனை உண்மையிலேயே செயற்படுத்தியவர் சந்தக்கவி அருணகிரியார். திருப்புகழ் எங்கும் முருகன் பெருமை போலவே திருமால் பெருமையும் நிறைந்திருக்கிறது. தவிர முருகனை அவர் 'பெருமாள்' என்றே விழித்துப் பெருமை செய்திருக்கிறார்.

*“காலமாய்க் காலமின்றிக் கருமமாய் கருமமின்றி*
*கோலமாய்க் கோலமின்றி குணங்களாய் குணங்களின்றி*
*ஞாலமாய் ஞாலமின்றி அநாதியாய் நங்கட்க்கு எல்லாம்*
*மூலமாய் இருந்த வள்ளல் மூவிரு முகங்கொண்டுற்றான்“*

என்ற கச்சியப்ப சிவாச்சாரிய ஸ்வாமிகளின் திருவாக்கை மனங் கொண்டு அப்பெருமானின் திருவடிகளில் சரண்புகுவோம். கந்தபுராண காவிய ரசனையை உளத்தில் கொள்வோம். செம்மொழியான செந்தமிழின் தலைவன் முருகன் அவனடி பணிவோம். தமிழ்ஹிந்து தர்மம் சிறக்கப் பிரார்த்திப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காலமெல்லாம் அலைமோதும் கந்தன் கோயில் திருச்செந்தூர்

திரு. ஜடாயு அவர்கள்

"அலைகள் கடலில் சென்று அமிழ்வது போல, சேர்ந்த வினைகள் சென்றழியும் அதனால் இவன் சன்னிதி வாருங்கள், வாருங்கள்" என்று அலைவரிசைகள் மனிதரை ஆர்ப்பரித்து அழைக்கும் கடற்கரையில் நிற்கிறான் குகன். அவனே என் இதயக் கமலத்தில் உறைபவன். - சுப்பிரமணிய புஜங்கம், 5 (ஆதிசங்கரர்)

தென் தமிழ் நாட்டின் கிழக்குக் கடற்கரையில் விளங்கும் திருச்செந்தூர், பாரத தேசத்தின் புராதனமான புண்ணியத் தலங்களில் ஒன்றாகும். திருச்சீரலைவாய், ஜயந்திபுரம், செந்தில் என்ற பெயர்களாலும் அழைக்கப்படும் இத்திருத்தலம், அறுபடை வீடுகளில் ஒன்று. ஸ்கந்த புராணத்தில், சிவரகசிய காண்டத்தில், கந்தமாதன பர்வதத்தின் சாரலில் முருகன் சிவபிரானை வழிபட்டு சூரசம்ஹாரம் புரிந்த இடம் இதுவே என்று சம்பிரதாயமாக அறியப் படுகிறது. ஸ்ரீமத்பாகவதத்தில் பலராமன் தீர்த்த யாத்திரையில் செந்தூரையும், கன்னியாகுமரியையும் வணங்கிச் சென்ற குறிப்பு உள்ளது. ஆதிசங்கரரும், தமது திக்விஜயத்தின் போது, இங்கு வந்து குமரக் கடவுளை வழிபட்டு சுப்ரமணிய புஜங்கம் என்கிற அழகிய துதியை இயற்றினார் என்று கூறப்படுகிறது.

சங்க இலக்கியங்களில் ஒன்றான திருமுருகாற்றுப் படை இத்தலம் பற்றிப் பேசுகிறது. முருகனின் அறுமுகங்களையும், பன்னிரு கைகளையும், வேலையும், மயிலையும், சேவற்கொடியையும் போற்றிப் பின்,

*"உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்*
*அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே"*

என்ற வரிகள் உலகம் போற்றும் புகழுடையது என்று இத்தலத்தைக் குறிப்பிடுகின்றன. கந்த புராணத்தில், கச்சியப்ப சிவாச்சாரியர் சூரனை அழித்த சுடர் வேலின் திறம் கூறி, திருச்செந்தூர் அமர் செல்வனைப் பாடுகிறார் -

*சூரலை வாயிடைத் தொலைத்து மார்பு கீண்டு*
*ஈரலை வாயிடும் எஃகம் ஏந்தியே*
*வேரலை வாய்தரு வெள்ளி வெற்பொரீஇச்*
*சீரலை வாய்வரு சேயைப் போற்றுவாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சூர் சூரபத்மன் என்கிற அசுரன், கீண்டு கிழித்து, ஈரலை வாயிடும் ஈரலை உண்ணும், எ்.கம் வேல், வெள்ளி வெற்பொரீஇச் வெள்ளி மலையாகிய கைலாசம் போன்ற, சேய் குழந்தை)

இதற்கேற்ப, கந்த சஷ்டித் திருநாளின் போது சூரசம்ஹாரம் மிகச் சிறப்பான விழாவாக செந்தூர் கடற்கரை மணல் திட்டுகளில் ஒவ்வொரு வருடமும் அரங்கேறுகிறது. மாசியிலும், ஆவணியிலும் மனதைக் கொள்ளை கொள்ளும் பிரம்மோற்சவம் நடைபெறுகிறது. ஆறுமுகன் அவதரித்த வைகாசி விசாகப் பெருநாளும் இத்தலத்தில் விமரிசையாகக் கொண்டாடப் படும் விழாவாகும்.

கந்த புராணத்தின் படி, முருகனது படைவீரர்களாக செயலாற்ற வேண்டி அன்னை பார்வதியின் பாதச் சிலம்பிலிருந்து ஒன்பது வீரர்கள் உதித்தனர். இவர்கள் "நவ வீரர்கள்" என்று அழைக்கப் படுவர். இவர்களின் தலைவர் வீரபாகு. இந்த நவ வீரர்களின் வழிபாடு தமிழகத்தின் எல்லா முருகன் கோவில்களிலும் உள்ளதென்றாலும் திருச்செந்தூரில் மிகச் சிறப்பாக நடத்தப் படுகிறது. தமிழ் நாட்டின் வீரத் தெய்வமாகத் திருமுருகன் காலம்காலமாக விளங்கி வருகிறான். "வீர வேல், வெற்றி வேல்" என்ற கோ'மே அதற்குச் சான்றாகும்.

தலத்தின் பழமையைக் கூறும் வரலாற்றுச் செய்திகள் பல உள்ளன. பாண்டியன் வரகுண மாராயன் (கிபி. 875), கோநேர்மை கொண்டான் திரிபுவன சக்கரவர்த்தி விக்கிரம பாண்டிய தேவன் (கிபி. 1282) காலத்திய கல்வெட்டுகள் சுற்றியுள்ள கிராமங்கள் கோயில் ஆராதனைக்குப் பொருட்கள் வழங்க ஆணையிட்டும், அதற்காக மன்னர் அந்தக் கிராமங்களுக்குக் கொடைகள் அளித்தது பற்றியும், கிராமங்களில் அந்தணர்களுக்குக் கொடைகள் வழங்கியது பற்றியும் பேசுகின்றன. கேரள மன்னர் மார்த்தாண்ட வர்மாவும் (1729-58) திருசெந்தூர் கோயிலுக்குத் திருப்பணிகள் செய்துள்ளார். உதய மார்த்தாண்ட கட்டளை என்ற பெயரில் இன்றும் அவர் பெயரில் அதிகாலை வழிபாடு நடத்தப் படுகிறது.

மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்களில் தலைசிறந்தவர் திருமலை நாயக்கர். இவரது ஆட்சிக் காலத்தில் கேரளக் கடற்கரையின் கொச்சித் துறைமுகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் நெடுநாட்களாக வியாபாரம் செய்துவந்த போர்ச்சுகீசியர்களுடன் திருமலை நாயக்கரது அரசு வியாபார ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தது. இந்தக் காலகட்டத்தில் கிழக்கு, மேற்குக் கடற்கரைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதிகளில் டச்சுக் காரர்களும் வர்த்தகத்தில் இறங்கத் தொடங்கினர். அவர்களது வர்த்தகத்தால் கவரப் பட்ட திருமலை நாயக்கர், 1646-ஆம் ஆண்டு டச்சுக் காரர்கள் காயல்பட்டினத்தில் வணிகத் துறைமுகமும், கோட்டையும் அமைத்துக் கொள்ள அனுமதி அளித்தார் போர்ச்சுகீசியர்களுடனான ஒப்பந்தத்தை ரத்து செய்தார்.

இதனால் ஆத்திரமடைந்த போர்ச்சுகீசியர்கள் ஏராளமான சரக்குகளுடன் காயல் துறைமுகத்துக்குச் சென்று கொண்டிருந்த டச்சுக் கப்பல்களைத் தாக்கி அழித்தனர். கோட்டையைக் கைப்பற்றி, அங்கிருந்த டச்சுக் காரர்களையும் விரட்டியடித்தனர். டச்சுக்காரர்கள், இலங்கையின் கடற்கரைப் பகுதிகளை ஏற்கனவே காலனிப் படுத்தியிருந்த டச்சு கவர்னரிடம் முறையிட, உடனடியாக டச்சுப் படைவீரர்கள் பல படகுகளுடன் மணப்பாடு துறை வழியாக மன்னார் கடற் கரைப் பகுதிகளில் உட்புகுந்தனர். வீரராமபட்டிணம் என்ற ஊரில் இருந்த போர்ச்சுகீசிய சர்ச்சை முதலில் கையகப் படுத்திய பின், அவர்கள் திருச்செந்தூர் கோயில் உட்புகுந்து அதனையும் ஆக்கிரமித்தனர். பீரங்கித் தளவாடங்களுடன் கோயிலை தங்கள் கொத்தளமாக மாற்றினர்.

இது கண்ட அப்பகுதி மக்கள் பீதியும், வருத்தமும், கோபமும் அடைந்தனர். மன்னரிடம் முறையிட்டனர். மன்னர் திருமலை நாயக்கர் சரக்குகளுக்கு நஷ்டஈடு வழங்குமாறும், திருச்செந்தூர் கோயிலை உடனடியாகக் காலி செய்யுமாறும் டச்சுக்காரர்களுக்கு உத்தரவிட்டார். டச்சுக் காரர்கள் அந்த உத்தரவை மதிக்காதது மட்டுமல்ல, சுற்றுவட்டாரத்திலுள்ள ஊர்களுக்குச் சென்று அவற்றைக் கொள்ளையிட்டு, சூறையாடவும் தொடங்கினர். தாங்கள் வெளியேற வேண்டுமானால் 40,000 டச்சு நாணயங்கள் (சநயடள) பணயமாகத் தரப்படவேண்டும் என்றும் மிரட்டல் விடுத்தனர். தங்களால் இயன்ற அளவு பணயத் தொகை கொடுப்பதாகச் சொல்லிய ஊர்மக்களின் வேண்டுகோளை டச்சுக் காரர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்த ஆக்கிரமிப்புக்கும், அச்சுறுத்துதலுக்கும் எதிராகத் திருச்செந்தூர் மக்கள் திரண்டெழுந்து போரிட்டனர். கோயிலிலிருந்து டச்சுக் காரர்களை அகற்றுவதற்காக நடந்த இந்தக் கிளர்ச்சிப் போரில் ஏறத்தாழ நூறு பேர் மாண்டிருக்கலாம் என்றுஇந்துக்களின் வாழ்க்கையில் ஆலய வழிபாடு முக்கியத்துவம் பெறுகிறது. ஆகம விதிமுறைப்படி சிற்ப சாஸ்திர மரபுக்கிணங்கக் கட்டப்பட்டிருக்கும் ஆலயங்களில் வழிபடு தெய்வத்தின் திருவுருவம் ஆகமநெறிமுறைக்கு அமையப் பிரதிஸ்டை செய்யப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் வணங்கும் இறைவனுக்கு, அவன், ஒரு நாமம் ஒருருவம் இல்லாத வனாயிருப்பினும் நமது ஆன்ம ஈடேற்றத்துக்கு உதவும் வகையில் நமது முன்னோர்கள் கற்பித்துத் தந்த உருவங்களை நாம் அமைக்கின்றோம். நமது பரம்பொருள் அங்கிங்கெனாதபடி இப் பிரபஞ்சம் எங்கணும் பரந்து நிறைந்து கரந்திருப்பினும், அவனோடு நாம் கலந்துறவாடுவதற்கு வாய்ப்பாக ஆலயங்களை அமைக்கின்றோம்.

இவ்வாறு அமைக்கும் ஆலயக் கட்டடங்களும், அங்கு ஸ்தாபிக்கப்படும் திருவுருவங்களும் "இறைவன் நூல்" ஆகிய ஆகமங்கள் என்னும் மிகப்பழைய நூலில் சொல்லியிருக்கும் முறைகளில் கட்டப்பட்டிருப்பினும் இன்றைய நவீன அறிவியல் நோக்கிலே பார்க்கும் போதும் அவை இப்பிரபஞ்சமெங்கும் வியாபித்திருக்கும் சக்தியைத் தேக்கி எமக்கு வழங்கும் முறையிலே அமைந்திருக்கின்றன என்பதைச் சிறிது ஆராயின் அறியலாம்.

அவ்வாறு அமைப்பு முறைகளை ஆராய்வது ஒரு புறமிருக்க, அங்கு இறையருட்சக்தியை ஏற்படுத்துமுகமாக நிகழ்த்தப்பெறும் கிரியைகள் யாவும் தத்துவ உட்பொருள் வாய்ந்தவையாகவும் விஞ்ஞான பூர்வமாகவும் - பிரபஞ்ச சக்தியைத் தேக்கித் தரும் செயல்முறைகளாக இருக்கின்றன என்பது வியப்புக்குரிய செய்தியாகும்.

அத்தகைய கிரியைகளில் பிரதி'டா மஹாகும்பாபி'க வைபவத்திலே பிரதானமாக அமைக்கப்படும் யாகசாலைகளில நிகழும் கும்பபூஜைகளைத் தொடர்ந்து நிகழும் குண்டபூஜை அல்லது அக்னிகார்யத்திலே காணப்படும் பிரபஞ்ச தத்துவத்தையே நாம் இங்கு பிரதானமாக நோக்கபோகிறோம்.

மின்சார சக்தியை நாம் மின்கலங்களில் சேமிப்பதுபோல, இறைசக்தியைப் பிரபஞ்ச சக்தியாக கருவறையிலுள்ள விக்கிரகத்தில் சேமிக்கின்றோம். மின்கலத்தில் சேமிப்பதற்கு வேண்டிய மின்சாரத்தை உண்டாக்குவதற்குச் சில செயற்பாடுகள் தேவை என்பது போல இறைசக்திச் சேமிப்பிற்குச் சிவாகமக் கிரியைகள் தேவை. பிரபஞ்சமெங்கும் பரந்திருக்கும் சக்தியை ஒருங்கு குவிப்பதற்கு ஐம்பூதங்களினூடான கருதப்படுகிறது. இவர்களில் மன்னரின் படைவீரர்களும், ஊர்மக்களும் அடங்குவர்.

சுப்பிரமணிய சுவாமியின் திருவுருவச் சிலை உள்ளிட்ட கோயில் சொத்துக்கள் பலவற்றைக் கொள்ளையிட்ட டச்சுக் காரர்கள், அடுத்த கிளர்ச்சி தொடங்கு முன் தப்பிக்கத் திட்டமிட்டு கப்பல்களில் கிளம்பத் தொடங்கினர். போரைத் தவிர்க்க விரும்பிய நாயக்கர், தமது தூதராக வடமலையப்ப பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவரை அனுப்பி, கோயில் சொத்துக்களைத் திருப்பித் தருமாறு டச்சுக் காரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். மன்னரின் மனக்கருத்தை அறிந்த டச்சுக்காரர்கள் பணயத் தொகையை 100,000 டச்சு நாணயங்களாகக் கூட்டினர்இந்த நடவடிக்கைகள் டச்சுக் காலனிய அதிகார பீடங்கள் வரை எட்டின. பிரசினை வலுக்குமுன், கிடைத்த பணயத் தொகையைப் பெற்றுக் கொண்டு விலகுமாறு டச்சு கவர்னர் ஆணையிட்டார். இவ்வாறாக, செந்திலாண்டவன் திருவுருவச் சிலையும், கோயில் சொத்துக்களும் மீட்கப் பட்டன.

இந்த சம்பவம் நடந்து, பின்னர் கோயில் கும்பாபி'கம் 1651ம் ஆண்டு நடைபெற்றதாக வடமலையப்ப பிள்ளையின் கல்வெட்டிலிருந்து அறியப் படுகிறது.

இந்த வரலாற்றுச் சம்பவம் பற்றி நாட்டார் கதை வழக்குகளிலும், இலக்கியங்களிலும் வேறு விதமான குறிப்புகள் உள்ளன. கோயிலைக் கொள்ளையடித்த டச்சுக் காரர்கள், கப்பல்களில் ஏறித் தப்புவதற்கு முன் அதனை பீரங்கிகளால் தகர்த்து அழிக்க முயன்றனர், அது முடியவில்லை விக்கிரகங்களை உருக்கித் தங்கத்தை எடுத்துச் செல்லலாம் என்று முயன்ற போது, விக்கிரகங்களை உருக்க முடியாமல், அப்படியே எடுத்துக் கப்பலில் போட்டனர். கப்பல் கிளம்பியவுடன், பெரும் கடல் கொந்தளிப்பு ஏற்பட்டது, சூறைக் காற்று அடித்தது. கப்பல் நிலைகுலைந்தது. கோயில் விக்கிரகங்களைக் கடலிலேயே எறிந்து விட்டு டச்சுக் காரர்கள் ஓடிவிட்டனர்.

அப்போது திருநெல்வேலியில் ராஜப் பிரதிநிதியாக இருந்த வடமலையப்ப பிள்ளை தீவிர முருக பக்தர். சுவாமியின் உருவச் சிலையை டச்சுக் காரர்கள் கொள்ளையிட்டது பற்றிக் கேள்விப் பட்டுப் பெரிதும் வேதனையுற்ற அவர், அதே போன்ற பஞ்சலோக விக்கிரகங்களை வடிவமைத்து பிரதி'டை செய்வதற்காக திருச்செந்தூருக்கு எடுத்து வந்தார். அப்போது வடமலையப்பரது கனவில் முருகப் பெருமான் தோன்றி, கடலில் சென்று தனது திருவுருவச் சிலையை மீட்குமாறு பிள்ளைக்கு ஆணையிட்டார். அதன் படி, கடலில் ஓரிடத்தில் எலுமிச்சம்பழம் ஒன்று முழுகாமல் மிதக்கும் என்றும் அந்த இடத்தைச் சுற்றி வானில் கருடன் வட்டமிடும் என்றும் அங்கு தான் சிலை கிடைக்கும் என்றும் கனவு உரைத்தது. வடமலையப்பர் கடலில் இறங்கியபோது, அந்த அடையாளங்களுடன் இருந்த இடத்தில் தெய்வச் சிலைகள் கிடைத்தன. அவற்றை மகிழ்ச்சியுடன் எடுத்து வந்து கோயிலில் பிரதி'டை செய்தார். அவர் கட்டிய வடமலையப்ப பிள்ளை மண்டத்தில் இன்றும் ஆவணி, மாசி மாத விழாக்களின் போது அவர் பெயரில் கட்டளைகள் நடைபெறுகின்றன. அந்த மண்டபத்தில் உள்ள கல்வெட்டில் மேற்சொன்ன தகவல்கள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்றிமலைக் கவிராயர் எழுதிய திருச்செந்தூர் தல புராணத்திலும், பிள்ளையைப் புகழ்ந்து எழுதப் பட்ட "வடமலை வெண்பா" என்ற நூலிலும் இந்த தெய்வச் செயல் பற்றிய செய்திகள் உள்ளன.

இந்த நாட்டார் மரபின் பல செய்திகள் வரலாற்றுத் தகவல்களே என்பதில் ஐயமில்லை. காலனிய வரலாற்றை எழுதிய எம்.ரென்னல் என்பவரது நூலில் (A Description, Historical and Geographical, of India published in Berlin, 1785) திருச்செந்தூர்க் கோயில் பற்றிய செய்திகள் உள்ளன. டச்சுக் கம்பெனியின் படைத்தலைவர் ஒருவரிடமிருந்து தனக்குக் கிடைத்த விவரங்கள் இவை என்று அவர் குறிப்பிடுகிறார் "1648ல் திரும்பி வரும்போது கடற்கரையில் இருந்த கோயிலை அழிக்க முயற்சி செய்தனர். பீரங்கிகள் கொண்டு கனரக வெடிகுண்டுகள் அந்தக் கோயில் மீது பொழியப்பட்டன. ஆயினும் அதன் கோபுரம் இவற்றுக்கு சிறிது கூட அசைந்து கொடுக்கவில்லை. லேசான சேதாரம் மட்டுமே ஏற்பட்டது"

இந்த மீட்சிக்குப் பின்னர் பல திருப்பணிகள் நடந்தேறின. திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் தேசிகமூர்த்தித் தம்பிரான் ராஜகோபுரம் எழுப்பினார். 1862ல் கோயிலின் பல பகுதிகள் சிதிலமடைந்திருந்ததைக் கண்ட மௌன சுவாமி என்கிற துறவி ஆலயத்தை எடுத்துக் கட்டி, மேலைக் கோபுர வாசலையும் புதுப்பித்தார். இவர் எங்கிருந்து வந்தவர், எந்த ஊரைச் சேர்ந்தவர் போன்ற எந்த விவரமும் இல்லை. முழுமையாக மௌனவிரதத்தில் ஆழ்ந்திருந்த இவர் கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு விபூதி வழங்கியும், மணலில் எழுதிக் காட்டியுமே, திருப்பணிக்குத் தேவைப் பட்ட பணத்தைச் சேர்த்தார். 1872ல் காசியிலிருந்து வந்த காசி சுவாமி என்பவர் ஊரூராகச் சென்று திருப்பணிக்கு பொருட்கள் சேகரித்து இவருக்கு உதவினார். சண்முக விலாசம், வசந்த மண்டபம், பிராகாரங்கள் ஆகியவை இந்தக் காலகட்டத்திலேயே விரிவு செய்யப்பட்டன. பின்னர் ஆறுமுக சாமி (1885-1940) என்ற அடியார் திருச்செந்தூர் கோயிலின் திருப்பணிக்காகத் தன் வாழ்வு முழுவதையும் அர்ப்பணித்தார். இவ்வாறு விரிவாக்கம் செய்யப் பட்ட கோயிலின் கும்பாபிஷேகம் 1941ஆம் ஆண்டு மிகச் சிறப்பாக நடந்தேறியது.

கோயில் நிர்வாகத்திலும் பல மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. நாயக்க மன்னர்கள் காலத்தில் பல கோயில்களில் பூஜை முறைகள் மாற்றியமைக்கப் பட்டது போல இங்கும் துளுவ பட்டர்களான போற்றிகள் (போத்தி) என்னும் அர்ச்சக சமூகத்தினர் பூஜைகளுக்கு உரியவர்களாக நியமிக்கப்பட்டனர். முக்காணியர்கள் (த்ரிஸ்வதந்திரர்கள்) எனப்படும் அந்தண சமூகத்தினரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கோவில் வழிபாட்டு முறைகளில் பங்குபெறுபவர்கள். மன்னர்கள், துறவிகள், மடங்கள் மட்டுமல்லாது, எல்லா சமூகத்து மக்களும் இந்தக் கோவிலுடன் தொடர்பு கொண்டு முருகனை வழிபட்டு வந்ததற்கான ஆதாரங்கள் உள்ளன. சான்றோர் எனப்படும் நாடார் சமூகத்தினர் காலனிய வரலாற்றில் கடைநிலை சாதியினராக சித்தரிக்கப் பட்டனர். ஆனால் அவர்கள் பல தலைமுறைகளாக திருச்செந்தூர்த் திருக்கோயிலில் வழிபட்டு வந்ததற்கான கல்வெடுச் சான்றுகள் கோயிலுக்குள்ளேயே உள்ளன. "பஞ்சமர்களான மனிதர்களும் (ந்ருணாம் அந்த்யஜானாம்) தன்னை வந்து வழிபடுமாறு அருள் வழங்கும் தெய்வம் இந்தக் குகனை விட்டால் வேறு யார்?" என்று சுப்பிரமணிய புஜங்கத்திலும் ஓர் வரி உள்ளது.

கோயில் நிர்வாகங்களில் இப்போதிருப்பது போலவே மன்னர் காலங்களிலும் ஊழல்கள் இருந்தன. 1800களில் புதிதாக வந்த திருச்செந்தூர்க் கோயில் அதிகாரி ஒருவர் பற்றி கோயில் பணியாளர் எழுதிய தனிப்பாடல் ஒன்று சுவாரசியமானது. புட்டுக்குப் பதிலாக தவிடு நிவேதனமாகிறதாம், சாப்பாட்டுக்கு வழியில்லாமல் யானைகளே வற்றலாகி விட்டனவாம். அதை எங்கே போய்ச் சொல்வது? முருகனிடமே முறையிடுகிறார் புலவர் - கொட்டை கட்டி மானேஜர் செங்கடுவாய் வந்த பின்பு சுத்த வட்டையானதென்ன சொல்வாய் குருபரனே!

வேலவர்க்கு முன்னிற்கும் வீரவாகு தேவருக்கு சாயரட்சை புட்டு தவிடோ குருபரனே! மாநிலத்தில் காய்கனி கிழங்கு வற்றல் சொல்லக் கேட்டதுண்டு செந்தூரில் ஆனை வத்தலானதென்ன ஐயா குருபரனே.

நன்றி: கொங்குதேர் வாழ்க்கை எஸ்.சிவகுமார் யுனைடெட் ரைட்டர்ஸ் வெளியீடு) பற்பல பக்தி இலக்கிய நூல்களில் திருச்செந்தூர் இடம் பெறுகிறது. சுவாமிநாத தேசிகர் எழுதிய திருச்செந்தூர்க் கலம்பகம், குமரகுருபரரின் கந்தர் கலி வெண்பா, கந்தசாமிப் புலவர் எழுதிய திருச்செந்தூர் நொண்டி நாடகம், தேவராய சுவாமிகள் எழுதிய கந்த ச'டி கவசம், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் எழுதிய திருச்செந்தில் பிரபந்தம், அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்து ஆகியவை குறிப்பிடத் தக்கவை. துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் செருக்குப் பிடித்த தமிழ்ப் பண்டிதர்களை வாதில் முறியடிக்க திருச்செந்தூர் நிரோட்ட யமக அந்தாதி என்ற நூலை எழுதினார். இந்த நூலின் பாடல்கள் முழுவதையும் படிக்கையில் உதடுகள் ஒட்டவே ஒட்டாத வகையிலான சொற்களைக் கொண்டு இயற்றப் பட்டிருக்கிறது. (நிரோட்ட ஸ்ரீ நிரோஷ்ட ஸ்ரீ நிர் ஓஷ்ட, உதடுகள் இல்லாமல் என்ற பொருள் தரும் சம்ஸ்கிருதச் சொல்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கயிலை மலை அனைய செந்திற்பதி வாழ்வே
கரிமுகவன் இளைய கந்தப் பெருமாளே" என்றும்

"சிந்துரமின் மேவு போகக்கார
செந்தமிழ் சொல்பாவின் மாலைக் கார
செந்தில் நகர் வாழும் ஆண்மைக்கார பெருமாளே"

என்றெல்லாமும் செந்திலாண்டவனைப் பாடிக் களிக்கிறது அருணகிரி நாதரின் திருப்புகழ்.

பகழிக் கூத்தர் என்ற வைணவர் எழுதிய திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழ் என்பதும் ஒரு அருமையான நூல். இதில் பல்வேறு வகையான முத்துக்களின் பெயர்களைக் கூறி, இவை எல்லாவற்றிற்கும் விலை உண்டு, ஆனால் உன் கனிவாய் முத்தத்திற்கு விலை இல்லை என்று சொல்லும் பாடல்

படிக்கும் தோறும் இன்பம் தருவது.
கத்தும் தரங்கம் எடுத்தெறியக்
கடுஞ்சூல் உளைந்து வலம்புரிகள்
கரையில் தவழ்ந்து வாலுகத்திற்
கான்ற மணிக்கு விலையுண்டு
தத்துங் கரட விகடதட
தந்திப் பிறைக்கூன் மருப்பில்விளை
தரளம் தனக்கு விலையுண்டு
தழைத்துக் கழுத்து வளைந்தமணிக்
கொத்துஞ் சுமந்த பசுஞ்சாலிக்
குளிர்முத் தினுக்கு விலையுண்டு
கொண்டல் தருநித் திலந்தனக்குக்
கூறுந் தரமுண்டு உன் கனிவாய்
முத்தம் தனக்கு விலைஇல்லை
முருகா முத்தம் தருகவே
முத்தம் சொரியுங் கடலலைவாய்
முதல்வா முத்தம் தருகவே.

(கத்தும்-முழங்கும் தரங்கம்-அலை கடுஞ்சூல்-கடுமையான கர்ப்பம் உளைந்து-வருந்தி வாலுகம்-வெண்மணல் கான்ற மணி சொரிந்த முத்து கரடம்-மதம் பிடித்த் விகடம்-கூத்தாடுகின்ற் தடம்-மலை போன்ற் தந்திப் பிளைக்கூன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருப்பு-யானையின் பிறைச் சந்திரன்போல் வளைந்திருக்கின்ற கொம்பு தரளம்-முத்து சாலி-நெல் கொண்டல்-மேகம் நித்திலம்-முத்து கனிவாய் முத்தம்-கொவ்வைக் கனிபோன்று வாயின் முத்தம்)

செந்தூர்க் கடற்கரையில் நின்று கொண்டு கடல் அலைகளின் நடனத்தையும், கந்தனின் திருக்கோயிலையும், பக்தர்களின் பேராரவாரத்தையும், மணலில் ஓடிவிளையாடும் குழந்தைகளையும் பார்ப்பதும், "ஓங்காரத்து உள்ளொளிக்கு உள்ளே முருகன் உருவம் கண்ட" பின், அதன் எதிரொலியை மகா சமுத்திரத்தின் அடிநாதமாக உணர்வதும் ஓர் பேரானந்த அனுபவம்.

2004ஆம் ஆண்டில் சுனாமியின் அதி பயங்கர ஆழிப் பேரலைகள் கூட செந்தூர்க் கோவிலைத் தொட்டுத் தழுவி, வணங்கிச் சென்று விட்டன.. காலங்காலத்திற்கும் கந்தனின் அடியார்களை ஆர்ப்பரித்து அழைத்து வருவன அல்லவோ அந்த அலைகள்!

*நம: ஸிந்தவே ஸிந்துதேசாய துப்யம்*
*புன: ஸ்கந்தமூர்த்தே நமஸ்தே நமோஸ்து*
*கடலே, உனக்கு நமஸ்காரம்,*

கடல்தேசத்தானே, கந்தனே, கடவுளே, உனக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம்.

(இக்கட்டுரையை எழுதியவர் ஜடாயு என்ற புனை பெயரில் எழுதி வரும் பிரபலமான எழுத்தாளர். ஹிந்து மரபுகளில் ஆழ்ந்த பற்றுறுதியும் தமிழியல் ஆர்வமும் கொண்ட இவரது இ,யற்பெயர் சங்கரநாராயணன் என்பது.. சிறப்பு மிக்க எழுத்தாளரான தமிழகத்தைச் சேர்ந்த இவர் பங்களூரில் தொழில் நிமித்தமாக வாழ்கிறார்.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருணகிரிநாதரின் மூன்று விருத்தங்கள்

**ச. லலீசன் (M. A. (தமிழ்) M. Ed.)**
**விரிவுரையாளர்,**
**கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.**

தமிழ்மொழியில் இனிய பக்திப் பளுவல்கள் பல இயற்றப்பட்டுள்ளன. தமிழ் மொழியில் இனிய பக்திப் பனுவல்கள் பல இயற்றப்பட்டுள்ளன. இறை உணர்வை வெளிப்படுத்தவல்ல பாக்களாகக் காலத்திற்கேற்ற கவித்துவத்துடன் இவை மலர்ந்துள்ளன.

இசைப் பாடல்கள் எளிதில் மக்கள் மனங்களை வெல்லும் ஆற்றல் படைத்தவை இசையோடு பாடல்களைப்பாடும் தேவையை நிறைவேற்றும் வகையில் விருத்தப்பா செல்வாக்குப் பெற்றதாகக் கொள்ள முடியும்.

## விருத்தப்பா

விருத்தப்பா என்ற பா வடிவம் சங்க காலத்தில் தோன்றியிருக்கவில்லை. சங்ககாலப் புலவர்கள் ஆசிரியப்பாவிற்கே முதன்மை வழங்கினர். அதைத் தொடர்ந்து வெண்பாவைக் கையாண்டனர். இசையோடு பாடும் ஆவலைப் பூர்த்தி செய்ய “கலிப்பாவை” அறிமுகம் செய்தனர். கற்றறிந்தார் ஏத்தும் கலித்தொகை என இதற்குச் சிறப்புச் சேர்த்தனர். துள்ளல் ஓசையுடைய பாவாக இதனைக் கருதினர்.

இதேபோலப் “பரிப்பா” என்ற பாவினதும் சங்க காலத்தில் இசைத் தன்மையை வழங்கக் கையாளப்பட்டது. ”ஓங்கு பரிபாடல்” என இது பாராட்டப்பட்டாலும் தனியான ஒரு பாவினமாக இலக்கணகாரர் இதனை அங்கீகரிக்கவில்லை.

பல்லவர் காலத்தில் பக்திநெறியின் வளர்ச்சி உச்சநிலை பெற்றமையால் இசைப்படாடல்களும் முக்கியத்துவம் பெற்றன. பாவகைகள் என ஆசிரியம்,வஞ்சி, கலி, வெண்பா ஆகிய நான்கையும் பார்த்த தன்மையில் இருந்து வேறுபட்டு பாவினங்கள் என வகுக்கும் நிலை தோன்றியது.

பாவினம் என்பது துறை, தாழிசை, விருத்தம் என்ற மூன்றினையும் கொண்டதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலப்பதிகாரத்தில் உள்ள கானல்வரி, வேட்டுவவரி, குன்றக்குரவைப் பாடல்கள், விருத்தப்பாவின் தோற்றத்திற்கு வழிவகுத்ததாகக் கூறுவர்.

தமிழிலக்கிய வரலாற்றில் விருத்தப்பாவை அறிமுகம் செய்தவராகக் காரைக் காலம்மையார் கொள்ளப்படுகிறார்.

முதல் அடியில் எத்தனை சீர்கள் வருகின்றனவோ அதே சீர்கள் ஏனைய அடிகளிலும் வருமாறு ஓசை இனிமையுடையதாய் விருத்தம் அமையும்

பல்லவர் கால நாயன்மார்களும், ஆழ்வார்களும், பக்தி இயக்கத்தைப் பரப்புவதற்கு விருத்தப்பாவையே ஊடகமாகக் கொண்டனர். விருத்தப்பாவின் சுவையை உச்சமாகக் கையாண்டவராகக் கம்மர் விளங்குகின்றனார். "விருத்தம் என்னும் ஒண்பாவிற்கு உயர்கம்பன்" எனக் கம்பர் பாராட்டப்பட்டார்.

விருத்தப்பாவின் தீஞ்சுவையைக் கருதி தனது பாக்களையும் இதே யாப்பில் அருணகிரிநாதரும் அமைத்தார்.

## அருணகிரி நாதர் கால விருத்தம்

அருணகிரிநாதர் பிரபுடதேவராயன் காலத்தவர் இதனை விஜயநகர நாயக்கமன்னர் காலம் என இலக்கிய வரலாற்றாசிரியர்கள் குறிப்பர். இக்காலத்தில் புலவர்களிடையே கவித்துவச் செருக்குப் போட்டி நிலைமையும் காணப்பட்டன.

இதனால் கடினமான சொற்களைக் கையாண்டு இசைப்பாடல்களைப் பாடும் நிலை அருணகிரியாருக்கு ஏற்பட்டது.

இவரைப் பற்றிய செவிழிக் கதைகள் பல உள. சிற்றின்பத்தில் திளைத்துப் பின் முருகன் அருளால் பக்திப் பனுவல்களை பாடும் பேறு பெற்றார்.

அருணகிரியாரது பாடல்கள் அனைத்தும் இசைமயமானவை, பல்லவர் காலத்தின் பின் தோன்றிய பக்திப்பாடல்களில் பொது மக்களிடம் மிகுந்த செல்வாக்கை இவை பெற்றன. இதனால் இசைக்கச்சேரிகளிலும் இவரது பாடல்களைச் சேர்த்துக் கொண்டனர். "பஞ்சபுராணம்" பாடுவதாக நினைத்துக் கொண்டு ஆறாவதாகத் திருபபுகழைபாடும் நிலைமைகரு உள்ளாயினர்.

அருணகிரியாரின் கவித்துவத்தில் மயங்கிய தாயுமானவர், "ஐயா அருணகிரி அப்பா உனைப் போல் மெய்யாக ஒரு சொல் விளம்பினர் யார்?" என்று பாராட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணகிரியார் பாடியுள்ள தலங்கள் 195 எனக் குறிப்பர். இவர் பாடிய நூல்களாக பின்வருவன அமையும்.

| நூல் | | பாடல்கள் |
|---|---|---|
| திருப்புகழ் | - | 1330 |
| கந்தலங்காரம் | - | 108 |
| கந்தரந்தாதி | - | 102 |
| கந்தரனுபூதி | - | 51 |
| வேல்விருத்தம் | - | 10 |
| மயில் விருத்தம் | - | 10 |
| சேவல் விருத்தம் | - | 12 |
| திரு எழுகூற்றிருக்கை | - | 01 |
| திருவகுப்பு | - | 18 |

## வேல் மயில் சேவல் விருத்தங்கள்

*"ஆடும் பரிவேல் அணிசேவல் எனப்*
*பாடும் பணியே பணியாய் அருள்வாய்"*

எனக் கந்தரநுபூதியில் அருணகிரியார் முருகனிடம் வரம் கேட்கிறார். ஆடும்பரி என்பது மயிலைக் குறிக்கிறது பரி என்பது குதிரையைக் குறிப்பதாயினும் விரைவு பற்றியும் ஆடும் தன்மைபற்றியும் மயிலைக் குறிப்பதற்கு" ஆடும்பரி" என்ற தொடரை அருணகிரியார் கையாண்டார்.

மயில் "ஓம்" என்ற பிரணவ சொரூபத்தின் அடையாளம் வேல்அறிவின் உருவாக விளங்குகிறது. வேலை வணங்குவதே நமக்கு வேலை என மேலோர் குறிப்பிடுவர். சேவல் நாத தத்துவம். இப்பாக்கள் யாவும் பன்னிரண்டு சீர்களால் ஆனவை 4 அடிகளைக் கொண்டவை

## வேல் விருத்தம்

"வேல் விருத்தம்" 10 விருத்தப்பாக்களால் அமைந்த நூல். பாடல்கள் யாவும் வேலின் பெருமையை எடுத்தாள்கின்றன. ஆறுமுகப்பெருமான், அசுரர்களின் படையை அழியுமாறு விடுத்தருளிய வேல் பெருமை மிக்கது என முதலாவது பாடல் அமைந்துள்ளது. வேல் விடுக்கப்பட்டமையால் ஏற்பட்ட விளைவுளையும் பாடல் செப்புகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது பாடல் முருகனின் பெருமைகளை எடுத்துக்கூறி அவர் கையில் வேல் இருப்பதாகப் புகழ்கிறது. சிவனாருடைய கையில் சூலாயுதமும் திருமாலிடம் சக்கராயுதமும் தேவேந்திரனிடம் வச்ராயுதமும் இருந்தன. ஆனால் சூரனையும் அவனுடைய குலத்தையும் அழிப்பதற்கு முருகனது திருக்கைவேலே வலிமை கொண்டிருந்தது என அமைந்துள்ளது.

மூன்றாவது பாடல் முருகன் அமர்ந்து அருள்சொரியும் திருத்தலங்களைக் குறிப்பிடுகிறது. இதில் இலங்கையில் கதிர்காமம் பறிய குறிப்பும் இடம் பெறுகிறது. அத்துடன் தேவர்களைக் காப்பது முருகன் திருக்கை வேலே எனவும் கூறப்படுகிறது.

நான்காவது பாடல் "அஞ்சேல் என்று இன்னுரை கூறிக் காப்பது வேலாயுதமே எனவும் சுழலும் சிறப்பினால் எல்லா உலகங்களையும் அச்சம் கொள்ளச் செய்வது வேலாயுதம் எனவும் குறிப்பிடப்படுகிறது.

ஐந்தாவது பாடல் வேலாயுதம் அடியவர்களுக்கு நல்கும் ஆனந்தத்தை எடுத்தியம்புகிறது.

ஆறாவது பாடல் முருகப்பெருமானின் திருக்கைவேலே இந்திரற்கு அரசு தந்தது என தேவமாதர் பாடிப்பரவுவதாகக் கூறுகின்றது.

ஏழாவது பாடல் திருமாலின் மருகருடைய வேலாயுதம் சூரசங்காரம் செய்த சிறப்பைக் கூறுகின்றது.

எட்டாவது பாடல் வேலானது இந்தராதி இமையவர்களின் சிறையை நீக்கியது எனவும். அதனை முனிவர்கள், தேவர்கள், நக்கிரர் முதலியோர் வணங்கி நின்றனர் எனவும் கூறுகின்றது.

ஒன்பதாவது பாடல் ஏழு கடல்களும் மலைகளும் முருகவேளின் வேலாயுதத்தைச் சரணடைந்து துதி செய்கின்றன என்று கூறுகின்றது.

பத்தாவது பாடல் விநாயகருடைய தம்பியாகிய முருகன் கைவேல் அசுரர்களை அழித்து அருளியதாகக் குறிப்பிடுகிறது.

## மயில் விருத்தம்

இவ்விருத்தங்கள் திருத்தணிகையில் பாடப்பட்டன . மயில்விருத்தத்தின் காப்புச் செய்யுள் விநாயகரைத் துதி செய்கிறது. விநாயகரது பெருமைகளைக்கூறி அவரது தம்பியாகிய நீ உனது சீதள பாதத்தை எனக்கு அருளுவாயாக என அருணகிரியார் வேண்டுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடரும் பாடல்களில் முருகன் ஏறிவருகின்ற மயில்தான் விநாயகருடன் போட்டியில் உலகங்களை ஒரு நொடியில் வலம் வந்தது என்கிறார் ஆதிசேடன் அஞ்சவும், சூராதியவுணர் திடுக்கிடவும் நடக்கின்றது மயில் என்கிறார். தணிகை முருகனுடைய மயில்தான் சிவமூர்த்தியும் உமாதேவியும் உளம் மகிழ நடம் புரிகின்றது என்கிறார். இம்மயில்தான் கடல்வற்றவும் மலைகள் சிதறவும் பறக்கிறது என்கிறார்.

எல்லா அண்டங்களையும் தனது முட்டைகளை அணைக்குமாப்போல் தணிகை முருகனுடைய மயில் தனது சிறகினால் அணைக்கிறது என்கிறார் . இம் மயில்தான் நாகங்கள் நடுங்க, மலைகள் துகள்பட வையாளி இட்டு வரவல்லது என்கிறார். வாசுகி என்ற பாம்பை எடுத்து உதறவல்லது . கந்தசுவாமியின் மயிலே எனப்பெருமைப்படுத்துகிறார்.

இறுதிப்பாடல் மயில் விருத்தப்பாடல்கள் பத்தினையும் ஓதுவார்கள் சகல பதவிகளையும் பெற்றுப் பரகதி அடைவர் எனச் செப்புகிறது.

### சேவல் விருத்தம்

விநாயகரைக் குறித்த "காப்புச் செய்யுளுடன் ஆரம்பமாகும் இந்நூல் சேவலின் பெருமைகளை எடுத்தியம்புகிறது.

வேலாயுதம் ஏந்திய முருகனுடைய கொடியாகிய சேவல், அடியார்களின் இடர்களைந்தும், பரகதியைக் காட்டியும் இருவினை ஒப்புவரக் கருணை புரிந்தும் பூதப் பிசாசுகளை அடித்து விலக்கியும் உதவி புரிந்து மகிழ்வதாகக் குறிப்பிடுகின்றது.

யமன் எம்மைத் தொடரும் வேளையில் வேலும் மயிலும் காவலுக்கு வரவேண்டும் இதற்கு கூவி அருள்புரிவது சேவல்தான் எனக் குறிப்பிடுகிறார்.

அகத்தியருக்குத் தமிழை உபதேசித்தவர் முருகப்பெருமான். இவரது கொடி சேவற்கொடி. இது வேட்டுவர்களின் பலிக்களத்தில் இலை தழைகளைக் கொத்திக் கூத்தாடிக் கொக்கரிக்கும் என்கிறார்.

சிவகுருவும் எல்லாம் ஆனவரும் ஆகிய முருகப்பெருமானுடைய சேவல் பூதப்பிசாசுகளை வெருட்டி, இந்திரனுக்கு அரசு அளித்துத் தேவர் சிறை மீட்டு தன் சிறகுகளைக் கொட்டி ஆர்ப்பரித்துக் கூவும் என்றிறார்.

சேவல் "சரவணபவ" என்ற மந்திரத்தை ஓதுகிறது எனவும் வேல்களைக் கொத்தி விளையாடுவதாகவும் குறிப்பிடுகின்றார். எமதூதர்களையும் பூதப்பிசாசுகளையும் பந்தாடி வெற்றியுடன் சேவல் கூவுவதாகக் கட்டுகிறார்.

ஆறுபடை வீடுகளிலும் வாழ்கின்ற முருகப் பெருமானுடைய சேவல் அகில உலகங்களையும் ஒரு நொடிக்குள் வலம் வந்த மயிலைப் புகழ்வதாகவும் பாடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறைவுரை

இசைத்தன்மை கலந்த பாக்களுடாகப் பக்தியைப் பரப்ப முடியும் என்பதற்கு அருணகிரியாரின் பாடல்கள் சான்றாக விளங்குகின்றன.

வடமொழிச் சொற்கள் விரவிவர அருணகிரியார் தனது பாக்களைப் பாடியுள்ளமையால் தமிழ் இலக்கிய உலகில் தனித்துவமான செல்வாக்கை இவை பெற்றுக் கொள்ளவில்லை என்றே குறிப்பிட வேண்டும் ஆயினும் சந்த விருத்தம் என்ற வகையில் இவை சுவையுடைய பாக்களாகும்.

**(இன்று வட இலங்கையில் பிரபல சைவத்தமிழ்ச் சொற்பொழிவாளராக விளங்குபவர் ச.லலீசன் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர். இன்று ஏராளமான பட்டங்களைப் பெற்று புகழோடு விளங்குபவர். இவருக்கு முதன் முதலில் தொடர் சொற்பொழிவுக்கான சிறப்பு விருதாக "சிவத்தமிழ் சொல்லழகர்" (2001) தந்து சிறப்புச் செய்தது நமது நீர்வை கதிர்காம தேவஸ்தானமே)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குழந்தைப் பெருமானாம் கார்த்திகேயன்

சிவத்திரு. வ. குமாரசுவாமிஐயர்

சூரனாகிய கொடியோர் அழியவும், தேவர்களாகிய நல்லோர் வாழவும் அவதரித்தவன் கந்தப்பெருமான். அருவமாகவும், உருவமாகவும், அநாதியாகவும், பலவாகவும், ஒன்றாகவும், பிரம்மமாகவும் நின்ற பரசிவ சோதிப்பிழம்பு கருணை பொழிவும் ஆறுவதனங்களோடும் பன்னிரு கரங்களோடும் சரவணப் பொய்கையில் தாமரை மலரில் முருகப்பெருமானாக அவதாரம் செய்தருளியது.

அழகே உருவான முருகன் சரவணப்பொய்கையில் ஆடும் திருவளையாடல்களைக் கண்டு மெய்மறந்த திருமாலாதிய தேவர்கள் கார்த்திகை மாதர்கள் என்று அழைக்கப்பெறும் ஆறு முனிபத்தினிகளையும் அழைத்து முருகனுக்கு திருமுலைப்பாலூட்ட வேண்டும் என்று வேண்டினார்கள்.

*தீர்த்திகை கங்கை தன்னில் திகழ் சரவணத்தில் வந்த*
*மூர்த்திகைக் குழவியே போல் முதற்புரி ஆடல் நோக்கி*
*ஆர்த்திகை புறாத உள்ளத்து அரிமுதல் அமரர் யாரும்*
*கார்த்திகைத் தெரிவைமாரை விழித்திவை கழறலுற்றார்*

கார்த்திகை மாதர்கள் அறுவரும் சரவணப்பொய்கையை அணுகி எம்பெருமானைத் துதித்த போது "அடியார்கள் சிந்தையில் நினைப்பதை நிறைவு செய்பவன்" ஆகிய முருகன் அவர்கள் அறுவரின் பொருட்டு, ஆறு குழந்தைகளாக தன்னை பிரித்து நின்று அருளினான்.

*மறுவரும் ஆறலாகும் மாதர் மூவிருவர் தாமும்*
*நிறைதரு சரவணத்தின் நிமலனை அடைந்து போற்றி*
*உறுநர்கள் தமக்கு வேண்டிற்றுதவுவோன் ஆதலாலே*
*ஆறுமுக ஒருவன் வேறாய் அறுசிறார் உருவங் கொண்டான்*

கார்த்திகை மாதர் அறுவரும் ஆளுக்கொரு குழந்தையாய் பாலூட்டித் தாலாட்டி, சீராட்டிப் பாராட்டி வளர்த்தனர். அக்குழந்தைக் கடவுளும் பல லீலைகளைச் செய்து வளர்ந்தருளினன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு சிவனாரின் திருநுதலில் தோன்றி குழந்தையாய் வளர் குமரனை காண அம்மையப்பரும் ரி'பாரூடராக எழுந்தருளினர். அப்போது உள்ளத்தே தோன்றும் ஆசையின் அதிகரிப்பால். உமையவள் ஆறு குழந்தைகளையும் ஒன்றாக அணைக்க, அங்கே ஆறுமுகங்களும் பன்னிரு கரங்களுமாய்.. ஆறுமாமுகப்பெருமான் தோன்றினான்.. இவ்வாறு ஆறு திருமேனிகள் ஒருங்கிணைக்கப்பட்டதால் "ஸ்கந்தன்" என்றழைக்கப்பட்டான்.

அவ்வமயம், சிவபெருமானுக்கு இடப்பாகத்தே உமையவள் எழுந்தருள, இருவருக்கும் நடுவே குழந்தைக் குமரவேள் எழுந்தருளினான். இவ்வாறு மூவரும் ஒருங்கே அமைந்த காட்சி "சோமாஸ்கந்த வடிவம்" என்று போற்றப்படலாயிற்று. இதனைக் கண்ட கார்த்திகைப் பெண்கள் சிவபெருமானைப் போற்றித் துதித்து நின்றனர். எம்பெருமான் அவர்கள் மீது கருணை கொண்டு,


*கந்தனை நீர் போற்றிய கடனால் இவன் உங்கள்*
*மைந்தன் எனும் பெயராகுக மகிழ்வால் எவரேனும்*
*நுந்தம் பகலிடை இன்னவன் நோற்றாள் வழிபடுவோர்*
*தந்தங்குறை முடித்தே பரந்தனை நல்குவம் என்றான்*

"கார்த்திகை மாதர்களே, நீவிர் முருகனை வளர்த்ததால் இவன் உங்கள் மகன் என்ற பொருளில் கார்த்திகேயன் என்ற பெயர் பெறுவான். உங்கள் தினமான கார்த்திகை நாளில் யார் முருகனை வழிபடுகிறார்களோ அவர்களது குறைகளை நீக்கி இக சுகம் தருவதோடு பரசுகமும் அருளுவோம்" என்றருளினார் சிவபெருமான். நாமும் கார்த்திகையில் விரதமிருந்து கந்தன் திருவடிகளைப் பணிந்து அவனருளால் இன்புறுவோமாக.

**இன்று யாழகத்தில் புகழோடு விளங்கும் குமாரசுவாமி ஐயரவர்களுக்கு முதன் முதலில் சிறப்பு விருது வழங்கி கௌரவித்தது நமது தேவஸ்தானமே. (1988)**

**இன்று சீரிய கதாப்பிரசங்க விற்பன்னராக பாமரர் முதல் பெரியோர் வரை யாவரையும் மயக்க வல்லவராக விளங்கி வருகிறார்)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொதுவியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மஹாகும்பாபிஷேகம்


**வித்யா பூஷணம்,**
**பிரம்மஸ்ரீ ப. சிவானந்த சர்மா** B.A.(Hons)
**(கோப்பாய் சிவம்)**
**அமைப்பாளர், சர்வானந்தமய பீடம்.**


ஆலயமொன்றிலே திருவுருவத்தை ஸ்தாபித்து அங்கு தெய்வ சாந்நித்தியத்தை ஏற்படுத்துவதே மகாகும்பாபிஷேகம் என்னும் பெருவிழாவாகும். பிதிஷ்டை எனவும் இதனைக் கூறுவர். பிரதிஷ்டை என்பது நன்கு நிலைநிறுத்தல் எனப் பொருள்படும்.

பிரபஞ்சமெங்கும் பரந்து விரிந்து நிற்கும் பரம்பொருளைச் சிவாசாரியர் மந்திரம், பாவனை, கிரியைகளின் மூலமாக அக்கினியிலும், கும்பத்திலும் ஆவாகனம் செய்து வழிபட்டு அங்கு ஸ்தாபிக்கப்பட்ட திருவுருவத்திலே சேர்த்து நிலை பெற்றிருந்து ஆன்மகோடிகளுக்கு அருள்புரியுமாறு செய்தலே மஹாகும்பாபி'கேத்தின் நோக்கமாகும்.

இக் கிரியையின் தத்துவார்ந்த உட்பொருளை சிறிது சிந்திக்கலாம். இறைவன் பிரபஞ்சம் முழுவதும் பரவியுள்ளவன் என்பதும், கட்புலனாகாதவனாயும், உணர்வுகளுக்கு எட்டாதவனாயும், அதே நேரம் அடியார்க்கு எளியவனாகவும் இருப்பவன் என்பதும் சாஸ்திர நூற்றெளிவு.

பாலிலே தோன்றாது மறைந்திருக்கும் நெய்யைப் படிப் படியான கிரியை முறைகளினால் தோற்றுவித்து கையிலே பெறுவது போல,(பாலைக் காய்ச்சி தயிராக்கி அதனைக் கடைந்து வெண்ணெய் எடுத்து உருக்கி நெய்யைப் பெறுதல் படிமுறையான கிரியைகள்.) பிரபஞ்ச மூலங்களான பஞ்ச பூதங்களின் மார்க்கமாக படிப்படியாக பரம் பொருளை அண்மி வரச் செய்பவை கும்பாபிஷேகக் கிரியைகள்.

நிலம், நீர், காற்று, ஆகாயம் என்பன பஞ்சபூதங்கள். கலப்பினால் பஞ்சபூதங்களின் வடிவாக இருப்பவன், பரம்பொருள். பஞ்சபூதங்கள் வடிவமாக மட்டுமின்றி சூரியன், சந்திரன், யஜமானன் ஆகியனவும் சேர்ந்த அட்டமூர்த்திகளின் வடிவமாகவும் இறைவன் இருக்கிறான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகாய வடிவில் எங்கும் பரந்துள்ள ஆண்டவனை உணருதல் மிகவும் சிரமம். எமது புலன்களால் சிறிது உணரும் வகையில் வாயுவாக அவனை அறிதல் முதற்படி. வாயுவும் கண்ணால் தரிசிக்க முடிவதில்லை. அதற்கடுத்த படியில் அக்கினியாக ஆண்டவனைக் காண்கின்றோம். மூன்றாவது படி நீராக இறைவனை அறிதல். அதற்கும் அடுத்த படி எந்நேரமும், எல்லாவகைகளிலும் எம்மோடு தொடர்புற்றதும், நிலைபெற்றிருப்பதும், நாம் நிலைபெற்றிருக்க வகை செய்வதுமாகிய மண் என்னும் ஐந்தாவது நிலை. இந்நிலையில் இறைவனைக் கண்டு வழிபடுதலே எம்மானோர்க்கு இசைந்த எளிய நிலை. இவ வகையில் மண்ணோடு தொடர்பு கொண்டிருக்கும் கருங்கல்லும், செம்பு முதலிய உலோகங்களும் இறையருளை ஆகர்ஷித்து எமக்கு வழங்கும் பெருஞ்சக்தி வாய்ந்தவையாக இருக்கின்றன.

*ப்ரம்மண ஆகாசாத் ஸம்பூத:*
*ஆகாசத் வாயு:*
*வாயோரக்நி:*
*அக்நேராப:*
*அத்ப்ய: ப்ருதிவீ ;;*

என்று இந்தப் பஞ்ச பூதப் படிமுறையை எடுத்துக் கூறுகிறது தைத்திரிய உபநிஷத்து. இவ்வைந்தும் தழுவியதாகக் கும்பாபிஷேகக் கிரியைகள் அமைவது கண்கூடு. யாகசாலையில் ஆகாய வெளியும், காற்றும் உள்ளன. அங்கு அக்கினி வளர்க்கப்படுகிறது. கும்பங்களில் நீர் நிறைக்கப் பெற்று அதிலேயே இறையருட் சக்தி ஆவாகனமாகிப் பின் மூர்த்தியில் அபிஷேகமாகிறது. கும்பம் உருவாக்கப்பட்ட உலோகம் பிருதுவி அம்சம் மண்ணோடு தொடர்புபட்டது. (மண் குடமே பயன்படுத்தப்படுவதும் உண்டு). இறுதியில் அபிஷேகமாகி ஸ்தாபிஷகப்பெறும் ஸ்தானமும் பிருதுவியுடன் தொடர்பான கருங்கல் விக்கிரகம் அல்லது உலோக விக்கிரகமாகும்.

இத்தகைய பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் அநாவர்த்தனம், ஆவர்த்தனம், புனராவர்த்தனம் அந்தரிதம் என நால்வகைப்படுமென்று சிவாகமங்கள் வகுக்கின்றன. ஆலயம் இல்லாத இடத்தில் புதிதாக ஆலயம் அமைத்து அங்கு புதிதாக ஒரு மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்வது அநாவர்த்தனப் பிரதிஷ்டை. முன்பிருந்த ஆலயம் முற்றாக அழிந்து விட்டால், அவ்விடத்தில் மறுபடி ஓர் ஆலயத்தை அமைத்துக் கும்பாபிஷேகம் செய்தல் ஆவர்த்தனப் பிரதிஷ்டை. பூஜை வழிபாடுகள் நடைபெறும் கோயிலில் திருத்த வேலைகளுக்காக பாலஸ்தாபனம் செய்து திருத்த வேலைகள் முடிந்தபின் மறுபடி மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்வது புனராவர்த்தனப் பிரதிஷ்டை. ஆலயத்தினுள் மரணம் நிகழுதல், கள்வர் முதலிய ஆசாரக் குறைவுடையோர் நுழைதல் போன்ற காரணங்களால் நிகழும் பிரதிஷ்டை அந்தரிதப் பிரதிஷ்டை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் நான்கு வகைகளில் அந்தரிதப் பிரதிஷ்டைக்கு சுபமுகூர்த்த நிர்ணயம் கிடையாது. ஏனைய மூன்று வகைப் பிரதிஷ்டைக்கும் சுபமுகூர்த்தம் நிர்ணயித்தல் அவசியம். திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் ஆகிய ஐந்தும் சுத்தமாக இருக்கும்படியும், லக்கினம் ஸ்திரராசியாக இருக்கும் படியும், கிரகங்கள் அநுகூலமாகன இடங்களில் இருக்குமாறும் நன்கு கவனித்து முகூர்த்தம் நிர்ணயிக்கப்படும்.

மேலும் மஹா கும்பாபிஷேகத்தை நடத்தி வைக்கும் சிவாசாரியாருக்கும், ஆலய தர்மகர்த்தாவுக்கும் அநுகூலமானதாகவும் இம் முகூர்த்தைக் கணித்துக்கொள்வர்.

கும்பாபிஷேக விழாவானது பல ஆண்டுகளுக்கு ஒரு முறை நிகழ்வதால் இதனைத் தரிசித்தல் பெரும் பேறாகும். யாக தரிசனம் செய்தலும், ஓமப்புகையைச் சுவாசித்தலும், மந்திர ஒலிகளைக் கேட்டலும் உடல் நலத்தையும், புண்யத்தையும் ஒருங்கே தருவன என்று அறிஞர் கூறுவர்.

கும்பாபிஷேகமானது பன்னிரெண்டு வருடங்களுக்கு ஒரு முறையாவது நடைபெற வேண்டும் என்பது விதி. தெய்வ சாந்நித்தியத்தை வலுப்படுத்தி, அருட்சக்தியை அதிகரிக்கச் செய்ய இது அவசியம். கருங்கல்லினால் செய்யப்பட்ட பீடத்திலே கருங்கல் விக்கிரகத்தை வைத்து எட்டுப் பொருட்களின் கலவையான அஷ்டபந்தனம் என்ற மருந்தினால் அவை இணைக்கப்படுகின்றன.

பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், யஜமானன் ஆகிய அஷ்ட மூர்த்திகளின் அம்சமான குங்கிலியம், கொம்பரக்கு, சுக்கான்கல், தேன்மெழுகு, நற்காவி, செம்பஞ்சு, எருமைவெண்ணெய், சாதிலிங்கம் என்னும் எட்டுப் பொருட்களையும் உரிய அளவில் சேர்த்து இடித்துத் தயாரிக்கப்படுவதே அஷ்டபந்தனமாகும்.

பூரணமான ஒரு மஹா கும்பாபிஷேகமானது அறுபத்துநான்கு வகையான அங்கக் கிரியைகளைக் கொண்டது எனச் சில ஆகமங்கள் கூற, வேறு சில ஆகமங்கள் அதனைச் சுருக்கி ஐம்பத்தைந்து கிரியைகளையுடையது எனவும் விதிக்கின்றன.

இவற்றுள் முகூர்த்த நிர்ணயம், ஆசார்ய வரணம், சல்ய உத்தாரணம், திரவியபாகம், கர்ப்ப நியாசம், கணேச பூஜை, அநுஜ்ஞை, கிராமசாந்தி, பிரவேசபலி, ரக்ஷோக்கின ஹோமம், சாந்தி ஹோமம், மூர்த்திஹோமம், வாஸ்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தி, நவக்கிரக மகம், மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம், ரட்ஷாபந்தனம், ஜலாதிவாசம், தான்யாதிவாசம், நயோன்மீலனம், கிராமப் பிரதட்சணம், சயனாரோபணம், அக்கினி காரியம், நாமகரணம், பிம்பசுத்தி, பிம்பப் பிரதட்ஷணம், கர்ப்பக்கிரக பதவிந்நியாசம், ரத்நநியாசம், யந்திரஸ்தாபனம், பிம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம், ஷடத்துவநியாசம், சாங்கோபாங்கப் பிரத்தியங்க நியாசம், ஸ்பர்சாகுதி, யாத்ராதானம், கும்பஉத்தாபனம், சகளீகரணம், ஆவாகனம், கும்பாபிஷேகம், ஆசீர்வாதம், ரட்சாவிசர்ஜனம், அவபிருதம், ஆசார்யோற்சவம் என்பன முக்கியமான கிரியைகளாகும்.

சல்யோத்தாரணம், ஜலாதிவாசம், தானயாதிவாசம், நயோன்மீலனம், கிராமப் பிரதட்சணம், முதலிய கிரியைகள் புதிய மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்யும்போது நடைபெறும். ஏனையவற்றுக்கு இவை இல்லை.

கும்பாபிஷேகத்தின் அங்கக் கிரியைகளை நோக்குமுன் பாலஸ்தாபனம் என்பது பற்றிச் சிறிது நோக்குவோம். வழிபாடு நடந்துவரும் ஓர் ஆலயத்திலே திருத்த வேலைகள் செய்யவேண்டி ஏற்பட்டால், அல்லது குறிப்பிட்ட பன்னிரண்டு வருட காலகட்டம் கடந்துவிட்டால் அங்கு புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் நடைபெற வேண்டும். அதற்காக அங்குள்ள மூலமூர்த்தியிலே உள்ள தெய்வ சாந்நித்தியத்தை 'கலாகர்ஷணம்' முதலிய கிரியைகளின் மூலம் கும்பத்திலும் சித்திரத்திலும் ஆவாகனம் செய்து, பின்னர் மூர்த்தியை ஆலயத்தின் வேறொரு பாகத்தில் புதிதாக விதிமுறைப்படி அமைக்கப்பெற்ற பாலாலயத்தில் (இளங்கோயில்) ஸ்தாபித்து அங்கு அபிஷேகம் செய்து மூர்த்தியை மறுபடி ஆவாகனம் செய்து வைப்பர். இதுவே பாலஸ்தாபனம் எனப்படும்.

கும்பாபிஷேகத்தின் சில முக்கியமான அங்கக் கிரியைகளின் அர்த்தமும், நோக்கமும் இனிக் கூறப்படும். இக்கிரியைகள் மிக விரிவானவை என்பதால் கிரியைகளின் போது நடைபெறுகின்ற யாவற்றையும் விரிவாக எடுத்துக் கூறுவதற்கில்லை.

### ஆசாரிய வரணம்:

பிரதிஷ்டா கும்பாபிஷேகத்தை நிகழ்த்தப் போகும் சிவாசாரியரைத் தேர்ந்தெடுத்து அவரிடம் கும்பாபிஷேகக் கிரியைகளை நடத்துமாறு வேண்டுவதே இதன் அர்த்தம். சிவாசாரியரை சிவனாகவே பாவித்து அவரைப் பூஜித்து கும்பாபிஷேகத் திரவியங்களை அவரிடம் ஒப்புவித்தல் எஜமானது கடமையாகும். (வரணம்-வரித்தல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அநுஜ்ஞை:

அநுஜ்ஞை என்பது அனுமதி பெறுதல் ஆகும். ஒரு தாம்பாளத்தில் பச்சரியைப் பரப்பி அதில் தேங்காய், வாழைப்பழம், வெற்றிலைபாக்கு, சந்தணம், மஞ்சள், நாணயம், புஷ்பம், பத்திரம், தர்ப்பை என்பவற்றை வைத்து அவற்றைப் புண்ணியாக தீர்த்தம் தெளித்துத் தூய்மைப்படுத்தி அவற்றுக்குப் பூஜை நிகழ்த்துவர்.

அங்கு வந்திருக்கும் பிராம்மணோத்தமர்களிடமும், விக்கினேஸ்வரப் பெருமானிடமும், மூலமூர்த்தியிடமும், அஸ்திரதேவரிடமும், உற்சவ மூர்த்தியிடமும் சென்று பூஜை செய்து கும்பாபிஷேகத்தை நன்முறையில் நடத்த அனுமதியும், ஆசியும் தந்தருளுமாறு வேண்டுவர்.

## திரவிய சுத்தி, திரவிய பாகம்:

கும்பாபிஷேகத்திற்கான திரவியம் சிவத்திரவியமாக்குவதே திரவிய சுத்தி. கும்பாபிஷேகத்திற்குரிய பொருட்களை முறைப்படி மந்திர சகிதமாக அந்தந்த தேவைகளுக்கேற்ப பிரித்தலே திரவிய விபாகம் எனப்படும். கும்பாபிஷேகத்திற்கென ஒதுக்கிய பணத்தை (ஏறக்குறைய ஆலய நிர்மாணத்திற்குச் செலவான தொகைக்குச் சமமான தொகையையே கும்பாபிஷேகத்திற்கும் செலவிட வேண்டும் என்பது ஆகமநூற் கருத்து) பதினொரு பங்காக வகுத்து இரண்டு பங்கு யாகசாலைக்கும், ஒரு பங்கு அபிஷேத்திற்கும், ஒருபங்கு சிவாசாரியாருக்கும், இரண்டு பங்கு இருத்துவிக்குகளுக்கும், ஒரு பங்கு வேதாத்தியானத்திற்கும், ஒருபங்கு தட்சிணைகளுக்கும், ஒரு பங்கு பிராமண போஜனம், அன்னதானம் என்பவற்றுக்கும், ஒரு பங்கு பரிசாரகர், வாத்தியகாரர், சிற்பாசாரி முதலியவர்களுக்கும், ஒரு பங்கு யாகத் திரவியங்களுக்குமாகச் செலவிட வேண்டு மென்பது ஆகமக் கருத்து. இதற்கமையப் பதினொரு பங்கு என்பதற்கு அடையாளமாகப் பதினொரு நாணயங்களை எடுத்து அவற்றைப் பால் முதலியவற்றாலும் புண்யாக ஜலத்தாலும் அபிஷேகம் செய்து சிவாஸ்திரத்தை அங்கு ஆவாஹனம் செய்து பூசித்தபின் மேற்கூறிய வகையில் அவற்றைக் குரு பங்கிட்டுக் கொடுக்க, தர்ம கர்த்தா பெற்றுக்கொள்வார்.

## கிராமசாந்தி:

ஆலயம் அமைந்துள்ள கிராமத்திலுள்ள தீயசக்திகள், துஷ்டத் தன்மைகள் முதலியவற்றால் பெருவிழாவுக்கு இடையூறு ஏற்படாமல் மங்கலமுண்டாகும்படி காவற்தெய்வமாகிய வைரவப் பெருமானுக்கு விஷேட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூஜை, ஓமம், பலி என்பன செய்தலே கிராமசாந்தியாகும். காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் ஆகிய ஆறு பகைகள் முதலியவற்றால் ஏற்படும் தீமைகளும் அசுரர், ராடசதர், பூதர், பைசாசர் என உருவகப்படுத்தப்படுகின்றன. எவையானாலும் தீயனவற்றை ஒழிப்பதே கிராமசாந்தி.

ஆலயத்தின் கிழக்கு, மேற்கு அல்லது நிருதி திசையில் ஒரு தற்காலிக மண்டபம் அமைத்து வைரவருக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் கும்பம் வைத்து ஒழுங்குசெய்தபின் அஸ்திர தேவரை மங்கல வாத்தியம் சகிதம் வீதி வலம் வரச்செய்து அங்கு எழுந்தருளச் செய்வர். கும்பங்களை மட்டுமின்றி யந்திரங்களை வைத்து அவற்றிலும் வைரவர் முதலானோரை ஆவாகனம் செய்து பூஜைகள் நிகழ்த்துவர். ராட்சதர்களுக்கும், தசாயுதங்களுக்கும் பலி உருண்டைகள் வழங்கித் திருப்தி செய்தபின் வைரவரை அக்கினியிலும் ஆவகனம் செய்து அன்னம், வடை முதலியனவும் ஆகுதியாக இடுவர். பலிப் பொருளான நீற்றுப்பூசனிக்காய், கத்தி அவற்றையும் பூஜித்து பசுகாயத்ரியை உச்சரித்து நீற்றுக்காயை வெட்டிப் பலி கொடுத்து அதன் உட்பாகத்தை ஓமம் செய்வர். பூர்ணாகுதி கொடுத்தபின் சகல தேவர்களுக்கும் பலதாம்பூலம் நைவேத்தியம் செய்து நீராஜனம் செய்தபின் சுவஸ்தானங்களுக்கு எழுந்தருளுவிப்பர். இதன் பின் வலம்வந்து கைகால்களைச் சுத்தம் செய்தபின்னர் ஆலயத்தினுள் செல்லுதல் மரபு.

**பிரவேசபலி:**

இடையூறுகள் நீங்கி, ஆரம்பிக்கும் காரியம் இனிது நிறைவேறும் பொருட்டாகவும், குற்றங்குறைகள் தவிர்க்கப்படுவதற்காகவும் செய்யப்படும் இக்கிரியையும் கிராமசாந்தி, வாஸ்துசாந்தி இவைகளைப் போன்றதே. ஆயின் இதில் பிரம்மஸ்தானம், இந்திரஸ்தானம் முதல் ஈசானஸ்தானம் வரையிலான ஸ்தானங்களாகிய நவசந்திகளிலும் அந்தந்த சக்திகளை அவர்களுக்குரிய மண்டலங்களை அரிசி மாவினால் வரைந்து அங்கு ஆவாகனம் செய்து, வெற்றிலை பாக்கு, பழம், தேங்காய், கமுகம்பூ, நெற்பொரி, இளநீர் என்பவற்றை நிவேதித்து பலியுருண்டைகளையும் வழங்கி மகிழ்விப்பர்.அதன்பின் இறைகாரியத்திற்கென அப் பிரதேசம் பயன்படுத்தப்படுவதால் தீய சக்திகள் யாவும் கடல், காடு, மலை, நதி முதலிய இடங்களுக்குச் சென்றுவிடவேண்டுமென வேண்டியபின் அட்டதிக்குப் பாலகர்களை அவ்விடத்தில் ஆவாஹனம் செய்து பூசிப்பர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ரஷோக்ன ஹோமம்:**

ரஷோக்ன தேவரைத் (ராஷசர்களை அழிப்பவர்) திருப்தி செய்யும் இக்கிரியையின் நோக்கமும், பிரவேசபலி, கிராமசாந்தி என்ற இவை போன்றதே. பிரவேச பலி மூலம் அகற்றப்பட்ட தீய சக்திகளில் ஏதாவது ஆலயத்தின் உட்பிராகாரத்தில் நுழைந்திருக்கக்கூடும் என்பதற்காக இந்த தேவரைப் பூசித்தபின் அக் கும்பத்தின் நீரால் ஆலய உட்பிராகாரம் தெளிக்கப்படும். கருவறையிலிருந்து ஆரம்பித்து வலம்வந்து கோபுரவாசல்வரை இந் நீர் தெளிக்கப்படும்.

**திசாஹோமம்,**

சிவாஸ்திரம், அகோராஸ்திரம், பாசுபதாஸ்திரம், ப்ரத்யங்கிராஸ்திரம் முதலிய அஸ்த்ர சக்திகளை நான்கு கும்பங்களில் தனித்தனியே பூசித்து அவற்றுக்குரிய ஹோமங்களையும் செய்தபின் அந்தக் கும்ப நீரிகால் ஆலய உள்வீதியின் நான்கு திசைகளிலும் தெளிப்பதன்மூலம் ஆயுதப்படையின் காவல் நிறுவப்படுகிறது.

**தீமைகளையகற்றிக் காவலிடும் பூர்வாங்கக் கிரியைகளின் தொகுப்பு நோக்கு:**

கிராம சாந்தியில் பூத பைசாச, ராட்சச, பிரம்மராட்சசர்கள் அவர்களுக்குரிய பலியினால் திருப்திசெய்யப்பட்டு அனுப்பப்பட்டபின் கிராமத்தின் காவலரான வடுகபைரவரிடம் காவல்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. பிரவேச பலிமூலம் ஆலயத்தின் வெளிப்புறச் சூழலில் இருந்திருக்கக்கூடிய தீய சக்திகளைத் திருப்தி செய்வித்து தூர இடங்களுக்கு அகற்றியபின் அந்தத் திசைகளின் காவலர்களான இந்திரன், அக்னி முதலியவர்களை அழைத்து அவர்களிடம் காவல் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. அதற்குப்பின்னரும் உட் புறங்களில் இவற்றையும் மீறி வந்து ஒளிந்துகொண்டிருக்கும் தீய சக்திகளை ரட்சோக்ன ஹோமம் மூலம் அகற்றித் திசாஹோமத்தில் ஆயுதப்படை மூலம் உள்வீதிக்கான காவல் ஸ்திரப்படுத்தப்படுகிறது.

**சம்ஹிதா ஹோமம், மூர்த்திஹோமம், சாந்திஹோமம் முதலியன:**

சம்ஹிதா மந்திரங்கள், பிரதான மூர்த்தி, அட்டமூர்த்திகள் இவர்களைத் தனித்தனியே கும்பங்களில் ஆவாகனம் செய்து பூஜித்து அக்கினி வளர்த்து அங்கும் இவர்களை ஆவாகனம் செய்து ஹோமங்கள் நடத்தப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூரணமான பூஜையின்றி இருந்த மூல விக்கிரகத்தில் தெய்வ சாந்நித்தியத்தைப் படிப்படியாக உருவாக்கும் கிரியைகள் இவை. சிவாகமங்களில் கூறப்படும் மந்திரங்களில் மிக முக்கியமானவையும் அதிக இடங்களில் பயன்படுபவையும் சம்ஹிதா மந்திரங்கள் ஆகும். ஈசானம் முதலிய பஞ்ச ப்ரம்ம மந்திரங்களும் ஹ்ருதயம் முதலிய ஆறு அங்க மந்திரங்களுமாகப் பதினொரு மந்திரங்கள் இவை. இறைவனுடைய லயாங்கமாக அணிசெய்திருக்கும் இம் மந்திரங்கள் அவரது போகாங்கமாகவும் முதலாவது ஆவரணத்தில் அவரைச் சுற்றி அமர்ந்திருந்து அருள் செய்யும் வலிமை வாய்ந்தவை. இம் மந்திரங்கள் ஒரு கும்பத்திலும் அக்னியிலும் பூசிக்கப்படுவது சம்ஹிதாஹோமம்.

அட்ட மூர்த்திகளின் வடிவானவன் இறைவன். நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், யஜமானன் (ஆன்மா) ஆகிய அட்ட மூர்த்திகளையும் அவற்றுக்குரிய அதிபதிகளையும் ஒரு கும்பத்திலும் அக்கினியிலும் பூசிப்பது மூர்த்தி ஹோமம்.

அஸ்திர சக்தியானது தீமையைப் போக்கவல்லது. காவல் செய்வது. மனச்சாந்தி தருவது. நமது ஆலயக் கிரியைகள் பலவற்றிலும் அவ்வப்போது பாசுபதாஸ்திர மந்திரம் பூசிக்கப்படுவது வழக்கம். இங்கேயும் பாசுபதாஸ்திரமும் அதனைச் சுற்றி தசாயுதங்களும் பூசிக்கப்படுவது சாந்தி ஹோமம். இந்த மூன்று ஹோமத்தின் முடிவிலும் இக் கும்பங்கள் மூலவருக்கு அபிஷேகம் செய்யப்பட்டு அங்கு அருள்விளக்கம் ஏற்படுத்தப்படுகிறது.

**நவக்கிரக மகம்:**

பரிவார தெய்வங்களில் நவக்கிரகங்களுக்குத் தனியிடம் உண்டு. ஆன்ம கோடிகளோடு நேரடித் தொடர்பு கொண்டு தமது கதிர்வீச்சுக்களால் உலகியல் வாழ்க்கையில் பல்வேறு மாற்றங்களையும், பலாபலன்களையும் செய்கின்றவர்கள் நவக்கிரக நாயகர்கள். இவர்களைக் கும்பத்திலும், அக்கினியிலும் ஆவகனம் செய்து உபசாரங்கள், ஆகுதிகள் வழங்கி வழிபடுவது நவக்கிரக மகம் எனப்படும். (மகம்- யாகம்).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாஸ்து சாந்தி:**

நிலத்தில் உள்ள குற்றங்குறைகளை நீக்குவதற்காக செய்யப்படுவது வாஸ்து சாந்தி என்னுங் கிரியை.

பூமிக்கு அதிபதி பிரம்மா. மழைக் கடவுள் இந்திரன். இவர்களை மகிழ்வித்து வழிபாடியற்றுவது. வாஸ்து சாந்தியில் இடம்பெறுகிறது. வாஸ்து சாந்தி ஆலய மண்டபத்திலே செய்யப்படுகிறது.

வாஸ்து சாந்திக்குரிய வாஸ்து மண்டலம், நெல்லினை மேடையாகப் பரப்பி அதன் மேல் வாழையிலை இட்டு அதன்மேல் அரிசியைப் பரப்பி அதன் மேல் எள்ளினால் அல்லது அரிசி மாவினால் கோடுகள் வரைந்து அமைக்கப்படும். இம் மண்டலம் இரு வகையாக அமைக்கப்படும். ஆண் தெய்வங்களுக்குரியது மண்டூகபத வாஸ்து சாந்தி மண்டலம். பெண் தெய்வங்களுக்குரியது பரமசாயிபத வாஸ்துசாந்தி மண்டலம். சக்தி அம்சமான முருகனுக்கும் இதுவே உரியது.

இம் மண்டலத்துக்கு ஈசான திக்கில் காயத்திரி, சாவித்திரி ஆகிய இரு சக்திகளுடன் கூடிய பிரம்மாவிற்கும், சிவம் வர்த்தனிக்கும், மண்டலத்துக்கு கிழக்கில் புண்ணியாக வாசனத்துக்கும் கும்பங்கள் வைத்து அதன்முன் ஓமகுண்டம் அமைக்கப்பட்டிருக்கும்.

இங்கும் விக்னேஸ்வர பூஜை, புண்ணியாக வாசனம், முதலிய பூர்வாங்கக் கிரியைகளைச் செய்து சிவம் வர்த்தனியையும், பிரம்மாவையும் கும்பத்தில் பூஜித்து மண்டலத்தில் வாஸ்துபுருஷனையும் பிற தேவதைகளையும் பூஜித்து நெற்பொரியினால் பலிதானமும் கொடுத்து முறைப்படி அக்கினி காரியமும் செய்வர்.

இங்கும் கிராமசாந்தியைப் போலவே நீற்றுக்காயொன்றைப் பலியிடுவர். அதன்பின் வைக்கோல், தர்ப்பை முதலியவற்றால் மனித உருவாகச் செய்யப்பட்ட வாஸ்துபுருஷனைப் பூஜித்து அக்கினியில் பொருத்தி எரியூளச் செய்தபின் அவ்வுருவத்தை ஆலய மண்டபங்கள், வீதிகள் முதலிய இடங்களில் இழுத்து வந்து ஈசான திக்கில் போட்டு விடுவர். இவ்வுருவத்தின் பின்பாக வாஸ்துகும்ப நீர் தெளித்துச் செல்வர். வெட்டிய நீற்றுப்பூசணிக்காயையும் இதனுடன் எடுத்துச் சென்று போட்டுவிடுவர். இவற்றைக் கொண்டு சென்றவர்கள் நீராடிவிட்டு ஆலயத்தினுள் வருதல் வேண்டும். (கைகால்களையாவது நன்கு சுத்தம் செய்தல் அவசியம்).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மிருத்சங்கிரகணமும் அங்குரார்ப்பணமும்:

நற்காரியங்கள் எதனையும் தொடங்கும் போது முளைப்பாலிகை யிடுதலாகிய அங்குரார்ப்பணம் மிக முக்கியமாகச் செய்யப்படும். இதற்கு வேண்டிய மண்ணை மந்திரசகிதமாகப் பெறுவதே மிருத் சங்கிரகணமாகும். (மிருத்- மண்: சங்கிரகணம்- சேகரித்தல்).

ஆலயத்தின் ஈசானம், மேற்கு, வாயு அல்லது வடக்குத் திசையில் இது செய்யப்படும். அஸ்திர தேவரையும் எழுந்தருளச் செய்து மங்கல வாத்திய சகிதம் குரு இங்கு வந்து சேருவார்.

அஸ்திர தேவரையும், அதற்கு முன் (கிழக்கே) சப்த வாரிதி கும்பத்தையும் ஸ்தாபிப்பர். அதற்கு கிழக்கே நவபதம் அதற்கும்முன் அஷ்டதள பத்மம் (எட்டிதழ்க் கமலம்) அதற்கும்முன் நாற்கோணம் என்பவற்றை அரிசிமாவினால் அமைப்பர். நாற்கோணத்தில் மண்வெட்டி ஒன்று கூர்ச்சம், மாவிலை என்பன கட்டப்பட்டதாக வைக்கப்பட்டிருக்கும். பூர்வாங்கக் கிரியைகளை நிறைவேற்றியபின் கும்பத்திலே ஏழு சமுத்திரங்களையம், நவகோஷ்டத் தில் பிரம்மாவையும் எட்டு மண்டல தேவர்களையும், பத்மத்திலே அஷ்டதிக்கு பாலகர்களையும் பூமிதேவியையும் பூஜிப்பர். மண்வெட்டியின் குற்ற நீக்கத்திற்காக தைலம், பால், தயிர், இளநீர் என்பவற்றால் அபிஷேகித்த பின் மும்முறை மண்ணை வெட்டி ஒரு தட்டிலிட்டு பட்டினால் மூடுவர். சப்தரிஷி கும்ப ஜலத்தினால்மண் எடுத்த இடத்தை அபிஷேகம் செய்து நவதானியமிட்டு சமதளமாக்குவர்.

சகல தேவர்களையும் உத்வாசனம் செய்து (தத்தம் இடத்திற்கு எழுந்தருளச் செய்து) மண் நிரப்பிய தட்டத்துடன்வீதி வலம்வந்து யாகசாலையை அடைவர்.

யாகசாலையின் பின் வாயுதிக்கிலே (வடமேற்கு) கார்த்திகை, ரோகினி சகிதமாக அமிர்தேஸ்வர கும்பம் வைத்து (அமிர்தேஸ்வரன்- சந்திரன்) சுற்றிவர துவாதசாத்தியர்களுக்கு (பன்னிரு சூரியர்கள்) பன்னிரண்டு சிறிய மண்சட்டிகளும் வைக்கப்பட்டிருக்கும். மிருத்சங் கிரகணத்தில் எடுத்துவந்த மண்ணினால் இவை நிரப்பப்பட்டு வில்வம், அரசு, மாவலை இவற்றால் அலங்கரிக்கப்படும்.

பூர்வாங்கக் கிரியைகளை அடுத்து சந்திரனையும், பன்னிரு சூரியர்களையும் பூஜித்தபின் தூய்மையான பாத்திரமொன்றிலே பசுப்பால் விட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதில் நவதானியத்தை இட்டுப் பூஜித்து உரிய மந்திரங்களுடன் பாலிகைகளில் (மண்சட்டி) அதனை விதைப்பர். சந்திரகும்ப நீரை இவற்றுக்கு வார்த்து மீண்டும் கும்பத்தை நீரால் நிரப்பி ஸ்தாபிப்பர்.

இவ்வங்குரார்ப்பண முளையானது பசுமையாக நன்கு செழித்து வளர்ந்தால் கிராமம் சிறக்குமென்பது ஐதீகம். (அங்குரம் - முளை).

**ரட்சாபந்தனம்:**

ரட்சா என்பது காப்பு. காவலுக்காக கட்டப்படுவது. காப்புக்கட்டுதல் எனவும் கூறுவார். எடுத்த கருமம் தடையின்றி நிறைவேறுவதற்கும், அக் கருமமன்றி வேறுசெயல்களில் ஈடுபடாது தடுப்பதற்கும் காப்புக் கட்டப்படும்.

சிவாச்சாரியாரும், ஏனைய குருமாரும் தர்மகர்த்தாவும் ரட்சாபந்தனம் செய்துகொண்ட பின் கும்பாபிஷேகம் முடியும்வரை ஆலயச் சூலை விட்டு அப்பாற் செல்லலாகாது. இக்கால எல்லையில் அவர்களின் உறவினரால் ஏற்படும் ஆசௌசம் முதலியன அவர்களைத் தீண்டா.

காவலுக்காக கட்டப்படும் காப்பு மூர்த்திகளுக்கும் கட்டப்படுவது வழக்கம். எல்லா உலகங்களையும் காக்கும் அவருக்கே காவலா என ஐயுறலாம். சகல பிரபஞ்சங்களுக்கும் இறைவனுள் அடங்கும். அவருள் அடங்கிய அனைவருக்கும் காவல் செய்யும் காரணமாகவே அத் திருவுருவங்களுக்கு காவல் செய்யப்படுகிறது. மேலும் தன் குழந்தைகளின் நோய் தீரத் தான் மருந்துண்ணும் தாய் போல நமக்காக இறைவன் காப்புக்கட்டும் பாவனையும் இதில் தொனிக்கிறது.

'கங்கணம் கட்டுதல்' என்ற மரபுச் சொற்றொடர் இங்கு நோக்கற்பாலது. ஒரு காரியத்தை விடாது முயன்று செய்து முடிக்கத் தீர்மானிப்பதைக் கங்கணம் கட்டுதல் என்று சொல்லுவர். கங்கணம் என்பது காப்பு. ஏடுத்த காரியத்தை நிறைவேற்றி முடிக்கும் தீர்மானம் கொள்வது இக் கிரியையின் நோக்கமெனவும் கொள்ளலாம்.

ஒருதட்டில் அரிசி பரப்பி அதில் தேங்காய், வெற்றிலை பாக்கு, பழம், மாவிலை, வீபூதி என்பனவும், ரட்சா சூத்திரம் (காப்புக் கயிறு) எனப்படும் மஞ்சள் பூசிய நூலும் வைக்கப்பட்டிருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாச்சாரியர் பூர்வாங்க கிரியைகளைச் செவ்வனே நிறைவேற்றிய பின் ரட்சாபந்தன பொருள்களைப் பூஜிப்பர். இதன் பின் மங்கல வாத்தியங்கள் முழங்க சிவாச்சாரியர் தனது வலக்கை மணிக்கட்டில் ரட்சை நூலைக் கட்டி விபூதியால் முடிச்சிலே காப்பிட்டுக் கொள்வார்.

## நூதன மூர்த்திகளுக்கான அதிவாசாதி கிரியைகள்:

புதிதாகச் செய்யப்பட்ட விக்கிரகங்களுக்கு மாத்திரம் நயனோன்மீலனம், ஜலாதிவாசம், தான்யாதிவாம், சயனாரோபணம் ஆகிய கிரியைகள் செய்யப்படும்.

## நயோன்மீலனம்:

நயன உன்மீலனம் எனப் பிரித்து கண்திறத்தல் என்ற பொருளை இச் சொல் வெளிப்படுத்தும். ஓவியம், சிற்பம் என உருவாகி முடிந்ததும் இறுதியாகவே கண் திறத்தலைச் செய்வர். இங்கு முறைப்படி பூஜை அக்கினி காரியம் என்பவற்றை நிகழ்த்தி திரையிட்டு மூர்த்தியின் திருவுருவத்திலே தங்க ஊசியால் கண்களைத் திறந்து தானியக் குவியல் மீது விக்கிரகத்தை வைத்து பொன், தேன், நெய், தானியங்கள், பிராமணர்கள் தீபம் கண்ணாடி நிறைகுடம் சந்நியாசி, பக்த ஜனங்கள் ஆகியோரை தரிசிக்கச் செய்வர். சிற்பாசாரி சம்பாவனை செய்து கௌரவிக்கப்படுவர்.

## ஜலாதிவாசம்:

நயன உன்மீலனம் செய்யப்பட்ட விக்கிரகத்தை நீரில் அமிழ்த்தி வைத்தலே ஜலாதிவாசம் எனப்படும். இதற்கென தயார் செய்யப்பட்ட சிறு தொட்டியிலே புனித தீர்த்தங்களை நிரப்பி அதனுள் ஆசனத்தின் மீது கழுத்தளவு நீரில் கிழக்கு நோக்கி விக்கிரகத்தை இருக்கச் செய்வர். தொட்டி தயார் செய்யும் சிரமத்திற்காக பெரிய பாத்திரங்களை பயன்படுத்துவதும் உண்டு.

மீன். தவளை, பாம்பு முதலிய நீர் வாழ் பிராணிகளை பொன்னால் அல்லது வெள்ளியால் செய்து இதனுள் போடுவதும் உண்டு.

## தான்யாதி வாசம்:

இதன் பின் விக்கிரகத்தை தானியங்களால் மூடி வைப்பர். இதுவே தான்யாதி வாசம் எனப்படும். இவ்விரு அதிவாசக் கிரியைகளும் பிருதுவி, அப்பு ஆகிய இரு அம்சங்களுடனும் பரம்பொருளுக்குள்ள தொடர்பை வலுப்படுத்துவதாக அமைகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சயனாரோகணம்:**

தானியங்களைப் பரப்பி மான்தோல் முதலியவற்றை விரித்து அதன்மேல் மெத்தை, தலையணை, விரிப்பு என்பவற்றை அமைத்து மூர்த்தியை அங்கு எழுந்தருளச் செய்து கிழக்கே தலை வைத்து மேல்நோக்கியபடி சயனிக்கச் செய்து செந்நிறத் துணியால் மூடி இறைவனை துயில வைக்கும் பாவனையே சயனாரோபனம் ஆகும். (ஆரோபணம் - ஏற்றுதல்)

**பிரசன்னாபிஷேகம், பிரசன்ன பூஜை:**

புனராவர்த்தன கும்பாபிஷேகத்திற்கு மட்டும் இக்கிரியை உண்டு. மூலமூர்த்தியிலுள்ள தெய்வசாந்நித்தியத்தை கும்பத்திலே ஒடுக்குமுன் விசேஷஸ்நபனாபிஷேகம் செய்து தீபாராதனை, பூஜைகள் செய்வது மரபு. இதுவே பிரசன்னாபிஷேகம், பிரசன்னபூஜை எனப்படுகிறது.

**கடஸ்தாபனம்:**

கும்பம் வைப்பதற்கான நெல், அரிசி, பயறு, உழுந்து, எள், நவதானியம், நெற்பொரி, தர்ப்பை இவற்றை உரிய மந்திரங்கள் ஓதியவாறு முறைறப்படி பரப்பி குடத்தை கழுவி நூல்சுற்றி தூபம் காட்டி இதனுள் சந்தனம், நீர், பவித்திரம், நவரத்தினம், பொன் முதலியவற்றை இட்டு மாவிலை தேங்காய் என்பவற்றை வைத்து பட்டு, பூணூல் மாலை கூர்ச்சம் பூ, சந்தனம் இவற்றை சாத்தி கும்பாபிஷேகத்திற்குரிய பிரதான கும்பங்களை அமைத்தலே கடஸ்தாபனமாகும். இவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே வேத மந்திரங்கள் ஓதப்படும்.

**கலாகர்ஷணம்:**

பிம்பம் எனப்படும் விக்கிரகத்திலிருந்து இறையருள் சக்தியை - தெய்வசாந்நியத்தை - கும்பத்திலே வரச்செய்தலே கலாகர்ஷணம் ஆகும். பலவிதமான நியாசங்கள் மூலமாக இதனைச் செய்து கடஸ்தாபனம் செய்யப்பட்ட கும்பதில் மூர்த்தியை எழுந்தருளச் செய்த பின்னர் கும்பத்தை யாகத்தில் ஸ்தாபிப்பர்.

**விஷேச சந்தி:**

பூர்வாங்கக் கிரியைகள் நிறைவுற்றதும் சிவாச்சாரியர்கள் தமது நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்தபின் ஓரிடத்தில் வரிசையாக அமர்ந்து விஷேச சந்தியாவந்தனத்தில் ஈடுபடுவர். இது சகளீகரணம், அங்கநியாசம், காயத்திரி ஜபம் மற்றும் பல்வேறு வகையான தர்ப்பணங்களும் அடங்கிய கிரியைகாகும். (தர்ப்பணம் - மந்திரநீர் சொரிந்து தேவர்கள் முதலானோரை மகிழ்வித்தல்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தீபஸ்தாபனம்:**

மண்டபத்திலே வைத்து சர்வாலங்காரங்களுடன் கூடிய தீபம் ஒன்றை ஏற்றி அதனை அர்ச்சித்து சுமங்கலிப் பெண் அதனை ஏந்தியபடி வீதி வலம் வரச் செய்து மூலஸ்தானத்தில் அதனை வைத்தலே தீபஸ்தாபனம் எனப்படும். இத்தீபம் கும்பாபிஷேகம் முடியும் வரை அணையாது பாதுகாக்கப்படும்.

பிம்பஸ்தாபனம்:

ஆதாரசிலை எனப்படும் பீடக்கல்லினை உரியமுறைப்படி பொருத்தி அமைத்தபின் அதன்மேல் நவரத்தினங்களையும் பஞ்சலோகம் முதலியவற்றையும் உரிய முறைப்படி மந்திரசகிதமாகப் பதித்து நியாசம் செய்து அதன்மேல் யந்திரத்தையும் ஸ்தாபித்து அது சேதமுறா வண்ணம் அதன்மேல் பஞ்சினைப் பரப்பி வைப்பர்.

சயனத்திலிருந்து மூர்த்தியை எழுந்தருளச் செய்து வீதி வலமாக கொண்டு வந்து இந்த ஆசனத்தின் மீது வைத்து அஷ்டபந்தன மருந்தினைச் சாத்தி மூர்த்தியை பீடத்துடன் இறுகப் பொருத்துவர்.

**யந்திரபூஜை:**

இங்கு பதிக்கப் பெறும் யந்திரமானது உலோகத்தகட்டில் வரையப்பட்ட அந்தந்த மூர்த்தியின் அம்சங்களைக் கொண்டதாக அமையும். இது கும்பாபிஷேகத்திற்கு சுமார் ஒரு மண்டலம் முன்பதாகவே தயார் செய்யப்பட்டு தினமும் அபிஷேகம் பூஜை செய்து தெய்வசாந்நியத்தை பெற்றதாக இருக்கும்.

**தைலாப்பியங்கம்: (எண்ணெய் சாத்துதல்)**

விக்கிரகம் ஸ்தாபிக்கப்பட்டதும் சிவாச்சாரியர் அதற்கு எண்ணெய் சாத்திய பின் பக்தர்கள் யாவரும் தாமே தமது கைகளால் எண்ணெயை சாத்தி வணங்குவர். நல்லெண்ணய், சந்தானாதி தைலம் முதலிய வாசனை தைலங்கள் இதற்கு பயன்படும். இது பாப நிவர்த்தியை செய்யும்.

**பிம்பசுத்தி:**

மூர்த்தியின் திருவுருவத்திலுள்ள தோஷங்களை நீக்குவதற்காக விம்பசுத்தி செய்யப்படுகிறது. பலவிதமான புண்ணிய தீர்த்தங்களாலும் இதற்கென விதிக்கப்பட்ட பலவிதமான மரப்பட்டை கஷாயங்களாலும் மூர்த்திக்கு அபிஷேகம் செய்வர். இதனால் விம்பம் சுத்தம் அடைகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விஷேச திரவிய ஹோமம்:**

பலவிதமான சமித்துக்கள் தானிய வகைகள் என்பவற்றை அவற்றுக்குரிய மந்திரங்களை ஓதி அக்கினியில் இட்டு ஆகுதி வழங்குவர். இந்த விஷேச திரவியங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பலன் விஷேசமாக சொல்லப்பட்டுள்ளது.

**யாகசாலையின் அமைப்பு:**

பஞ்சபூத விளக்கமாக யாகசாலை அமைவதை முன்னர் கண்டோம். யாகசாலை கோயில் பிரகாரத்தின் உள்ளே ஈசானம், அக்கினி, வடக்கு, மேற்கு, ஆகிய திசைகளில் அமையலாம். நன்கு மெழுகி தூய்மைப்படுத்திய தரையையும் நடுவிலே வேதிகை என்று சொல்லப்படும் மேடையையும் யாகசாலையின் பிரமாணத்திற்கு ஏற்ப எண்ணிக்கையுள்ள தூண்களையும் கொண்டதாக மேலே வேயப்பட்டு வெள்ளை கட்டிய விதானத்துடன் யாகசாலை அமையும்.

ஐந்து வகையான யாகசாலைகள் உள்ளன. யாகசாலையை பதங்களாக பிரிப்பதில்தான் இந்த வேறுபாடு ஏற்படுகிறது. மாவில் தோய்த்த நூலினால் சூத்திரங்களை அடித்து (கோடுகள்) பதங்களை ஏற்படுத்துவர். 44 சூத்திரங்களையும் இருபுறமும் இடுவது ருத்திர சூத்திரக் கிரமம் எனப்படும். இதில் 43x44=1849 பதங்கள் உண்டாகும். 34 சூத்திரங்கள் அடிப்பது விஷ்ணு சூத்திரக் கிரமம். 24 சூத்திரங்கள் அடிப்பது பிரம்ம சூத்திரக் கிரமமம். 14 சூத்திரங்கள் அடிப்பது மனு சூத்திரக் கிரமம். 12 சூத்திரங்கள் அடிப்பது ரவி சூத்திரக்கிரமம்.

ரவி சூத்திரக் கிரமத்தில் 121 பதங்கள் உருவாகும். கும்பங்களுக்கான வேதிகை நடுவில் அமையும். அதனைச் சுற்றிலும் சஞ்சார பதங்கள், ஓமகுண்டங்கள் பரிவார யாக கும்பங்கள் என்பன அவற்றுக்குரிய இடங்களில் அமையப்பெறும்.

ருத்திர சூத்திரக் கிரம யாகசாலையில் முப்பத்துமூன்று குண்டங்களும், விஷ்ணு சூத்திரக்கிரமத்தில் இருபத்தைந்து குண்டங்களும், பிரம்ம சூத்திரக்கிரமத்தில் பதினேழு குண்டங்களும், மநுசூத்திரக்கிரமம், ரவிசூத்திரக்கிரமம் இரண்டிலும் ஒன்பது குண்டங்களும் அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதி குறைந்த இடங்களில் ரவிசூத்திரக்கிரம யாகசாலை அமைத்து அங்கு ஐந்து குண்டங்கள் அமைப்பர். ஒவ்வொரு வரிசையிலும் கிழக்கே சதுரக் குண்டமும், தென்கிழக்கே யோனி குண்டமும் தெற்கில் அர்த்தசந்திரக் குண்டமும் தென்மேற்கில் திரிகோண குண்டமும், மேற்கில் விருத்த குண்டமும் வடமேற்கில் அறுகோண குண்டமும், வடக்கில் பத்மகுண்டமும் ஈசானத்தில் எண்கோண குண்டமும் அமையும். பிரதான குண்டம் வேதிகைக்கு முன்பாக அல்லது ஈசானத்திலும் கிழக்குக்குமிடையே அமையும்.

ஐவகை யாகசாலைகளுக்கும் முறையே நூறு, அறுபத்து நான்கு, முப்பத்தாறு, பதினாறு, என்ற எண்ணிக்கையில் தூண்கள் அமையும். மாவிலை, தோரணம், மாலைகள், பட்டு, கொடி, கரும்பு, கமுகு, இளநீர் முதலியவற்றால் யாகசாலையை அலங்கரிப்பர். அஷ்டமங்கலம், தசாயுதம் என்பனவும்

**யாகசாலையை அலங்கரிப்பன. மஹாபிஷேகம்:**

பஞ்சாமிர்தம், பால், இளநீர் முதலிய சகல பொருட்களாலும் மூலமூர்த்திக்கு அபிஷேகம் செய்து ஸ்நபனாபிஷேகம் செய்வது மஹாபிஷேகம் எனப்படும். இதன்பின் ஆசார்ய பூஜை நிகழும். சிவாசார்யர்களை உபசரித்து தட்சிணை தாம்பூலங்கள் வழங்கி நமஸ்கரித்து அவர்களது ஆசி பெறுவதுடன் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நிறைவுபெறும். இரவு கல்யாண உற்சவம், திருவூஞ்சல் என்பன நிகழும்.

**மண்டலாபிஷேகம்:**

கும்பாபிஷேகம் நிகழ்ந்த நாளிலிருந்து நாற்பத்தைந்து நாட்கள் கொண்ட ஒரு மண்டலத்துக்கு விசேஷஅபிஷேக ஆராதனைகள் நிகழும். திரிபட்சம் (மூன்று பட்சங்கள் கொண்டது) ஒரு மண்டலம். ஒரு பட்சம் பதினைந்து நாள். எனவே நாற்பத்தைந்து நாட்களே மண்டலாபிஷேகத்திற்கு உரிய காலமாகும்.

**சங்காபிஷேகம்:**

நாற்பத்தைந்தாம் நாள் சங்காபிஷேகம் நடைபெறும். பூஜைக்குரிய உபகரணங்களுள் சங்கு மிகத் தூய்மையானது. சங்கில் விடப்படும் நீர் புண்ணிய தீர்த்தத்திற்கு நிகராகிறது. நூற்றெட்டுச் சங்கினாலும் (அஷ்டோத்திர சத சங்கம்) ஆயிரத்தெட்டுச் சங்கினாலும் (அஷ்டோத்தர சஹஸ்ர சங்கம்) வசதிக்கேற்பச் சங்காபிஷேகம் நிகழும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதான கும்பத்தில் வலம்புரிச் சங்கும் ஏனையவற்றிற்கு இடம்புரிச் சங்கும் உபயோகிக்கப்படும்.

**யாகபூஜை:**

யாகாசலையில் பிரவேசிக்கும் சிவாசாரியார் முதலில் விக்நேஸ்வரரர் பூஜை, புண்யாகவாசனம் என்பவற்றைச் செய்த பின் சூரிய பூஜை, துவார பூஜை தோரணங்கள் திரிசூலங்கள், கொடிகள் ஆகியனவற்றின் அதிதேவதைகளுக்கான பூஜை, பரிவார கும்ப பூஜை, அஷ்டமங்கல பூஜை, யாகேஸ்வரன் யாகஸேஸ்வரி பூஜை என்வற்றையும் செய்வர்.

இதன்பின் பிரதான வேதிகையிலுள்ள ஸ்நபன கும்பங்களில் பஞ்சாசனை பூஜை, ஆவரண பூஜை என்பவற்றை நிகழ்த்திப் பலவித நியாசங்கள் மூலமாக மந்திர சக்திகளைக் கும்பத்திலே பதித்துப் பூஜிப்பர்.

பின்னர் பிரதான குண்டத்திலே பிரதான சிவாசாரியார் அக்கினி காரியம் செய்ததும் அதிலிருந்து அக்கினியைப் பிரித்தெடுத்து ஏனைய குண்டங்களுக்குரிய சிவாசாரியார்கள் தங்கள் குண்டங்களில் இட்டு அக்கினிகாரியம் செய்வர்.

இவ்வாறு பிரதான குண்டத்திலிருந்து அக்கினியை பிரித்துக் கொடுப்பது அக்கினி விபஜனம் எனப்படும்.

யாகபூஜை, பகலில் சூரிய பூஜையுடனும் இரவில் சந்திர பூஜையுடனும் ஆரம்பிக்கும்.

**ஸ்பர்சாகுதி:**

யாகசாலையிலே அக்கினியிலும், கும்பத்திலும் ஆவாகனம் செய்து பூஜிக்கப்பட்ட தெய்வசாந்நித்தியத்தை பிம்பத்திலே ஒடுக்குவதே ஸ்பர்சாகுதி யாகும். அக்கினியுடன் கும்பத்தையும் கும்பத்துடன் பிம்பத்தையும் தர்ப்பைக் கயிறு, நூல் முதலியவற்றால் நாடீசந்தானம் செய்து (தொடுத்து) மும்முறை யாககுண்டத்திலும் மூலமூர்த்தியிலுமாக ஸ்பர்சாகுதி செய்து இறுதியில் நாடீசந்தானத்தை மூலமூர்த்தியில் சேர்த்து விடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பூர்ணாகுதி:**

இறுதியில் பிரதான சிவாசாரியார் பிரதான குண்டத்தில் பூர்ணாகுதி வழங்கியதும் ஏனைய சிவாசாரியர்களும் தத்தம் குண்டங்களில் பூர்ணாகுதி கொடுத்துப் பிரதான குண்டத்தில் மஹாபூர்ணாகுதி வழங்கி ரக்ஷைஎடுத்துக் கும்பத்திற்குச் சாத்தி அதனை அனைவருக்கும் வழங்குவர்.

**கும்ப உத்தாபனம்:**

குறிக்கப்பட்ட சுபநேரத்தில் சகலவித தோஷங்களும் நிவர்த்தியாகும் பொருட்டு நவக்கிரகதானம், யாத்ராதானம் என்பன வழங்கிய பின் பரிசாரகரை அலங்கரித்து அவரை வாகனமாகப் பாவித்து அவர் சிரசில் பிரதான கும்பத்தை வைத்து மங்கல வாத்தியங்கள் முழங்க ராஜோபசாரங்களுடன் வீதி வலமாக எழுந்தருளிவிப்பர்.

ஸ்தூபிக்கென அமைக்கப்பட்ட கும்பத்தையும் இதனோடு அல்லது முன்பே வலமாகக் கொண்டு வந்து முதலில் ஸ்தூபிக்கு அபிஷேகம் செய்வர்.

**கும்பாபிஷேகம்:**

மங்கலவாத்தியங்களும், வேதகோஷங்களும் முழங்கப் பிரதான கும்பமும் அஷ்டவித்யேஸ்வர கும்பங்களும் மூலமூர்த்திக்கு முன்னர் வைத்து நியாசங்கள் செய்யப்பட்ட பின் அபிஷேகம் செய்யப்படும். மஹாஹவிர் நிவேதனம் என்னும் விசேஷநைவேத்தியத்தை நிவேதித்தபின் கதவைச் சாத்தி விடுவர்.

**தசதர்சனம்:**

இதன்பின் பண்ணிசை நிகழ்த்திக் கதவினைத் திறந்து மங்கலப் பொருட்களான பசு, நிறைகுடம், தீபம், கண்ணாடி முதலியவற்றையும், சுமங்கலியையும் தரிசிக்கச் செய்வர். பின்பு தர்மகர்த்தாக்கள், உபயகாரர் முதலியவர்களுக்கு அபிஷேகம் நிகழும். (அவபிருத ஸ்நானம் என்று இதனைக் கூறுவர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆலயங்களின் அக்கினிகார்யம்

ப்ரஹ்மஶ்ரீ. நா. சிவசங்கரசர்மா
B. A. (Hons) Geeg. P. G. D. E. (Merit)
Dip. in Ddu. mgt (First Cla.)
புவியியலாசிரியர், யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி.

## அறிமுகம்

இன்று எமது சமயவழிபாட்டு முறைகளில் ஏற்பட்டுவரும் விழிப்புணர்வு காரணமாக, கிரியை வழிபாடுகளில் ஈடுபடும் பக்தர்கள் அக்கிரியைகள் பற்றி ஆராயந்தறிய விரும்புகின்றனர். எனவே அக்கிரியைகளை நிகழ்த்துவோர் பக்தர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் வகையில் போதிய விளக்கத்தை அளிக்க வேண்டிய கடப்பாடுடையவர்களாகின்றனர். இவ்விதம் கிரியைகள் தொடர்பான போதிய விளக்கத்தைப் பெறுவது அக்கிரியைகளில் மிகுந்த ஈடுபாட்டுடன் பங்குபற்ற வாய்ப்பாகின்றது. இதற்காகவே "அக்னி கார்யம்" பற்றி இங்கு நோக்கப்படுகின்றது.

ஆலயங்களில் பூஜை எவ்வளவு முக்கியமோ, அவ்வளவிற்கு அக்னிகார்யமும் அதன் கூறான ஹோமமும் முக்கியமானதே. ஆலய பூஜை வழிபாடுகளில் இதனாலேயே அக்னிவழிபாடு ஒரு வகையாக உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த ஆலய பூஜை வழிபாடுகளின் வகைகளாகப் பின்வருவன உள்ளடங்குவதாக சி. வி. சிவராம கிருஷ்ணசர்மா (2009) குறிப்பிடுகின்றார்.

(1) ப்ரம்மம் - விக்ரஹங்களுக்குப் பூஜை செய்தல்
(2) கும்பம் - கலசங்களை வைத்துச் செய்யும் பூஜை
(3) மண்டலம் - நிலத்தின் மீது கோடுகளை வரைந்து அவற்றிற் செய்யும் பூஜை
(4) ஹோமம் - அக்னியின் வழியாகச் செய்யப்படும் பூஜை

இந்த ஹோமமானது அக்னிகார்யம் மூலமாகவே இடம்பெறுகின்றது. இவ்வக்னிகார்யமானது மிகப்புனிதமான ஒரு வழிபாட்டு முறையாகும். அக்னியை ஹோமகுண்டத்தில் உண்டாக்கி, அதனைச் சிவசொரூபமாக்குதலையே இது குறிக்கின்றது. இச்சிவாக்னியிலுள்ள சிறப்புக்களாக, அது நைவேத்யத்தை நேரே ஏற்பது அநேகவிதமான சுத்திகளைச் செய்யத்தக்கது, சிலவகைக் கிரியைகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலனை அந்தந்த நேரமே கொடுக்கத்தக்கது என்பவற்கைக் குறிப்பிடலாம். (சிவபாதசுந்தரம் சு, 1978)

நாம் வழிபடப்போகும் ஒரு தெய்வத்தை நாமே பிறப்பித்து, உருவாக்கிப் படிப்படியாக அதனைக் குழந்தையாக வளர்த்தெடுத்து அதன்பின் நமது வேண்டுகோளை முன்வைத்து அருளைப் பெறுகின்றோம். அக்னிதேவனாகிய அத்தெய்வத்தின் அருளை மட்டுமன்றி அதனூடாக வேறு பல தெய்வசக்திகளையும் அழைத்துப் பயன்பெறுகின்றோம். இதற்காக அக்னியை முறைப்படி வளர்த்து அதற்கு வேண்டிய உபசாரங்கள் கொடுத்து அதற்குக் காவலிட்டபின் நாம் வழிபடும் மூர்த்தி அக்னியில் ஆவாஹனம் செய்யப்படுகின்றது. அந்த மூர்த்திக்குரிய மந்த்ரங்கள் கூறி ஆகுதிகள் பல வழங்கப்படுகின்றன. இதுவே அக்னிகார்யக் கிரியையாகும்.

மூலமூர்த்தியிலுள்ள அதே இறையருட்சக்தியைக் கும்பத்திலும், அக்னியிலும் எழுந்தருளும்படி செய்திருப்பதால், மூன்று இடங்களிலும் அச்சக்தி காணப்படுகின்றது. மூலமூர்த்தியானது பிருதுவி ஆகிய மண்ணின் அம்சம் (நிலம்), கும்பத்திலுள்ளது நீர், ஹோம குண்டத்திலிருப்பது அக்னி, இவற்றைச் சூழ்ந்திருப்பது ஆகாயம், இவ்வாறு ஆகாயம் முழுவதும் பரந்திருக்கும் இறைசக்தியைக் காற்றினூடாக அக்னியில் கொண்டுவந்து, அதிலிருந்து கும்பநீருக்கு ஈர்த்து அதனை நிலத்தின் அம்சமான மூலமூர்த்திக்கு அபிஷேகம் செய்வதன் மூலம் அந்த மூர்த்தி எமக்கு அருள்பாலிக்கவல்ல தெய்வீக சாந்நித்யத்தைப் பெறுகின்றது எனவே பிரபஞ்சமெங்கும் வியாபித்துள்ள இறையருட்சக்தியை மூர்த்தியிடம் (விக்ரஹம்) இணைக்கும் ஊடகமாக அக்னியும், அவ்வாறு இணைப்பதற்கான கிரியையாக அக்னிகார்யமும் விளங்குகின்றன.

## அக்னிகார்யத்திலடங்கும் கிரியைகள்

அக்னிகார்யத்தில் அக்னி, நீர் (அர்க்யம்) என்பனவும் குருவும் முக்கியத்துவம் பெறுவதைக் காணலாம். இதனை

*"அக்னிஸ் ஸர்வ தேவதா*

*ஆ போனவ ஸர்வ தேவதா*

*ப்ரஹ்மணோாவை ஸ்ர்வ தேவதா"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என தேவம் குறிப்பிடுகின்றது. (சோமசுந்தசர்மா 2009) அக்னி நீர் என்பவற்றிற்குத் தெய்வீகத்தன்மை ஏற்படுத்துவதற்கான மந்த்ரம், த்ந்த்ரம், க்ரியாபாவம் என்பன குருமூலமாகவே இடம்பெறுவதால் இங்கு குருவுக்குச் சிறப் பிடம் உள்ளது. குருவானவர் சாமான்யக்னியைச் சிவாக்னியாக்குவதற்காகச் செய்யப்படும் கிரியையே அக்னிகார்யம். இது குருமாராகிய சிவாச்சார்யார்களால் செய்யப்படும் ஆன்மார்த்த, பரார்த்தக் கிரியைகளில் ஓரங்கமாக விளங்குகின்றது. சிவாச்சார்யாராக விளங்குபவர் முதலில் "அந்தர்யாக பூஜை" (மனத்திற்குள் பூஜித்தல்) செய்த பின்பே வெளியில் பூஜித்தலாகிய பஹிர்பூஜை செய்ய வேண்டும்.

இந்த அந்தர்யாகத்தில் நாமி குண்டத்தில் தானாகவே உற்பத்தியாகிய அக்னியில் ஹோமம் செய்ய வேண்டும் இவ்வக்னிகார்யத்தில் சுத்தமாயை குண்டமாகும். இச்சை, ஞானம், கிரியை எனும் மூன்றும் மேகலைகள், சுழிமுனை சிருக்கு, இடாநாடி சுருவம், மூலாதாரம் நெய்க்கிண்ணம், பிந்துவிலிருந்து வெளிவரும் அமிர்தம் நெய், பின்னர் பஹிர்பூஜையில் அக்னிகார்யத்திற்குரிய அக்னி சிவசக்தி ஐக்கியத்தினால் உருவாக்குவதாகப் பாவனை செயயப்படுகிறது.

சிவாச்சார்யார் கும்பத்தில் மூர்த்தியை எழுந்தருளச் செய்து பூஜித்ததும் உத்தரவு பெற்றுக் குண்டத்தை வலமாக வந்து, குண்டநாமி தனக்கு முன் அமையுமாறு குண்டத்தின் முன்னமர்ந்து அர்க்கியங்கூட்டிப் பின்வரும் பதினெட்டுக் குண்டசம்காரங்களையும் செய்தல் வேண்டும். நிரீஷணம், புரோஷணம், தாடனம், அப்யுஷணம், கனனம், அவகீரணம், பூரணம், சமீகரணம், சேசணம், குட்டனம், சம்மார்ஜனம், லேபனம், அப்யர்ச்சனம், திரிசூத்ர வேஷ்டனம், சம்பூஜனம், ரேகாதிரயம், வஜ்ரீகரணம், சதிஷ்பத ரியாசம் என்பனவாகும்.

குண்டத்தின் நடுவில் கூர்ச்சரூபமான விஷ்டரத்தில் வாகீஸ்வரீ சமேத வாகீஸ்வரனை உரியவாறு தியானித்து, அரனி சூர்யகாந்தம் என்பவற்றிலிருந்து தோன்றிய அக்னி, லொகிகாக்னி ஏதேனும் ஒன்றைத் தருவித்து, அதிலிருந்து ராஷசரின் பொருட்டு ஒரு துண்டை நிருதியில் எடுத்தெறிந்து, அக்னியை நிரீஷணம், புரோஷணம், தாடணம், அப்யுஷணம் என்ற சம்ஸ்காரங்களால் சோதித்து, லௌகிகாக்னியைத் தியானித்து சம்ஹார முத்திரையால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதாக்னியையும், நாபியக்னியையும் சுழிமுனை வழியாக ஒருங்கு சேர்த்துப் பிங்கலை வழியாக ரேசகம் செய்து உத்பவ முத்திரையால் வெளிக்கொணர்ந்து பூதாக்னி, பிந்த்வக்னி, ஜடராக்னி என்பவற்றை வெளியிலுள்ள அக்னியுடன் சேர்த்து அதனைச் சம்ஹிதையால் பூஷித்து சம்ரக்ஷணம், அவகுண்டனம் தேனுமுத்திரை காட்டி அக்னியைக் கையிலெடுத்து மும்முறை குண்டத்தை வலமாகச் சுற்றி அதனை சிவபீஜமாகப் பாவித்துக் குண்டத்தில் வாகீஸ்வரியின் கர்ப்பநாடியில் வாகீஸ்வரரால் வைக்கப்படுவதாக நிலத்தில் முழந்தாளூன்றி ஆத்மசம் முகமாகச் சேர்ப்பிக்க வேண்டும்.

பின்னர், சௌச ஆசமனத்திற்காகத் தோய (நீர்) பிந்துவைக் கொடுத்து, சமித்துக்களை வைத்து அக்னியை ஜ்வலிக்கச் செய்ய வேண்டும். கர்ப்பரக்ஷைக்காகத் தேவியின் இடதுகையில் அஸ்திரகங்கணம் கட்டுவதாகக் கற்பித்து அதனை மேகலையில் வைத்து கர்ப்பாதானம், பும்ஸவனம், சீமந்தோந்நயனம், ஜனனம், ஜாதகர்மம், ஆசௌசநீக்கம் என்பவற்றுக்காகத் தனித்தனி ஆகுதிகள் கொடுத்து, தர்ப்பைக்கங்கணத்தை அவிழ்த்துத் தேவியைப் பொற்கங்கணம் அணிந்திருப்பவளாகத் தியானிக்க வேண்டும்.

அக்னிரக்ஷைக்காகப் பரிதி, விஷ்டர, பரிஷ்தரணங்களை மேகலையில் வைத்து அக்னியின் புஷ்டிக்காக நெய்யில் நனைந்த ஐந்து சமித்துக்களை ஹோமம் செய்து, பரிதி விஷ்டர, பரிஷ்தரணங்களுக்குரிய தெய்வங்கள், தசதிக்பாகலகர்கள், தசாயுதங்கள் என்பவற்றைப் பூஜிக்க வேண்டும். பின்னர் உரிய இடங்களில் நெற்பொரியினால் அலங்கரித்து அர்க்யம் கொடுத்து "பாலகனைக் காப்பாற்றுங்கள்" என்ற சிவாக்ஞையை அத்தெய்வங்களிடம் சேர்ப்பிக்க வேண்டும்.

இதன்பின் சிருக்சுருவ சம்ஸ்காரம் ஆஜ்யசம்ஸகாரம், வக்த்ர ஆதாரம், வக்த்ரானுசந்தானம், வக்த்ரைகீகரணம் என்பவற்றைச் செய்து, நாமகரணஞ் செய்து பாலசிவாக்கனியைத் தியானித்து உபநிஷ்கிரமணம், அன்னப்பிராசனம், சௌளம், உபநயனம் வௌவனப்பராயமெய்துதல் என்பவற்றிற்காக உரிய ஆகுதிகள் கொடுத்து யெவனாக்கினியை தியானித்து விரதசமா வர்த்தனம், விவாகம் முதலியவற்றைக் கற்பித்து உரிய ஆகுதிகள் கொடுத்து வ்ருத்த சிவாக்னியைத்தியானிக்க வேண்டும். பின்னர் வாகீஸ்வரி சமேத வாகீஸ்வரருக்கு ஆகுதி கொடுத்து விசர்ஜனம் செய்து விவாகாந்த சம்ஸ்சார பூர்த்திக்காப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்ணாகுதி கொடுக்க வேண்டும் வௌஷட் என்பதை இறுதியாகக் கொண்ட மூலமந்த்ரம் மூலமாகவே இது வழங்கப்பட வேண்டும்.

## பஞ்சகுண்ட பூஜை

பிரபஞ்ச சக்தியானது எமது சக்திக்கு அப்பாற்பட்ட வெருஞ்சக்தியாகும். அதனை ஒரேதடவையில் ஒன்றாக ஈர்த்து எடுத்து விட முடியாது என்பதாலேயே அச்சக்தியின் அம்சங்களைப் பகுதி பகுதியாகப் பகுத்து, ஒவ்வோரிடத்திற் குவித்து அவற்றை ஒன்றாக இணைக்கின்ற முயற்சியாக அமைவதே யாகசாலையில் 1, 5, 9, 17, 25, 33, 49 என்ற எண்ணிக்கையிலான ஹோம குண்டங்களில் பூஜிப்பதாகும்.

இச்செல்லக்கதிர்காம சுவாமி ஆலயத்தில் பஞ்சகுண்ட பக்ஷமாகவே இம் மஹாகும்பாபிஷேகம் இடம்பெறுவதால் இங்கு பஞ்சகுண்ட பூஜை பற்றியே சற்று விரிவாக நோக்கப்படுகின்றது.

பஞ்சாக்னி விபஜனத்திற்காக முதலில் பிரதான அக்னியில் சிவாக்னி, ஆகவனீயம், தக்ஷிணாக்னி, கேவலாக்னி, கார்ஹபத்யாக்னி, வ்ருத்தாக்னி, சாமான்யக்னி, யௌவனாக்னி, பாலாக்னி, சூக்ஷமாக்னி, காலாக்னி ஆகிய அக்னியின் அங்கங்களுக்குத் தனித்தனி ஆகுதிகள் கொடுக்க வேண்டும். பின்னர் பிரதான குண்டத்தில் (ஈசானம்) அக்னியை ஐந்தாகப் பாகஞ்செய்தபின் அவ்வவ்விடங்களிலுள்ள அக்னியை எடுத்து அதே திக்குகளில் (கிழக்கு, தெற்கு, வடங்கு, மேற்கு) இருக்கும் ஏனைய நான்கு குண்டங்களிற் சேர்பிக்க வேண்டும். இது மூர்த்திகளாற் செய்யப்படும். மேலும் பிரதான குண்டத்திற்கு மேற்கில் சருபாகம் (ஸ்தாலீபாகம்) செய்வதற்காக கார்ஷபத்யாக்னியைப் பிரித்து உரிய இடத்தில் வைத்தல் வேண்டும்.

இப்பொழுது பிரதான குண்டத்திலிருப்பது விருத்த சிவாக்னி இந்த அக்னியில் தான் மூலமூர்த்தி ஆவாஹனஞ் செய்யப்படும். இங்கு ஈசானம், நேத்ரம், அஸ்த்ரம் எனும் மந்த்ரங்கள் சிறப்பிக்கப்பவடுவதுடன் ஆகாய மூர்த்தியும் அதன் அதிபதியும் ஆவாஹிக்கப்படும். ஈசானம் என்பது இறைவனது மேல்நோக்கிய முகத்தைக் குறிக்கின்றது. ஈசன் யாவற்றையும் ஆள்பவன். அவன் தனது கண்களால் உலக ஜீவராசிகள், சடப்பொருட்கள் யாவற்றையும் பார்த்து காத்து நிற்பதையே நேத்ர (கண்) அஸ்த்ர (ஆயுதம்) மந்த்ரங்கள் உணர்த்துகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கிலுள்ள குண்டத்தில் இருப்பது ஆஹவனீயாக்னி, ஆஹவனீயம் என்பது ஹோமம் செய்து பிரார்த்தித்து அர்ப்பணித்தலைக் குறிக்கும். இந்த அக்னியில் வாயுமூர்த்தி அதன் அதிபதி தத்புருஷமந்த்ரம் ஹருதய மந்த்ரம் என்பன அசைவுறும் மனத்தைக் கட்டுப்படுத்திப் (ஹருதயம்) பிரார்த்தனை செய்ய வேண்டும் என்பதையே இது உணர்த்துகின்றது. இக்குண்டம் சதுரவடிவானது.

தெற்கிலுள்ள குண்டத்தில் இருப்பது தணாக்னி, யமனுக்குரியதும் ஆன்மா உடலைவிட்டுச் செல்லும் திசையுமான தெற்கிலுள்ள இவ்வக்னியே அபரக்கிரியைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. இத்திசையில் சிவன் சகோதரமூர்த்தியாக வஹ்னிமூர்த்தி, அதன் அதிபதி, அகோரமந்த்ரம், சிரோ மந்த்ரம் என்பன முக்கியத்துவம் பெறுகின்றன. சிரம் - தலை, இச்சிரோமந்த்ரம் இங்கு முதன்மை பெற்காரணம் "எண்சாண் உடம்புக்குச் சென்னி பிரதானம்" என்பதற்கேற்ப ஆன்மாக்கள் இம்மானிடப்பிறப்பெடுத்ததன் தலையாய பணி இறப்பின் பிந்திய நிலையின் தேவைகளை நிறைவுசெய்வதே என்பதை உணர்த்துவதே ஆகும். இக்குண்டம் அர்த்த சந்த்ர (பாதிச்சந்திர) வடிவானது.

அடுத்து பூஜிக்கப்படும் வடக்குக் குண்டத்தில் இருப்பது கேவலாக்னி, வேறெவற்றையும் சாராது தனித்துவமாக இருக்கும் அக்னியே இது இதில் ஜலமூர்த்தி (நீர்), அதன் அதிபதி, வாமதேவ மந்த்ரம், சிகா மந்த்ரம் என்பன சிறப்பிக்கப்படுகினறன. சிகா - தலைமுடி, அறிவைக்குறிப்பது சிரசைக் காப்பது சிகையே என்பதற்கிணங்க, ஆன்மாக்கள் இறப்பின்பின் வீடுபேறடைய அறிவும் சக்தியுமே அடிப்படை என்பதையே இது உணர்த்துகின்றது. இங்கு சக்தி முதன்மை பெறுவதற்கு வடதிசை சக்தியை (வாமதேவம் - இடப்பாகம், சிவனது சக்திக்குரியது) கூட்டுவதே காரணமாயிற்று. எனவே இவ்வுலகில் ஆன்மீக உணர்வுடன், விண்ணகத்தில் வீடுபேறடையும் அறிவியற் சிந்தனையுடன் செயற்பட்டால் இறைவனின் பத்மபாதங்களை அடைவற்கான அனுக்ரஹமுகம், கவசம் - பாதுகாப்பது எனவே இல்லறத்தில் (க்ருஹஸ்தம்) இருந்து கொண்டு வாழ்வின் பாதுகாப்பிற்காக யாவருக்கும் சேவையாற்ற வேண்டும் என்பதையே இது குறிக்கின்றது. (கோப்பாய் சிவம், 2010) இக்குண்டம் வகுத்த (வட்ட) வடிவானது.

இவ்விதம் பல்வேறு படிமுறைகளில் பகுதி, பகுதியாகச் சேர்ந்த பிரபஞ்சசக்தியைப் பிரதான குண்டத்தில் ஒன்று சேர்த்து நாடீசந்தானம் மூலம் குடும்பத்திற் சேர்க்கப்படும். இங்கு நாடீசந்தானம் என்பது பிரபஞ்ச சக்தியைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டத்தில் இறக்கி அதனைக் கும்பத்திலோ அல்லது வேறிடத்திலோ பூஜித்த மூர்த்தியிடம் சேர்க்க உதவும் நூல் அல்லது தர்ப்பையைக் குறிக்கும்.

குண்டங்களிலுள்ள அக்னிகள் ஒடுக்கப்படும் போது ஸத்யோஜாதத்திலிருந்து படிப்படியாகத் தத்புருஷம் வரை பிரதான அக்னியில் ஒடுக்கப்படும். இது இறையனுக்ரஹம் மூலம் சதாசிவமூர்த்தியிடம் ஐக்கியமாகும் நிலையை உணர்த்துகின்றது. பின்னர் வ்ருத்த சிவாக்னியிற் பூஜிக்கப்பட்ட மூர்த்திக்கு அக்னியூடாக மந்த்ரதர்ப்பணம், தீபனம் செய்து மஹாபூரணாகுதி மற்றும் உபசாரங்கள் வழங்கப்பட்டுக் கும்பத்தில் ஒடுக்கப்படும். அக்கும்பநீர் விக்ரஹத்திற்கு அபிஷேகம் செய்யப்படுவதன் மூலம் விக்ரஹத்தில் தெய்வீக சாந்நித்யம் பெருகும்.

## ஹோமத்திற்குரிய விசேஷ திரவியங்கள்

பலாசு, கருங்காலி, அரசு, அத்தி, சந்தனம், ஆல், வன்னி, வில்வம், எருக்கு, நாயுருவி, மா, பாடலி, மூங்கில், பலா, அறுகு, தர்ப்பை, நெய், சரு, அன்னவகை, எள்ளு, வெண்கடுகு, உழுந்து நெற்பொரி, சத்துமா, பால், தயிர், வெல்லம், பழவகை, தேங்காய், பயறு கடலை மொச்சை, கோதுமை, மூங்கிலரிசி, தினை, நெல்வகை, அரிசி, கரும்பு, கீரை, தேன், சர்க்கரை, அவல், மோதகம், அபூபம், ராஜமாஷம், தேவதாரு, கராம்பு, ஏலம், கிழங்குவகை, இலாமிச்சை, லவங்கம், ஜாதிக்காய், குங்குமப்பூ, பூவகை, பத்ரம், நீலோத்பலம், தாமரை முதலியன இவற்றுடன் சுகந்த தாம்பூலம்.

பலன்கள்:- ஸமித்து - சாந்தி, புஸ்பங்கள், சௌபாக்யம், பால் புஷ்டி
அன்னம்:- ஆசைகள் பூர்த்தி, நெய் - ஆயுள் விருத்தி, தாமரை - ஞானம்,
நீலோத்பலம்:- கன்னிப்பெண், அறுகு, ஆயுள், கோதுமை, சுகம்,
எள்:- அனைவரும் விரும்புதல், நீவாரம் - எப்பொழுதும் பெருஞ்செல்வம்.

இவை பாத்ம ஸம்ஹிதையின் அத்தியாயம் ஏழில் குறிப்பிடப்பட்டுள்ளது. என்கிறார் சி. வி. சிவராமகிருஷ்ணசர்மா (2009)

ஹோமத்திற்குப் பயன்படுத்தப்படும் ஸமித்து விடயத்தில் எச்சரிக்கை தேவையாகும். பட்டை நீங்கிய ஸமித்து - அழிவை உண்டாக்கும். ஒடிந்த ஸமித்து மனைவியின் மரணம், துணையுள்ளவை கலசம், அளவுக்கதிகமான ஸமித்து - மழையையுண்டாக்கும் (ஸமித்துக்கள் ஆறு அங்குல அளவே இருக்க வேண்டும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸமித்துக்கள் கிடைக்காதபோது நெய்யினால், அல்லாது நெய் கிடைக்காத போது ஸமித்துக்கள், தான்யங்களால் ஹோமம் செய்யலாம். எனினும் நெய்யும் எள்ளும் குறைவுபடக் கூடாது.

## அக்னிகார்யத்தின் மருத்துவ நோக்கு

அக்னிகார்யத்திற் பயன்படுத்தப்படும் திரவியங்கள் பலவித நோய்களை நீக்கும் தன்மை மிக்கவை. உதாரணமாக, ஆயுள்வேத மருத்துவத்தில் மருந்து தயாரிப்பிற்குப் பயன்படுத்தப்படும் தேவதாரு மரமானது, அக்னிகார்யத்தில் ஹோமங்களின் போது ஸமித்தாகப் பயன்படுத்தப்படுகின்றது. இதன்மூலம் ஜ்வரம் (காய்ச்சல்), கபம், வாதம், கொட்டாவி, விக்கல், தும்மல், முதலியன் பாதிக்காது மனித உடல் பாதுகாக்கப்படுகின்றது. இவற்றை நெய்யில் நனைத்து ஹோமம் செய்வதால் தோன்றும் புகை மூலம் உஷ்ண ரோகங்கள், நீங்குகின்றன. மேலும் ஹோமத்திரவியங்கள் எரிவதால் தோன்றும் புகைமூலம் சூழலிலுள்ள வளிமண்டலத்திற் காணப்படும் மாசுக்களும் மனித உடலுக்குத் தீங்குபயக்கும் நுண்ணுயிரிகளும் அழிக்கப்பட்டுச் சூழல் தூய்மைப்படுத்தப்படுகின்றது.

ஹோமம் செய்விக்கும் கர்த்தா, மந்த்ரங்கள் ஜபிப்பவர் முதலியோரின் உடலானது மழை, காற்று, குளிர் வெயில் முதலியவற்றிற்கு ஈடுகொடுக்கும் சக்தியைப் பெறுகின்றது. இந்த அரிப்பு, கபம், வாதம் முதலியன நீங்கி அவர்கள் மன ஒருமைப்பாட்டைய வழியேற்படுகின்றது.

## முடிவுரை

சிவனது முக்கண்களில் நெற்றிக்கண்ணான அக்னியில் இருந்து வெளிப்பட்ட பொறிகள் மூலம் தோன்றியவனாக முருகப்பெருமான் விளங்குவதால் அம்முருகவழிபாட்டில் அக்னிமுக்கியத்துவம் பெறுகின்றது. அவ்வகையிலேயே செல்க்கதிர்காமவேலவனின் மஹாகும்பாபிஷேகத்தில் சிறப்பிடப்பெறும். அக்னிகார்யம் பற்றி இங்கு வரிவாக நோக்கப்பட்டதுடன், ப்ரம்மமானது ஆகாயத்திலிருந்து வாயுவுக்கும், வாயுவில் இருந்து அக்னிக்கும், அக்னியிலிருந்து நீருக்கும், நீரிலிருந்து நிலத்திற்கும் இறங்கி வருகின்றது என்ற தத்துவத்தை உணர்த்தும் வகையில் மூர்த்திகரத்தை மேன்மையுறச் செய்யும் அக்னிகார்யத்தின் அங்கமான பஞ்சகுண்டபூஜை பற்றியும் இங்கு சுருக்கமாக நோக்கினோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்:-


01. கைலாசநாதக்குருக்கள் கா. (2009) சைவத்திருக்கோயிற்கிரியைநெறி
பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள் ஞாபகார்த்தசபை
வெளியீடு, நல்லூர், யாழ்ப்பாணம்.

02. (2003) குமாரதந்த்ரம் (தமிழ்மொழிபெயர்ப்பு)
அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோவில் வெளியீடு,
பழனி.

03. கோப்பாய்சிவம் (2010) சைவக்கோயில்களும் மனிதஉடலும்
(வியத்தகு உவமைகள்)
மணிமேகலைப் பிரசுரம், சென்னை.

04. சிவராமகிருஷ்ணசர்மா. சி. வி. (2009) ஆலய அர்ச்சனை ஆகமங்களின்
வழியில்
விதிமுறைகள், நர்மதா பதிப்பக வெளியீடு, சென்னை.

05 சிவானந்தசர்மா. ப. (2000) அக்னிகார்யம் ஓர் அறிமுகம்
சர்வானந்தமயபீட வெளியீடு, இணுவில்.

06. சிவபாதசுந்தரம்சு. (1978) சைவக்கிரியை விளக்கம்,
சைவபரிபாலனசபை வெளியீடு, யாழ்ப்பாணம்.

07. சிவானந்தசர்மா ப. (1992) சைவாலயக்கிரியைகள்,
பல்லவி, ஆவரங்கால், புத்தூர்.

08. சோமசுந்ரசர்மா மகாதேவ (2009) “கும்பாபிஷேகக்கிரியை”
மஹாகும்பாபிஷேகச் சிறப்புமலர், திருவருள்மிகு
ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் திருக்கோயில், இணுவில்.

09. தவயோகராஜா வ. (2005) இந்துப்பாரம்பரியம்,
கொழும்பு மகளிர் இந்துமன்ற வெளியீடு
கொழும்பு - 03

10. பரமசாமிக்குருக்கள் வை. மு. (2009) “சிவயாகமண்டபம்”
கோவைக்குரு தரிசனம்,
சிவஸ்ரீ. வை. மு. பரமசாமிக்குருக்கள்
ஞாபகார்த்த வெளியீடு, கோப்பாய்.

11. பூர்ணானந்தேசுவரக்குருக்கள் இ. கு. (1964) அக்கினி காரியம்
பிராமண சமூகசேவா சங்க வெளியீடு, மட்டக்களப்பு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விபூதியின் பெருமை

நி. த. நடராஜ தீக்ஷிதர்
சிதம்பரம் ஸ்ரீ நடராஜர் ஆலய டிரஸ்டி பூஜை
தமிழ்நாடு.

சிவபெருமானை வழிபடும் சைவர்களுக்கு சிவச் சின்னமானதாகவும், முக்கியமானதாகவும் அமைவது விபூதி. பஸ்மம், ரக்ஷை, திருநீறு என்று பல்வேறு பெயர்களால் போற்றப்படுவது விபூதி. விபூதி என்பதற்கு மொழியியல்படி, பல்வேறு அர்த்தங்கள் உண்டு.

இறையருள் பெற்றது, உயர்விலும் உயர்வானது, முழுமையானது, எங்கும் நிறைந்திருப்பது, உள்ளத்தை தூய்மைப்படுத்துவது, வணங்கத்தக்கது, செழுமை நிறைந்தது, வளங்களைத் தரக்கூடியது, சித்திகளைத் தருவது, வேண்டும் வரங்களைத் தருவது, அலங்கரிப்பது.

சிவபெருமானின் திருமேனி முழுவது அலங்கரிக்கக் கூடிய ஒரே பொருள் விபூதி மட்டுமே. பொன்னார் மேனியனின் திருமேனியில் மேவியிருப்பதால், விபூதி பொன்னிறமாக, தங்கத் துகள்களாக மின்னுகின்றதாம் (பஸ்மோத்தூளித விக்ரஹாய நம: - ஸ்ரீ சிவாஷ்டோத்தரம்)

விபூதி காட்டும் தத்துவங்கள் எண்ணற்றவை. இறந்தபின் அனைவரும் சாம்பலாகத் தான் வேண்டும் என்பதைக் காட்டுகின்றது. ஆகையால், இறைவன் முன் அனைவரும் சமம் தான் என்பதையும் சுட்டுகின்றது. உலகம் அக்னியால் தூய்மையடைவது போல விபூதியால் ஆன்மாக்கள் தூய்மையடைகின்றது.

வேதங்களும், உபநிடதங்களும், புராணங்களும், தமிழ்த் திருமுறைகளும் விபூதியின் மகிமையைப் போற்றிப் பறைசாற்றுகின்றன. ஒரு சமயம், வித்துன்மாலி, தாரகாக்ஷன், கமலாக்ஷன் என்னும் மூன்று அரக்கர்கள் பறக்கும் தன்மை கொண்ட பொன், வெள்ளி, இரும்புக் கோட்டைகளைக் கொண்டு, தேவர்களை வருத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரக்கர்களின் தொல்லை தாங்காத தேவர்கள் பிரம்மா, விஷ்ணுவிடம் முறையிட, இவர்களை அழித்து சாம்பலாக்க, சிவபெருமானால் மட்டுமே முடியும் என்று அறிந்து, சிவனை நோக்கி பிரார்த்தனை செய்தனர்.

பிரம்மா தனது மனதிற்குப் பிடித்தமானதும், அவர் தோற்றுவித்தத்தும் ஆகிய மானச சரோவர் என்னுமிடத்திலும், மஹா விஷ்ணு தான் பள்ளி கொண்டிருக்கும், பாற்கடலில் சேரும் நதியாகிய விரஜா எனும் நதியின் கரையிலும் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் தவமிருந்து யாகம் செய்தனர்.

யாகத்தின் பஸ்மம் (சாம்பல்) போல அரக்கர்கள் அழிய பிரார்த்தனை செய்தனர். மஹாவிஷ்ணு, சிறப்பான மந்திரங்களால் யாகம் செய்தார். அது வேதங்களில், விபூதியைப் போற்றக் கூடிய, மஹாநாராயண உபநிடத் எனும் மந்திரமாக அமைந்தது.

பொதுவாக சிவாலயங்களில், விபூதியை அபிஷேகம் செய்யும்போது இந்த மந்திரங்களைத் தான் சொல்வது மரபு. (ஆத்மாமே சுத்யந்தாம் ஜ்யோதிரஹம் விரஜா விபாப்மா பூயாஸம் ஸ்வாஹா)

இந்த மந்திரம் - உடல், மனது, வாக்கு, ஆத்மா, அந்தராத்மா என அனைத்தையும் தியாகம் செய்தால், நமது ஜீவனை சிவபெருமான் தன் உடலில் சாம்பல் போல பூசிக்கொள்வார் என்கின்றது (மஹா நாராயண உபநி'த்தின் முழுமையான அர்த்தம் - மிகவும் அற்புதமானது.)

பிரம்மா, விஷ்ணு - இருவரின் தவத்திற்கு இணங்கி, சிவபெருமான் மூன்று அரக்கர்களையும், தன் மந்தகாசப் புன்னகையால் மட்டுமே எரித்து சாம்பலாக்கினார். தேவர்கள் மகிழ்ந்தனர்.

(ஒரு உபரி தகவல் : முப்புரங்களை எரித்தபொழுது, அக்கோட்டைகளின் ஒரு பாகம் மட்டும் முழுதும் எரியாமல் (வேகாமல்) பூமியில் விழுந்தது. அந்த இடம் வேகாக்கொல்லை என்று அழைக்கப்படுகின்றது.

இவ்விடம், தமிழகம், கடலூர் மாவட்டம், நெய்வேலிக்கு அருகாமையில் உள்ளது. இவ்வூரைச் சுற்றியுள்ள பகுதிகளில் எடுக்கப்படும் மண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கல் அமைக்க உதவினாலும், இந்த ஊர் மண் மட்டும் செங்கல் சுடுவதற்கு பயன்படாது. வேகாத மண் கொண்ட நிலம் என்பதால் வேகாக் கொல்லை என்று அழைக்கப்படுகின்றது. இவ்வூரில் அருமையான சிவஸ்தலம் உள்ளது)

சிவபெருமான் உடல் முழுவதும் பரவியிருக்கும் விபூதியை, சிவச் சின்னமாக, புனிதமான பொருளாக சைவர்கள் மதிக்கின்றார்கள்.

**விபூதி தயாரிக்கும் முறையை சாஸ்திரங்கள் அற்புதமாக விளக்கியுள்ளன.**

காராம்பசுவின் சாணத்தை நிலத்தில் விழும் முன் பிடித்து, அதன் கோமயத்தால் ஈரமாக்கி, உருண்டைகள் பிடித்து காய வைக்க வேண்டும். அதை, திரிபுர ஸம்ஹார காலம் என்று வர்ணிக்கக் கூடிய கார்த்திகை மாத பௌர்ணமியும், கிருத்திகை நக்ஷத்திரமும் இணைந்த கார்த்திகை தீபத் திருநாளில், எரியூட்ட வேண்டும். (சில ஆன்மீகர்கள் அன்று ஏற்றப்படும், சொக்கப்பனையில் தான் எரிக்கப்பட வேண்டும் என்பர்)

அது திறந்த வெளியில் தானாகவே ஆறவேண்டும். மார்கழி மாதம் முழுவதும் - பனி பொழிந்து, அந்த சாணச் சாம்பல் சற்றே நிறம் மாறிக்கொண்டிருக்கும். தை மாதம் முழுவதும் அச்சாம்பலை கிளறிக்கொண்டேயிருக்க வேண்டும். பனி பெய்ய பெய்ய சாம்பலின் கரிய நிறம் மாறி வெளிறும்.

மாசி மாதத்தின் மஹா சிவராத்திரியின் காலை நேரத்தில் அச்சாம்பலை எடுத்து, வஸ்திரகாயம் செய்ய வேண்டும். (வஸ்திரகாயம் - ஒரு பானையின் வாயில் தூய்மையான துணியைக் கட்டி, சாம்பலை எடுத்து, துணியின் மேல் கையால் தேய்க்க தேய்க்க, மென்மையான துகள்கள் பூசிக்கொள்ளத் தகுந்த விபூதியாக பானையினுள் சேரும்). அதை, சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்த பிறகு, சிவபக்தர்கள் தரிக்க வேண்டும்.

மேலே சொன்ன முறை மிக மேன்மையான முறை. மற்றும் சில முறைகளும் உள்ளன. (சாந்திகபஸ்மம், காமதபஸ்மம், பௌஷ்டிகபஸ்மம்) பரமசிவனின் ஐந்து முகங்களிலிருந்தும் தோன்றிய நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு ஆகிய பஞ்சபூதங்களின் தன்மையை விபூதி கொண்டிருக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபூதியை அனைத்து நிலையிலிருப்பவரும் பூசிக்கொள்ளலாம் என்று ஸூதஸம்ஹிதை வலியுறுத்துகின்றது. (பிரம்மச்சரியம், கிரஹஸ்தம், வானப்ரஸ்தம், சன்யாசம்)

சிவாலயங்களில், விபூதியை பிரஸாதமாக வலது உள்ளங்கையில் மட்டுமேதான் வாங்க வேண்டும். (உள்ளங்கை பிரம்ம அல்லது விஷ்ணு பாகமாகக் கருதப்படுகின்றது. பிரம்மா, விஷ்ணு தவமிருந்து பெற்றதால் - அவர்களின் பாகமாகிய உள்ளங்கையில்தான் பெற வேண்டும்)

ஆண்கள் விபூதியை திரிபுண்டரமாகவும் (விபூதியைத் தண்ணீரில் குழைத்து நெற்றியில் மூன்று கிடைக்கோடுகளாகவும்), உத்தூளனமாகவும் (தண்ணீரில்லாமல் வெறும் விபூதியை) அணிந்து கொள்ளலாம் என்றும்,

பெண்கள் - தண்ணீர் குழைக்காமல் மட்டுமே இட்டுக்கொள்ள வேண்டும் (உத்தூளனமாக) என்றும் சாஸ்திரங்கள் வலியுறுத்துகின்றன. பெண்கள் - ஆட்காட்டி விரல் அல்லது மோதிர விரலால் விபூதியை எடுத்து, நெற்றியில் ஒற்றைக் கோடாக மட்டுமே அணிந்து கொள்ள வேண்டும். (சிவ தீட்சை பெற்ற பெண்கள் மூன்று கோடுகளாக அணியலாம்)

விபூதிப் பூசிக்கொள்ளும் போது, சிவ பஞ்சாக்ஷர மந்திரத்தையோ அல்லது சிவசிவ என்றோ சொல்லிக்கொண்டேதான் தரிக்க வேண்டும். ஆண்கள் - விபூதியை தண்ணீரில் குழைத்து, ஆட்காட்டி விரல், நடுவிரல் மற்றும் மோதிர விரல் கொண்டு மூன்று கிடைக்கோடுகளாக, நெற்றியிலும், மார்பிலும், தொப்புளுக்கு மேலும், முழங்கால்கள் இரண்டிலும், இரு தோள்களிலும், இரு முழங்கைகளிலும், மணிக்கட்டுகள் இரண்டிலும், இரு விலாப் புறங்களிலும், கழுத்திலும் தரிக்க வேண்டும். (சிலர் இரு காதுகளிலும், சிலர் மேல் முதுகிலும், பின்கழுத்திலும் தரிப்பார்கள்)

காலை, மதியம், மாலை மூன்று நேரங்களிலும், பூஜை காலங்களிலும் மிக நிச்சயம் விபூதி தரிக்க வேண்டும். பஸ்மாபி'ேகம் - பல்வேறு தீட்டுக்களை அகற்றவல்லது. குளிக்கும் நீரில் விபூதியைத் தூவி விட்டு, அந்த விபூதி கலந்த தண்ணீரில் தலை முழுக எவ்விதமான தீட்டுக்களும் அகன்றுவிடும். பயம் நீங்கவும், ஜூரம் நீங்கவும், உடல் உபாதைகள் நீங்கவும் விபூதி பயன்பட்டிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபூதி இட்டுக்கொண்டிருப்பவரை சிவ அம்சமாகவேக் கருதி வழிபடும் வழக்கம் உண்டு. விபூதியின் புனிதத்தையும் அதன் மேன்மையையும் பல்வேறு புராணங்களிலும், திருமுறைகளில் பல்வேறு இடங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. பன்னிரு திருமுறைகளில் குறிப்பிடப்படும் சில சம்பவங்களை மட்டும் இங்கே காண்போம்.

சூலை (தாங்காத வயிற்று வலி) நோயால் துடிதுடித்த அப்பர் சுவாமிகள், தனது தமக்கையார் கையால் விபூதி பெற்றவுடன், வலி நீங்கப் பெற்று சைவத்திற்கு பெரும் தொண்டாற்றினார்.

சமண சமயத்தைச் சார்ந்திருந்த கூன் பாண்டியன் எனும் மன்னன் மதுரையை அரசாண்டு கொண்டிருந்தான். அவனுக்கு தீராத வெப்ப நோய் இருந்தது. அதை நீக்க அவன் மனைவி மங்கையர்க்கரசியார் சிவபெருமானை வேண்டினாள். அவள் கனவில் சிவன் வந்து திருஞான சம்பந்தரைக் கண்டு வந்தால் நோய் நீங்கும் என்றார். மங்கையர்க்கரசியாரும், அதன்படியே, திருஞான சம்பந்தரை தரிசித்து, தன் குறையைச் சொல்ல, அவர் "மந்திரமாவது நீறு, வானவர் மேலது நீறு" எனத் தொடங்கும் "திருநீற்றுப் பதிகம்" பாடி விபூதியை, கூன் பாண்டியனின் உடலில் பூசியவுடன், பாண்டியனின் நோய் நீங்கியது. கூன் பாண்டியன் சைவத் தொண்டு ஆற்றினான்.

சிவச்சிந்தனையில் சிறந்து விளங்கிய சேரமான் பெருமான், அரசு தாங்கி, ஒரு சமயம், பட்டத்து யானை மீது அமர்ந்து நகர்வலம் வருகின்றார். அப்பொழுது, துணிகளை வெளுக்கும் தொழிலாளர், உழமண் எனும் வெள்ளை நிற மண்ணைக் கூடையில் சுமந்து வர, நீரில் நனைந்த அந்த மண் அவரின் மேனி முழுவதும் வழிந்து, விபூதி பூசியது போல தோற்றம் தரச் செய்தது.

பட்டத்து யானையிலிருந்து, சலவைத் தொழிலாளியின் உடல் முழுவதும் திருநீறு பூசியிருப்பதைக் கண்ட சேரமான் பெருமான், யானையிலிருந்து உடன் இறங்கி, அவர் பெரும் சிவத்தொண்டர் போலும் என்று எண்ணி, சலவைத் தொழிலாளியை வணங்கினார்.

அரசன் தன்னைக் கண்டு வணங்கியதால், அச்சமுற்ற சலவைத் தொழிலாளி தன் நிலையை உணர்த்த, வெள்ளை உழமண் விபூதியை நினைவு படுத்திய காரணத்தினாலேயே, அவரை வணங்க முற்பட்டதை சேரன் விளக்கி, பரிசுகள் கொடுத்து மகிழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபக்தியில் சிறந்த ஒரு புகழ்ச்சோழ மன்னர், தனக்குக் கப்பம் கட்டாத மன்னன் மீது படையெடுத்து வர ஆணையிட, படைகளும் எதிரி நாட்டை வென்று, தோல்வி கண்ட வீரர்களின் தலைகளைக் கொண்டு வந்து, சோழனிடம் வெற்றிப் பரிசாக அளிக்க, அதைக் கண்டுகொண்டு வந்த மன்னன், அந்த வீரர்களின் தலைகளுள் - ஒரு தலை மட்டும் குடுமி கொண்டு, சிவச்சின்னமாகிய விபூதி அணிந்திருப்பது கண்டு அதிர்ந்து, ஒரு சிவனடியாரைக் கொல்லக் காரணமாகிவிட்டோமே என்று மனம் நொந்து, சோழன் அக்னியை மூட்டி அதனுள் விழுந்தான்.

சிவபெருமானிடம் அதீத பக்தி கொண்ட ஏனாதிநாதனார் என்பவர், படைகளுக்கு வாள் பயிற்சி அளிப்பவர். அவருடன் பல முறை போராடி தோல்வியுற்ற ஒருவன் அவரை வீழ்த்த, ஒரு உபாயம் செய்தான்.

அவன் ஏனாதிநாதரைத் தனிமையில் சமர் செய்ய அழைத்து, அச்சமயம் இவன் சிவச்சின்னமாகிய விபூதியைத் தரித்துக்கொண்டு, அதை கேடயத்தால் மறைத்துக் கொண்டு, போரிட வந்து, ஏனாதிநாதர் அருகில் வந்ததும், கேடயத்தை நீக்க, ஏனாதிநாதர் எதிரியாயிருப்பவன், தன்னைக் கொல்லவந்தவன் திருநீறு அணிந்திருப்பது கண்டு, அவனை சிவ அம்சமாகவேக் கண்டு, சண்டை செய்யாமல் பணிந்து மடிந்து சிவலோகம் அடைந்தார்.

மெய்ப்பொருள் எனும் அரசன் சிவபக்தி நிரம்பி, தனது அரசை நீதிமுறை தவறாது ஆட்சி செய்து வந்தார். சிவ தத்துவங்களில் மெய்யான உண்மைகளை மக்களுக்கு அறிவிப்பதில் தேர்ந்தவராக இருந்ததால் மெய்ப்பொருள் என்று போற்றப்பட்டார்.

இவரின் எதிரி தேசத்து அரசன், தமது வலிமையால் இவரை வெல்லமுடியாது என எண்ணி, சிவச் சின்னமாகிய விபூதி தரித்து, ஓலைச் சுவடிகளுடன், சிவனடியார் வேடத்தில் வந்து, அரசனிடம் ஆகம உட்பொருள் உணர்த்த வந்தேன் எனக் கூறினான்.

மெய்ப்பொருள் அதைக் கேட்க ஆவலாகக் கண் மூடி அமர, அச்சமயம் ஓலைச்சுவடிகளுள் ஒளித்து வைத்திருந்த கத்தியை எடுத்து, மெய்ப்பொருளை வெட்டினான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தம் கேட்டு வந்த மெய்க்காப்பாளன், எதிரியை வெட்டக் கையை ஓங்க, ரத்தம் சிந்திக் கொண்டு, மரணத்தின் தறுவாயில் இருந்தபோதும், மெய்ப்பொருள், இவர் எதிரியாக இருந்தாலும், சிவனடியார் கோலத்தில் இருப்பதால், இவரும் சிவாம்சமே, ஆகவே, இவருக்கு எவ்வித தொல்லையுல் இல்லாமல் எல்லை வரை பத்திரமாகக் கொண்டு விடக் கட்டளையிட்டான். அவ்வண்ணமே மெய்க்காப்பாளன் செய்தைக் கூற, மெய்ப்பொருள் அதன் பிறகு உயிரை விட்டு சிவபதம் அடைந்தார்.

விபூதி நோய்களை நீக்கும் அருமருந்தாகவும், சிவத்தொண்டிற்கு வழிகாட்டியாகவும், சிவசிந்தனை மேலிடுவதற்கு உதவும் சாதனமாகவும் விளங்குகின்றது. விபூதீரைச்வர்யம் - என்ற சொல் - விபூதி ஐஸ்வர்யங்களைத் தரவல்லது - என்ற அர்த்தம் கொண்டது.

**விபூதி அணிவோம் ! விதியை வெல்வோம் !!**

**தில்லை வாழ் அந்தணர் மரபைச் சேர்ந்தவர் சீரிய அறிஞரான பிரம்மஸ்ரீ த. நடராஜ தீக்ஷிதர் பழகுவதற்கு இனிமையானவர். பண்பு நிறைந்தவர். நெய்வேலி என்ற ஊரில் புவனேஸ்வரியம்பாளுக்கு பூஜை செய்து வாழ்ந்து வரும் இளைஞர். சைவம் வளர்க்கும் இவர் பணிகளை வாழ்த்தி இக்கட்டுரையை பிரசுரிக்கிறோம்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தில்லையின் ஆடவல்லான்

பாலஜோதிடர், சித்தாந்தரத்தினம்
ஆன்மீக சேவைச் செம்மல் பிரம்மஸ்ரீ
உ. வெங்கடேச தீக்ஷிதர், M.A.

அருள்மிகு நீர்வேலி ஸ்ரீ செல்லக்கதிர்காம ஸ்வாமி திருக்கோயில் மஹா கும்பாபிஷேக மலரில் இந்த முக்கியமான, சிறப்பான கட்டுரை வெளிவருவதில் மிகவும் பெருமைப்படுகிறேன். ஏனென்றால் இலங்கைத் தமிழர்களின் குல தெய்வமான தில்லை அரசனின் சிறப்பை சொல்லக்கூடியதாக இருப்பதால், எனவே எல்லோரும் எல்லாமும் பெற வேண்டி வாழ்த்துகிறேன்.

இளஞ்சூரியர், முதுசூரியர், என்றுபுகழ் பெற்ற இரட்டைப் புலவர்கள் செய்த தில்லைக் கலம்பகத்தில் தில்லை நடராஜரின் செயல்களை அழகு பட இரட்டை அர்த்தங்கள் உள்ளது போல் அமைந்த ஒரு பாடலையும் அதன் பொருளையும் இங்கே காண்போம்

அம்பு லிக்கொரு நட்டம் புரிந்தவர்,
அம்பு லிக்கொரு நட்டம் புரிந்திலார்,
ஆழி யும்சங்கும் மாலுக் களித்தவர்,
ஆழி யும்சங்கும் மாலுக் களித்திளார் ,
வம்பு லாவும் இதழியை வேட்டவர்,
வந்து செய்ய இதழியை வேட்டிலார்,
மானை யும்கைப் பிடித்தே நடத்தினார்,
மானை யும்கைப் பிடித்தே நடத்திலார்,
பம்பு வேலை விடமிட (று) ஆக்கினார்,
பாவை யாசை விடமிட (று) ஆக்கிலார்,
பரவை கோபமும் சோபமும் தீர்த்தவர்,
பரவை கோபமும் சோபமும் தீர்த்திலார்,
செம்பொன் மாளிகை அம்பலக் கூத்தனார்,
தினமும் எங்களை அம்பலத்(து) ஏற்றினார்,
தில்லை யம்பதி வாழ் நடராசனார்,
திருவு ளச்செயல் நன்றா இருந்ததே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரை- தில்லையாகிய அழகிய தலத்தில் எழுந்து அருளியுள்ள நடராசனார், அழகிய புலிக்கால் முனிவருக்கு ஒப்பற்ற நடனம் புரிந்து அருளியவர், சந்திரனுக்கு ஒரு நட்டம் உண்டாகாமல் கலைகள் தேய்ந்து போகாமல் வளரச்செயதவர், திருமாலுக்குச் சக்கரமும் சங்கும் அளித்து அருளியவர், எம் மயங்கிய தலைவிக்கு மோதிரமும் சங்கு வளையல்களும்

அளித்தாரல்லர், மனம் வீசும் கொன்றை மாலையை விரும்பியவர், இங்கே எழுந்தருளி சிவந்த வாயிதழையுடைய தலைவியை விரும்பினாரல்லர், மான் குட்டியைத் தம் திருக்கரத்தில் பிடித்தவர், மான் போன்ற தலைவியைத் தம் கைப் பிடித்து நடத்தினாரல்லர், அலைவீசும் கடலில் தோன்றிய நஞ்சைத் தம் கழுத்தில் அடக்கியவர், பெண்ணின் ஆசையாகிய விடத்தை இடறும்படி (நீக்கும்படி)ச் செய்தாரல்லர்,

சுந்தரரின் மனைவியாகிய பரவை நாச்சியாரின் கோபத்தையும் தளர்ச்சியையும் தீர்த்தருளியவர், கடலால் தலைவிக்கு உண்டான உடல் எரிச்சலையும் தளர்ச்சியையும் நீக்கினாரல்லர், செம்பொன் மாளிகையாகிய பொன்னம்பலத்தில் திருக்கூத்து செய்தருள்பவர், நாள்தோறும் எங்களை ஊரவர் கூறும் பழிச்சொற்களுக்கு, ஆளாக்கினார், தில்லை கூத்தரின் திருவுளச்செயல் நன்றாயிருந்தது.

குறிப்புரை- மடக்கு -வந்தசொல்லோ சொர்க்கலோ, மடங்கி வருவது. நட்டம்

1. நடனம்,

2 நட்டம், ஆழி- 1 .சக்கரம், 2 .மோதிரம், சங்கு- 1 .சங்கு,2 சங்காலான வளையல்

மால்-1 .திருமால், 2 .மயங்கிய தலைவி, இதழி- 1 .கொன்றைமாலை, 2 .சிவந்த

இதழையுடையதலைவி, மான்-1 .மான், 2 .மான்போன்றதலைவி, அம்பலம்-1 .சிற்றம்பலம், 2 .ஊரவர் பழிச்சொல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முத்துஸ்வாமி தீக்ஷிதர் கீர்த்தனைகள்

நீர்வை. கிரி

சங்கீத மும்மூர்த்திகளுள் ஒருவரான நாதப்பிரும்மம் முத்துஸ்வாமி தீக்ஷிதரின் கீர்த்தனைகள் சிலவற்றை ஆர்வ மேலீட்டால் தமிழில் கீர்த்தனைகளாக்கினால் என்ன என்று தோன்றியது. இயலுமான வரையில் ஒரே பொருளுடன்.. அதே ராக,தாளங்களுடன் சில கீர்த்தனைகளை எடுத்துக் கொண்டு தமிழில் தீக்ஷிதரின் கீர்த்தனைகளினை அடியொற்றி சில கீர்த்தனைகளை உருவாக்கினேன்.

திருத்தணிகை முருகனையே தமது மானஸீக குருவாகக் கொண்டவர் திக்ஷிதர். ஆதனால் தமது கீர்த்தனைகள் எங்கணும் குருகுஹ என்ற முத்திரையை பயன்படுத்தியிருக்கிறார்.

நம் கந்தவேட் பெருமானையே இ'டதெய்வமாக கொண்ட தீக்ஷிதர் அவர்கள் அப்பெருமான் அருளாலேயே பாடும் திறன் வாய்க்கப்பெற்றார் என்பர். இவர் திருத்தணிகையில் ஒரு நாள் பெருமானை வணங்கி விட்டு ஷடாக்ஷிர ஜெபம் செய்த போது வள்ளி மணவாளப் பெருமானே மானிடச் சட்டை தாங்கி வந்து தீக்ஷிதருக்கு கற்கண்டு கொடுத்து விட்டு மறைந்தானாம்..

திக்ஷிதரின் ஜென்மதினமும் பங்குனி மாத கார்த்திகை நட்ஷத்திரமே ஆகும். இப்பெருமானாரின் சிறப்பு மிக்க கீர்த்தனைகள் சிலவற்றை தமிழாக்கம் செய்த போது அது தமிழகத்து பெரும் கர்நாடக சங்கீத வித்பன்னர்களின் பாராட்டுதல்களை பெற்றமை கண்டு வியந்து போனேன்.

இன்னும் எந்த நூலிலும் வெளிவராத இக்கீர்த்தனைகளை நமது முருகன் ஆலய கும்பாபிஷேக மலரில் வெளிவருவது பொருத்தம் என்று கருதுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. ராகம்– ஹம்சத்வனி தாளம்– ஆதி

பல்லவி

வாரண முகவனே ராஜசிம்மனே
வரமருள் வாதாபி கணேசனே ஸ்ரீ

அனுபல்லவி

கரதல பூரணமும் கையில் கரும்பும் ஏந்தும்
பிரபஞ்ச பரணனே விக்ன வாரணனே

அனுபல்லவி

குறுமுனி ஏத்தும் த்ரிகோண நடுவுறை
பிறையணி மூலாதார பிரணவனே மயில்
ஏறும் குருகுஹன் நாடும் ஹம்சத்வனிப்ரிய
இறைவா இன்னல் அகற்றி அருள்புரி

## 2. ராகம்– தோடி தாளம் –ஆதி

பல்லவி

பாலசுப்ரமணியனை பாதுகாத்தருளும்
வேலவ ஷண்முகனைச் செந்திநகர்

அனுபல்லவி

நீலமயில் வாஹனனை நிகரில் வல்லி நாயகனை
ஞாலம் பணி பத்ரவீபூதி தந்தருள்வானை

சரணம்

பக்தியுடன் குருகுஹனை நித்தியம் தொழுபவர்க்கு
சித்தியெல்லாம் அருள்வான் தாரக சம்ஹாரன்
எத்திசையும் புகழ் எழில்தல அலைவாயில்
முத்தன் முருகன் வடிவேலுக்குண்டோ ஈடு

## 3. ராகம்– கல்யாணி தாளம்– ஆதி

பல்லவி

கும்ப நாயகனின் சேவடி பாடு மங்கள
அம்பிகை நாயகன் அம்புஜப்பதம் நாடு

அனுபல்லவி

தும்புரு நாரதாதியரெல்லாம் துதிக்கும் தேவன்
அம்பரத்தவரும் புகழ் அகத்தியர் போற்றும் சிவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம்

நீர் நிறை குடந்தை நிமலன் கும்பேசன்
பார் புகழ்ந்தேத்திடும் பக்தர்க்கனுகூலன்
சீர் நிறை காமகோடிச் செல்வரும் பணியும்
கூர் வேல் குருகுஹன் போற்றும் ஈஸ்வர

## 4. ராகம்: அமிருதவர்ஷிணி தாளம்: ஆதி

பல்லவி

சொரிவாள் அருள் ஆனந்த பவானி
ஹரனாதியர் போற்றும் காமாட்சி

அனுபல்லவி

அரிமாயன் தங்கை அமிருதவார்ஷிணி
விரிமாமயில் ஏறும் குருகுஹன் ஜனனி

சரணம்

அன்பொழுகப் பக்தி அனுதினமும் புரிந்தே
இன்புற மலர்தூவி என்றும் தேவியைப் பணிவாய்
துன்புறுவார் துயர் துடைத்திடும் அம்பிகை
இன்பமாய் மழையாய் இனித்திடப் பொழிவாள்

## 5. ராகம்– சங்கராபரணம் தாளம்– ஆதி

பல்லவி

அல்லல் அகற்றும் ஆஞ்ஜனேயன் -அருள்
நல்லாசி தந்தெனக்கு நல்லருள் புரிவான்

அனுபல்லவி

வில்லுடை ராமனுக்கு வந்துற்ற சேவகன்
பொல்லா அரக்கரையெல்லாம் பொசுக்கும் பஞ்சமுகன்

சரணம்

குருகுஹன் தோழன் குறைவில் வீரன்
கோதறு வானரசேனை கோமான் என்றும்
வரும் துயர் தீர சஞ்ஜீவி மலையை
கரம் கொண்ட கருணைக் ஹநுமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. இது தீட்சிதர் பேரில் பாடப்பெற்றது.

ராகம்– ஆபேரி தாளம்– ஆதி

**பல்லவி**

போற்றித்துதி மனமே- குருகுஹனை
ஏற்றி இசைபாடி
ஏழில் முத்துஸ்வாமி பாதத்தை

**அனுபல்லவி**

நாற்றிசையும் போற்றும்
முத்துஸ்வாமி தீட்சிதர்
வற்றாத இசைஞான
வள்ளல் பூம் பாதத்தை

**சரணம்**

சங்கரன் கணேசன் ஷண்முகன் நாரணன்
மங்கள அம்பிகை மாதேவதேவியர் யாவரும்
எங்கணும் கீர்த்தனை பெற இன்பம் பெருகச் செய்
பங்கஜப் பாதனைப் பக்தியுடன் பாடிப்

இக்கீர்த்தனைகள் பற்றி தமிழகத்து மாபெரும் கர்நாடக சங்கீத வித்பன்னர்களின் கருத்துக்கள் சில.

"நல்ல முயற்சி, மெத்த மகிழ்ச்சி, இன்னும் எழுதுங்கள் இன்னருள் பொழிக."

நெய்வேலி அன்பன்
மஹாவித்வான் R. S. சந்தானகோபாலன்

நமஸ்தே. நல்ல முயற்சி. மெத்த மகிழ்ச்சி.
இன்னும் எழுதுங்கள். இன்னருள் பொழிந்திடுக.

நெய்வேலி சந்தானகோபாலன். (பிரபல கர்நாடக சங்கீத வித்பன்னர்)
நெய்வேலி, தமிழ் நாடு.

அன்புடையீர்,
வணக்கம்..

தீட்சிதர் கீர்த்தனைகள் திருத்தல வரலாற்று இசைப் பொக்கிஷங்கள். அவற்றின் பாடுமுறையும், காலப்பிரமாணமும், முறையான இசையறிவும், தெளிவும் இல்லாமல் பயில முடியாதது. இதனால், கருத்துச் சுரங்கமான பாடல்கள் ஜனரஞ்சகமாகாமலே இருக்கின்றன. நானும் வாதாபி கணபதிம் அப்படியே மொழி மாற்றம் செய்து பாடியிருக்கிறேன்.
தங்களின் கீர்த்தனங்கள் சாராம்சமாக உள்ளன. சிறப்பாக இருக்கிறது.

அன்பன்,
டாக்டர் சீர்காழி சிவசிதம்பரம் (பிரபல கர்நாடக சங்கீத வித்பன்னர்)
சென்னை, தமிழ்நாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீராத விளையாட்டுப்பிள்ளை

திருமதி. எஸ். ஜயலஷ்சுமி

கட்டுக் காவலுக்கிடையே சிறையில் பிறந்தான் இந்தப் பிள்ளை. பிறந்த உடனேயே தன் திரு விளையாடலைத் துவக்கி விட்டான். சங்கு சக்ரதாரியகக் காக்கி கொடுத்தவனைக் கண்டு மகிழ்ந்த வசுதேவரும் தேவகியும், "எம் பெருமானே, இந்தக் காக்கீ போதும் கம்சன் கண்டால் என்ன ஆகுமோ?" என்று வேண்ட, மானிடக் குழந்தை யானான். அவன் திருவிளையாட லால் காவலாளிகள் கண்ணுறங்க, சிறைக் கதவுகள் தாமே திறக்க காவலாளி களின் கண்ணில் மண்ணைத் தூவி விட்டு அந்த இரவிலேயே ஒருத்தி மகனாய் வளர கோகுலம் புறப்படுகிறான். கொட்டும் மழையில் ஆதி சேடன் குடை பிடிக்க, யமுனை வழிவிட அன்றே தன் விளையாட்டை ஆரம்பித்து விடுகிறான். லீலாவிநோதன் அல்லவா? ஆயர்பாடியிலே யசோதையின் செல்லப்பிள்ளையாய் வளர்கிறான் கண்ணன்.

மாயக் கண்ணனின் விளையாட்டும் பேரழகு தேவர்களையும் கவர்ந்ததோடு மட்டுமல்லாமல் ஆழ்வார்களையும், ஆண்டாளையும், மீரா, சூரதாசர் முதல் பாரதி வரை கவர்ந்தது. முக்கியமாகப் பெரியாழ்வாரை மிகவும் கவர்ந்தது. அவர் தன்னை யசோதையாகவும் தான் வாழ்ந்த வில்லிப்புத்தூரை ஆய்ப்பாடியாகவும் பாவித்து கண்ணனின் பால லீலைகளைப் பாடியிருக்கிறார் .கண்ணன் எப்படி அடுத்த வீட்டுப் பெண் களுக்கும் தெருப் பெண்களுக்கும் தொல்லை கொடுத்தான் என்பதை யெல்லாம் மிக அழகாகப் பாடியிருக்கிறார். திருமங்கை ஆழ்வாரும் கண்ணனின் குறும்புத் தனத்தை ரசித்திருக்கிறார். அவனுடைய குறும்புகளை ஆழ்வார்கள் வாயிலாக நாமும் ரசிப்போமா?

## தொட்டில் கண்ணன்

தொட்டிலில் கிடக்கும் போதே கண்ணனின் சேட்டைகள் ஆரம்பித்து விட்டது. யசோதை கண்ணனைத் தொட்டிலில் படுக்க வைக்கிறாள். கண்ணன் தொட்டில் கிழிந்து விடும்படி உதைக்கிறான். ஜபின்னால் சகடாசுரனை உதைப் பதற்கு ஒத்திகை பார்த்திருப்பானோ? ஸஜயோ இப்படி உதைத்து, உதைத்துக் குழந்தைக்குக் காலெல்லாம் வலிக்கப் போகிறதே யென்று ஆதங்கத்தோடு தூக்கி எடுத்து இடுப்பில் வைத்துக் கொண்டால் இடுப்பையே முறித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுகிறானாம். ஆசையாக மார்போடு தழுவிக் கொள்ளலாம் என்றால் கால்களால் வயிற்றிலே உதை விடுகிறா னாம். ஜபூதனையைக் கொல்ல ஒத்திகை பார்த்திருப்பனோ?ஸ இவனை எப்படித்தான் வைத்துக் கொள்வதென்று யசோதை தவித்துப் போகிறாள். அவள் சொல்வதைக் கேளுங்கள்.

*"கிடக்கில் தொட்டில் கிழிய உதைத்திடும்*
*எடுத்துக் கொள்ளில் மருங்கை யிறுத்திடும்*
*ஒடுக்கிப் புல்கில் உதரத்தே பாய்ந்திடும்*
*மிடுக்கிலாமையால் நான் மெலிந்தேன் நங்காய்.*
*இவனோடு போராடிப் போராடியே நான் மெலிந்தே விட்டேன்" என்கிறாள்.*
*ஜமருங்கு-இடுப்பு இடை. உதரம்-வயிறுஸ*

## கண்ணன் நீராடல்

தொட்டிலில் கிடந்த கண்ணன் இப்போது கொஞ்சம் பெரியவனாகி விட்டான்.அவனுடைய லீலைகளும் பெரிதாகி விட்டன. வெண்ணெய்த் தாழிக்குள் தோள் வரை கையை விட்டு வெண்ணெய்யை வாரி விழுங்குகிறான். அதனால் உடம்பெல்லாம் ஒரே வெண்ணெய் நாற்றம்! வெண்ணெய்யும் மோரும் உடம்பிலிருக்க அதோடு தெருவிலே போய் புழுதியும் அளைந்ததால் ஒரே பிசுக்கு மயம்! அவனை நன்கு தேய்த்துக் குளிப்பாட்ட வேண்டுமென்று எண்ணெய்யும் சீயக்காயும் வைத்துக் காத்திருக்கிறாள் யசோதை. கண்ணன் வராமல் டிமிக்கி கொடுக்கிறான்.

*வெண்ணை அளைந்த குணுங்கும்*
*விளையாடு புழுதியும் கொண்டு*
*திண்ணென இவ்விரா உன்னைத்*
*தேய்த்துக் கிடக்க நான் ஒட்டேன்*
*எண்ணை புளிப்பழம் கொண்டு*
*இங்கு எத்தனை போதும் இருந்தேன்*
*நண்ணல் அரிய பிரானே!*
*நாரணா! நீராட வாராய்.*
*ஜபுளிப்பழம் - சீயக்காய். இரா- இரவு.*
*குணுங்கு - மொச்சை நாற்றம்ஸ*
*கன்றின் காதில் கட்டெறும்பு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணன் வராமல் போக்குக் காட்டி விட்டு ஓடுகிறான். போகிற போக்கில் கன்றுகளின் காதில் கட்டெறும்புகளைப் பிடித்துப் போட்டு விட்டுப் போகிறான். அவை மிரண்டு ஓடுகின்றன. கண்ணனும் ஓட, "கண்ணா, ஓடாதே, வா, வா, என்று தானும் ஓடுகிறாள். "கண்ணா! கன்றுக் குட்டியின் காதில் கட்டெறும்பைப் போட்டால் அப்புறம் உனக்குப் பால், தயிர், வெண்ணெய் எல்லாம் கிடைக்காமல் போய் விடும். இன்னிக்கு நீ பிறந்த திருவோண நட்ஷத்திரம். அதனால் மங்கள ஸ்நானம் செய்ய வேண்டும் ஓடாதே வா" என்கிறாள்

*கன்றுகள் செவியில் கட்டெறும்பு*
*பிடித்திட்டால்*
*தென்றிக் கெடுமாகில் வெண்ணை திரட்டி*
*விழுங்கக் காண்பன்*
*நின்ற மராமரம் சாய்த்தாய்!*
*நீ பிறந்த திருவோணம்*
*இன்று நீ நீராட வேண்டும்!*
*எம்பிரான்! ஓடாதே வாராய்"*
*என்று கெஞ்சுகிறாள்.*
*எண்ணைக் குடமுருட்டி*

கண்ணன் பக்கத்து வீடுகளுக்கும் செல்ல ஆரம்பித்துவிட்டான்! பக்கத்து வீட்டிற்குள் சென்று அங்கிருந்த எண்ணெய்க் குடத்தை உருட்டி விடுகிறான். அவர்கள் சிந்திய எண்ணெய்யை வழிப்பதும் துடைப்பதுமாக இருக்கிறார்கள். இல்லாவிட்டால் வழுக்கிக் கீழே விழுந்து விடுவார்களே. அவர்கள் கவனம் வேலையில் இருக்கும் போது, கண்ணன் தொட்டிலில் தூங்கும் குழந்தையைக் கிள்ளி எழுப்பி விடுகிறான். அந்தக் குழந்தை எழுந்ததும் கண்களைப் புரட்டி அப்பூச்சி காட்டி அந்தக் குழந்தையை பயமுறுத்தி அழ வைக்கிறான். (அப்பூச்சி காட்டுதலாவது கண்களின் மேல் இமையை மடக்கிக் கொண்டு கண்ணிமையின் உட்புறம் வெளியே தெரிய குழந்தைகளை பயமுறுத்துவது)

*எண்ணைக் குடத்தை உருட்டி*
*இளம்பிள்ளை கிள்ளி எழுப்பி*
*கண்ணைப் புரட்டி விழித்துக்*
*கழகண்டு செய்யும் பிரானே*
*உண்ணக் கனிகள் தருவன்*
*ஒலிகடல் ஓத நீர் போலே*
*வண்ணம் அழகிய நம்பீ!*
*மஞ்சனம் ஆட நீ வாராய்!*

பழங்களெல்லாம் தருவேன், நீ நீராட வா, என்று கண்ணனைத் தாஜா செய்கிறாள் யசோதை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெண்ணை உண்ட வாயன்

கண்ணனுடைய குறும்புகள் வர வர அதிகமாகிக் கொண்டே போகிறது. அண்டை அயலிலுள்ள ஆய்ப்பாடிப் பெண்கள் யசோதையிடம் வந்து, அவன் தங்களை எப்படியெல்லாம் படாதபாடு படுத்துகிறன் என்று குற்றப் பத்திரிகை வாசிக்கிறார்கள். "அடி, யசோதா உன் அருமைப் பிள்ளை கண்ணன் எங்கள் வீட்டுக்குள் நுழைந்து அவ்வளவு வெண்ணெய்யையும் காலி செய்து விட்டான். வெண்ணெய் தின்றதோடு போகக் கூடாதோ? அந்தக் காலிப் பாத்திரத்தை கல்லிலே போட்டு உடைத்து அந்தச் சத்தத்தைக் கேட்டு ரசிக்கிறான். இவனுடைய திருட்டை எங்களால் தடுக்க முடியவில்லை. புண்ணிலே புளி பட்டது போலிருக்கிறது. ஒவ்வொரு வீட்டிலே ஒவ்வொரு விதமாக லூட்டி அடிக்கிறான். உன் அருமைப் பிள்ளையை நீயே கூட்டி வைத்துக் கொள்

*வெண்ணெய் விழுங்கி வெறுங்கலத்தை*
*வெற்பிடை இட்டு அதன் ஓசை கேட்கும்*
*கண்ணபிரான் கற்ற கல்வி தன்னைக்*
*காக்க கில்லோம் உன் மகனைக் காவாய்*
*புண்ணில் புளிப்பெய்தால் ஒக்கும் தீமை*
*புரை புரையாய் இவை செய்ய வல்ல*
*அண்ணல் கண்ணன் ஓர் மகனைப் பெற்ற*
*அசோதை நங்காய்! உன் மகனைக் கூவாய்!*

இன்னொரு பெண் வருகிறாள். இவளும் கண்ணனைப் பற்றிக் குறை சொல்லவே வந்திருக்கிறாள். அடியே, யசோதா உன் அருமை மகன் கண்ணன் செய்வதையும் செய்து விட்டுத் தான் ஏதோ பெரிய காரியத்தைச் செய்த தாகப் பெருமை யடித்துக் கொள்கிறான். நான் நெய் காய்ச்சுவதற்காக வைத்திருந்த வெண்ணெய்யைக் கொஞ்சம் கூட மிச்சம் வைக்காமல் அவ்வளவையும் நன்றாக வழித்துத் தின்று விட்டு ஒன்றுமே தெரியாதவன் போல், அறியாப் பிள்ளை போல் தூரத்தில் போய் நின்று கொண்டான். அண்டை அயலில் இருப்பவர்களை இப்படி உன் பிள்ளையைக் கொண்டு அக்கிரமம் செய்வது உனக்கே நியாயமாகத் தோன்றுகிறதா? உன் அருமந்த புத்திரனை அழைத்து வைத்துக் கொள். இல்லாவிட்டால் இந்தக் கண்ணன் எங்களை நிம்மதியாக இருக்க விடமாட்டான்.

*திருவுடைய பிள்ளை தான் தீயவாறு*
*தேக்கமொன்றும் இலன், தேசுடையான்*
*உருக வைத்த குடத்தோடு வெண்ணை உறிஞ்சி*
*உடைத்திட்டுப் போந்து நின்றான்*
*அருகிருந்தார் தம்மை அநியாயம் செய்வது தான்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வழக்கோ? அசோதாய்!*
*வருக வென்று உன் மகன் தன்னைக் கூவாய்!*
*வாழவொட்டான் மதுசூதனனே*
*பால் பாயாசக் கண்ணன்*

இவள் சொல்லி முடிக்கும் முன்பாகவே இன்னொ ருத்தி கோபத்தோடு வருகிறாள். அடி அம்மா, யசோதே! இந்த அநியாயத்தைக் கேள். நான்பாலைக் கறந்து பெரிய பானையில் காய்ச்சுவதற்காக வைத்திருந்தேன். என் பெண்ணையும் பாலுக்குக் காவலாக வைத்து விட்டு பால் காய்ச்ச நெருப்பு வேண்டுமே யென்று அடுத்த மேலை வீட்டிற்குச் சென்றேன். போய் ஒரு நொடிப் பொழிதில் திரும்பியும் விட்டேன். அதற்குள் சாளக்கிராமம் உடைய நம்பி, அவன் தான் உன் புத்திர சிகாமணி, பாத்தி ரத்திலிருந்த அவ்வளவு பாலையும் சாய்த்துக் குடித்து விட்டுப் போய் விட்டான். கரும்பு போல தித்திக்கப் பேசும் யசோதே! உன் பிள்ளையைக் கூப்பிடு" என்கிறாள்.

*பாலைக் கறந்து அடுப்பேற வைத்துப்*
*பல் வளையாள் என் மகள் இருப்ப*
*மேலை அகத்தே நெருப்பு வேண்டிச் சென்று*
*இறைப் பொழுது அங்கே பேசி நின்றேன்*
*சாளக்கிராமம் உடைய நம்பி*
*சாய்த்துப் பருகிட்டுப் போந்து நின்றான்.*
*ஆலைக் கரும்பின் மொழி அனைய*
*அசோதை நங்காய்! உன் மகனைக் கூவாய்*

இன்னொரு ஆய்ச்சி கையில் காலிப் பாத்தி ரத்தோடு வருகிறாள். அது பாயாசம் வைத்திருந்த பாத்திரம். இவளுடைய குற்றச் சாட்டைக் கேட்போம். அடி, யசோதை! ஆனாலும் உன் பிள்ளை கண்ணன் இந்த மாதிரி செய்யக் கூடாதென்று சொல்லி வை. சம்பா அரிசி, சிறுபருப்பு, வெல்லம், நெய், பால் எல்லாம் சேர்த்து 12 மாதங்களாக திருவோணம் தோறும் பாயாசம் செய்து விரதமிருந்தேன். அப்பொழுதும் இந்தக் கண்ணன் வருவான். நானும் பாயாசம் கொடுப்பேன். ஆனால் இன்று இந்தத் திருவோணத்தன்று செய்த அவ்வளவு பாயாசத்தையும் சாப்பிட்டு விட்டு இன்னம் இன்னம் வேணுமென்கிறான். இதோ பார் இந்தக் காலிப் பாத்திரத்தை. நன்றாக இருக்கிறது பிள்ளை வளர்க்கிற லக்'ணம். கூப்பிடு உன் பிள்ளையை உன் கண் பார்வையிலேயே வைத்துக்கொள் என்று பொரிந்து தள்ளினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*செந்நெல் அரிசிச் சிறுபருப்புச் செய்த*
*அக்காரம் நறுநெய் பாலால்*
*பன்னிரண்டு திருவோணம் அட்டேன், பண்டும்*
*இப்பிள்ளை பரிசறிவன்*
*இன்னம் உகப்பன் நானென்று சொல்லி எல்லாம்*
*விழுங்கிட்டுப் போந்து நின்றான்*
*உன் மகன் தன்னைக் அசோதை நங்காய்!*
*கூவிக் கொள்ளாய் இவையும் சிலவே!*
*பாத்திரம் காலி!*

இப்படி இவள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே கையில் கண்ணனைப் பிடித்தபடி வேகமாக இன்னொரு பெண்மணி வருகிறாள். இவள் என்ன சொல்லப் போகிறாளோ என்று எல்லோரும் ஆவலாகப் பார்க்கிறார்கள். அவள் கொஞ்சம் எரிச்சலோடு சொல்ல ஆரம்பிக்கிறாள். ஏடி, யசோதா கேள்,"நான் ஆசை ஆசையாக லட்டு, சீடை, எள்ளுருண்டை எல்லாம் செய்தேன் எல்லாவற்றையும் ஒரு பாத்தி ரத்தில் போட்டு நன்றாக மூடியும் வைத்தேன். வெளியே கொஞ்சம் வேலையிருந்தது. நம்வீடு தானே இங்கு யார் வரப்போகிறார்கள் என்று எண்ணி கதவைத் தாழ் போடாமல் வந்து வெளியே வேலை செய்து கொண்டிருந்தேன். வேலை முடிந்து உள்ளே போனால் இவன் அவ்வளவு பக்'ணங்களையும் தின்று விட்டான். எனக்குக் கொஞ்சம் கூட மிச்சம் வைக்காமல் அவ்வளவையும் காலி பண்ணி விட்டான். வெறும் பாத்திரம் தான் இருந்தது! அதோடு விட்டானா? இவ்வளவு பக்ஷணங்களையும் தின்று விட்டு நான் வெண்ணை வைக்கும் உறியைக் குறி வைத்து அங்கு ஏதாவது கிடைக்குமா என்று கையை விட்டுப் பார்க்கிறான். இதோ பார் இவனைக் கையும் களவுமாகப் பிடித்துக் கொண்டு வந்திருக்கிறேன். என்ன பிள்ளையோ? என்ன வளர்ப்போ? என்று ஒரு நொடி நொடித்தாள்.

*கன்னல் இலட்டுவத்தோடு, சீடை, காரெள்ளின்*
*உண்டை கலத்தில் இட்டு*
*என்னகம் என்று நான் வைத்துப் போந்தேன் இவன்*
*புக்கு அவற்றைப் பொறுத்திப் போந்தான்*
*பின்னும் அகம் புக்கு உறியை நோக்கிப் பிறங்கொளி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வெண்ணையும் சோதிக்கின்றான்.*

*உன் மகன் தன்னை அசோதை நங்காய்! கூவிக்*

*கொள்ளாய் இவையும்சிலவே*

*நாவல் பழமும் கண்ணனும்*

இதற்குள் இன்னொரு ஆய்ச்சி வேகமாக வருகிறாள். யசோதே! உன் பிள்ளையைப் பற்றிச் சொன்னால் உனக்கு ரோஷம் வருகிறது. ஆனால் உன் பிள்ளை மிகவும் தந்திரக்காரன்.வம்புகள் செய்வதில் கை தேர்ந்தவன் அவன் செய்ததைப் பார். உன் அருமைப் பிள்ளை என் வீட்டில் புகுந்து என் பெண்ணை அழைத்து அவள் கையிலிருந்த பொன் வளையலைக் கழற்றிக் கொண்டு போய்விட்டான். தோட்டத்திலிருந்து பறித்து வந்து கொல்லையில் நாவல் பழங்களை விற்றுக் கொண்டிருந்தவளி டம் போய் அந்த வளையலைக் கொடுத்து நல்ல நாவல் பழங்களை வாங்கிக் கொண்டான். நான் போய்க் கேட்டபோது ஒன்றும் தெரியாதவன் போல் "நான் வளையலைக் கழற்ற வில்லையே" என்று சொல்லிச் சிரிக்கிறான்.

*சொல்லில் அரசிப்படுதி, நங்காய்!*

*சூழல் உடையன் உன் பிள்ளை தானே*

*இல்லம் புகுந்து என் மகளைக் கூவிக்*

*கையில் வளையலைக் கழற்றிக் கொண்டு*

*கொல்லையில் நின்றும் கொணர்ந்து விற்ற*

*அங்கொருத்திக்கு அவ்வளை கொடுத்து*

*நல்லன நாவல் பழங்கள் கொண்டு*

*நானல்லேன் என்று சிரிக்கின்றானே.*

*ஆடை திருடிய கண்ணன்*

அந்த ஆய்ச்சி சொல்லி முடிக்கட்டும் என்று காத்தி ருந்தது போல் இரண்டு இளம் பெண்கள் வந்தார்கள். இவர்கள் என்ன சொல்லப் போகிறார்களோ என்று குற்றம் சாட்டிய பெண்கள் எல்லோரும் ஆவலாகப் பார்த்தார்கள். கண்ணன் வீடுகளில் புகுந்து லூட்டி அடித்ததோடு நிற்கவில்லை. "ஆற்றங்கரையிலும் வந்து வம்புகள் செய்கிறான்" என்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யசோதாம்மா! நாங்கள் எல்லோரும் ஆற்றில் நீந்தி விளையாடிக் கொண்டிருந்தோம் அந்தச் சமயம் உங்கள் கண்ணன் வந்து எங்கள் மேல் சேற்றை வாரி வீசினான். நாங்கள் கரையில் கழற்றி வைத்திருந்த எங்களுடைய வளையல்களையும் ஆடைகளையும் வாரி எடுத்துக் கொண்டு சிட்டாகப் பறந்து விட்டான். வீட்டில் போய் ஒளிந்து கொண்டிருக்கிறான்.வளையல்களைத் தருவானா மாட்டானா என்றும் சொல்ல மாட்டேன் என்கிறான். இவன் இப்படிச் செய்தால் நாங்கள் அழிந்தே போய் விடுவோம்.

*ஆற்றிலிருந்து விளையாடு வோங்களை*
*சேற்றால் எறிந்து வளை, துகில் கைக்கொண்டு*
*காற்றில் கடியனாய் ஓடி அகம் புக்கு*
*மாற்றமும் தாரானாய் இன்று முற்றும்*
*வளைத்திறம் பேசானால் இன்று முற்றும்.*

மற்றொரு பெண்ணும் பேச ஆரம்பிக்கிறாள். இவளுக்குக் கோபம் இருந்தாலும் கண்ணனுடைய அழகு இவள் மனம் முழுவதும் நிறைந்திருக்கிறது. பேசும்போது அந்த அழகு தான் முதலில் வருகிறது. குண்டலமும், பூணூலும் அசைய எட்டுத் திசைகளில் இருப்பவர்களும் இவன் அழகில் மெய் மறந்திருக்க எங்கள் ஆடைகளை அள்ளிக் கொண்டு குருந்த மரத்தில் ஏறி விட்டான். அவனிடம் எவ்வளவோ கெஞ்சிக் கேட்டும், அவன் தர மறுட்து விட்டான். யசோதாம்மா, எங்களுடைய ஆடைகளை வாங்கித் தாருங்கள்" என்று கெஞ்சிக் கேட்டாள்.

*குண்டலம் தாழக் குழல் தாழ, நாண் தாழ*
*எண் திசையோரும் இறைஞ்சித் தொழுதேத்த*
*வண்டமர் பூங்குழலார் திகில் கைக்கொண்டு*
*விண் தோய மரத்தானால் இன்று முற்றும்*
*வேண்டவும் தாரானால் இன்று முற்றும்.*
*யசோதையின் வருத்தம்*

இவ்வளவு குற்றச் சாட்டுக்களையும் கேட்டதும் யசோதைக்கு வருத்தமும் கோபமும் ஏற்படுகிறது. இந்த ஆய்ச்சிமார் இப்படியெல்லாம் பேசும்படி, கோள் சொல்லும்படி, இந்தக் கண்ணன் நடந்து கொள்கிறானே என்று ஆற்றாமையும் ஏற்படுகிறது. அதே சமயம் அவளால் கண்ணனைக் கடிந்து கொள்ளவும் முடியவில்லை.வந்த ஆய்ச்சிமார்களுக்கு சமாதானம் சொல்லவும் வேண்டும். அதனால் கண்ணனைக் கடிந்து கொள்வது போல பாவனை செய்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கண்ணா! இங்கே வா, வரேன், வரேன், என்று சொல்லிப் பொழுது போக்காமல் இங்கே வா. அக்கம் பக்கம் உள்ளவர்கள் எல்லாம் உன்மீது ஏகப்பட்டகுற்றச் சாட்டுகளை அள்ளி வீசுகிறார்கள். என்னால் அதைக் கேட்டுக் கொண்டிருக்க முடியாது. அதனால் உடனே இங்கே வா" என்கிறாள் -

*"போதர் கண்டாய் இங்கே போதர் கண்டாய்*
*போதரேன் என்னாதே போதர் கண்டாய்*
*ஏதேனும் சொல்லி அசலகத்தார்*
*ஏதேனும் பேசநான் கேட்க மாட்டேன்.*

## புகார் புத்தகம்

இதோ பார் இந்தப் பெண், உன்னைப் பற்றி என்னவெல்லாம் சொல்கிறாள் பார். நீயும் இந்த ஆய்ச்சிமார்களை மயக்கி விடுகிறாய். அவர்கள் வீட்டில் போய் வி'மங்கள் செய்கிறாய். அவர்களும் உன்னைப் பற்றி இல்லாததும் பொல்லாததுமாக ஒன்றுக்குப் பத்தாகக் கோள் சொல்லுகிறார்கள். அதையெல்லாம் சேர்த்தால் ஒரு புத்தகமே எழுதலாம்.

*மையார் கண் மட ஆய்ச்சியர் மக்களை*
*மையன்மை செய்து அவர் பின் போய்*
*கொய்யார் பூந்துகில் பற்றித் தனி நின்று*
*குற்றம் பல பல செய்தாய்*
*பொய்யா! உன்னை புறம் பல பேசுவ*
*புத்தகத்துக்குள கேட்டேன்*

"கேசவா! இங்கே வா, உன்னிடம் அன்பில்லாதவர்களுடைய வீட்டிற்கு நீ எதற்காகப் போக வேண்டும்? அவர்களுடைய வீட்டில் போய் நீ விளையாட வேண்டாம். உன் மீது குற்றம் சொல்லும் வேலைக்காரர்களும், வேலைக்காரிகளும் இருக்கும் இட்த்திற்கு நீ போகாதே. அந்த இடத்தில் நீ இருக்க வேண்டாம் இங்கே வந்து விடு. அம்மா பேச்சைக் கேட்டால்தான் நீ நல்ல பையன். அம்மா பேச்சைக்கேட்பதுதான் தருமம். அதனால் இங்கே வா." "கேசவனே இங்கே போதராயே கில்லேன் என்னாது இங்கே போதராயே நேசம் இல்லாதார் அகத்திருந்து நீ விளையாடாதே போதராயே தூசனம் சொல்லும் தொழுத்தை மாரும் தொண்டரும் நின்ற இடத்தில் நின்று தாய் சொல்லுக் கொள்வது தர்மம் கண்டாய் தாமோதரா இங்கே போதராயே" இனிமேல் அங்கே போக வேண்டாம். நம் வீட்டிலேயே விளையாடலாம்" என்று முடிக்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிறிஸ்தவப் பல்கலைக்கழகத்தில் கீதை

அரவீந்தன் நீலகண்டன்

இந்த உலகம் பாரதப் பண்பாட்டின் உள்ளொளிக்கு எத்தனை கடன் பட்டிருக்கிறது என்பது பெரிதாக வெளியே தெரியாத ஒரு வி'யம் . ஆனால் அமெரிக்காவின் சுதந்திர விருப்பத்தை பாராட்டுபவர்களும், ஐரோப்பிய புத்தெழுச்சியின் கலை, இலக்கியப் படைப்புக்களைக் கண்டு ஆனந்தமடைபவர்களும் அதன் பின்னால் பாரத ஞானமரபின் வழிநடத்துதல் இருப்பதை அறிவார்களா?

இன்றைக்கு சுயமதவெறி உலகையே காயப்படுத்தி அழித்துவிட மிரட்டி வரும் போது, ஒரு மேற்கத்திய மதக் கல்வி நிறுவனம் பகவத் கீதையை தனது பாடத்திட்டத்தில் கட்டாய பாடமாக அறிவித்திருக்கிறது. இதில் முக்கியமானதொரு வரலாற்று தொடர்ச்சி இருக்கிறது. அதனை சிறிது நாம் இங்கே காணலாம்.

பகவத் கீதையை மேற்கில் கொண்டுபோனவர்கள் தொடக்க கால மேற்கத்திய இந்தியவியலாளர்களே. பாரதிய வேதாந்த நூல்கள் பிரான்ஸில் பெரும் தாக்கத்தை விளைவித்தன. அவை அப்போது சமஸ்கிருத வடிவில் செல்லவில்லை பாரசீக மொழியில் இருந்தன. மொகலாய இளவரசரும் சமஸ்கிருத அறிஞரும் வேதாந்தத்தில் தோய்ந்தவருமான தாரா "கோ செய்த மொழி பெயர்ப்புகளே அவை. தாரா "கோவின் அந்த மொழி பெயர்ப்புக்களும் வெறும் அறிவு ஆர்வத்தால் அல்ல, மாறாக அவருக்கு கிடைத்த ஆன்மிக அனுபவங்களினால் செய்யப்பட்டவை ஆகும். உதாரணமாக யோகவாசி'டத்தை அவர் மொழி பெயர்த்தது கனவினில் ஸ்ரீ ராமர் வந்து அவரது வாயில் இனிப்பை கொடுத்து அவரை மொழி பெயர்க்க உத்தரவிட்ட காரணத்தால் நிகழ்ந்தது.

இவ்வாறாக உலகின் பெரும் பண்பாடுகளை இணைக்கும் ஆன்மிக பாலங்களாக வேதாந்த இலக்கியங்கள் திகழ்ந்தன. அவற்றில் பகவத் கீதை மானுடகுலத்துக்கு கிடைத்த முக்கியமான ஆன்மிக பொக்கிஷமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்குகிறது. இந்தியாவில் ஆட்சி புரிந்த பிரிட்டிஷ் வைசிராய் வாரன் ஹேஸ்டிங்கின் காலத்தில் தான் சார்லஸ் வில்கின்ஸ் (Charles Wilkins) எனும் இந்தியவியலாளரால் ஆங்கிலத்தில் பகவத் கீதை முதன்முதலாக மொழி பெயர்க்கப்பட்டது.

பகவத் கீதையின் செழுமை மேற்கத்திய இலக்கிய-கலை புத்தெழுச்சியின் பல முக்கிய ஆளுமைகளை வழி நடத்தியுள்ளது. புகழ்பெற்ற ஆங்கிலக் கவிஞரும், ஓவியருமான வில்லியம் பிளேக் (1757-1827) வில்கின்ஸின் பகவத் கீதைமொழி பெயர்ப்பினைப் படித்திருந்தார். அவரது "Bard's Song" எனும் கவிதை பகவத் கீதையின் முக்குணங்கள் மற்றும் அவற்றின் அடிப்படையிலான வர்ண அமைப்பு, ஸ்வதர்மம் ஆகியவற்றையே மூலமாகக் கொண்டு அமைந்திருந்தது. வில்லியம் பிளேக் தாந்திரீக பிரம்ம ஞானவாதியான ஸ்வீடன்பர்க்கினை தனது ஆன்மிக குருவாகவே (spiritual perceptor) கருதினார். ஸ்வீடன்பர்க் குறித்து எழுதிய கட்டுரையில் அந்தணர்களின் ஆதர்ச சமுக வடிவமைப்பு குறித்தும் எழுதினார். இதில் சார்ல்ஸ் வில்கின்ஸின் பகவத் கீதை மொழிபெயர்ப்பு பற்றியும் குறிப்பிடுகிறார் பிளேக்.

அவ்வாறே நவீன இலக்கிய ஆராய்ச்சியாளர்கள் மில்டனின் கவிதைகள் சிலவற்றி லும் பகவத் கீதையின் தாக்கத்தைக் கண்டறிகின்றனர். கோல்ட்ரிஜ்ஜின் (1772-1834) பல கவிதைகளிலும், அவரது வெளியிடப்படாத எழுத்துக்களிலும் பகவத்கீதையின் தாக்கம் மிகத் தெளிவாகவே இருப்பதாக ஆரய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். கோல்ட்ரிஜ்ஜும் பகவத் கீதையின் வில்கின்ஸ் மொழிபெயர்ப்பில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தார்.

மேற்கத்திய மதப்பிரச்சாரகர்களுக்கோ பகவத் கீதையின் இந்த ஆன்மிக ஒளியானது பிரச்சனைகளையும் உண்டாக்கியது என்பதையும் சொல்லவேண்டும். உதாரணமாக பார்குவார் என்கிற மதப்பிரச்சாரகர் பகவத் கீதையே கிறிஸ்தவ மத தாக்கத்தினால் ஏற்பட்டது என்றும் கிருஷ்ண பக்தியே கிறிஸ்தவத்தின் திரிந்த விளைவுதான் என்றும் ஒரு கருத்தினைப் பரப்பினார். மதம் சார்ந்த கண்ணோட்டம் கொண்ட மேற்கத்திய இந்தியவியலாளர்கள் சிலரும் இத்தகைய கருத்துக்களைக் கொண்டிருந்தனர். ஆனால், கி. மு ஒன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்தோ-கிரேக்க விஷ்ணு பக்தனால் எழுப்பப்பட்ட "ஹிலியோடரஸ் தூண்" என்றழைக்கப் பட்ட கருட ஸ்தம்பம் "பாகவத தர்மத்தின் பழமை கிறிஸ்தவத்துக்கும் முந்தையது" என ஐயந்திரிபறத் தெளிவாக்கியதை அடுத்து ஆதாரமற்ற இந்த பிரச்சாரம் வலுவிழந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக்ஸ் முல்லர் போன்ற இந்தியவியலாளர்கள் பகவத் கீதையை மிகவும் பாராட்டினர் என்றாலும், அத்தகையப் பாராட்டுக்களும் ஏக-இறைக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே அமைந்திருந்தன. தம்முடைய மதமே உண்மையானதும் ஆதியானதும் என்றும், அதன் ஒரு சிதைந்த நிலையே இந்தியாவில் உள்ளது என்றும், ஆதி உண்மை மதத்தைச் சார்ந்து எஞ்சி நிற்கும் இலக்கியமே பகவத் கீதை என்றும் அவர்களால் பகவத் கீதை கருதப்பட்டது.

மத அடிப்படையில் இறையியல் அறிவு சார்ந்து, பகவத் கீதையினை மதப்பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக படித்த இந்தியவியலாள அறிஞர்களுக்கும், அதன் உள்ளொளியை ஆன்மிகம் சார்ந்த கலைவடிவில் அறிந்து கொண்டவர்களுக்கும் இருக்கும் வேறுபாட்டை மேலே கூறிய பகுதியில் நாம் தெரிந்து கொள்ள முடியும். மதக்கோட்பாட்டு வரையறையை நிராகரித்து, பகவத் கீதையின் பிரபஞ்சம் தழுவிய ஆன்மநேய ஒருமைப்பார்வையைத் தழுவிக்கொண்டவர்களாக அமெரிக்க ஆழ்நிலை அறிவியக்க தத்துவ அறிஞர்களையே கூறவேண்டும்.

"என் தினத்தை உன்னதமாக்கியது பகவத் கீதை. நூல்களில் முதல் நூல் அது. ஒரு மாபெரும் சாம்ராஜ்ஜியத்தின் மகோன்னதம் நம்மிடம் உரையாடுவது போன்றதோர் மகத்துவம் அது அதில் அற்பமானதென எதுவுமே இல்லை. ஆனால் மகா விசாலமானதும் அமைதி ததும்புவதும், சீரானதுமானதோர் ஆதி பேரறிவு மற்றோர் யுகத்திலிருந்து நாம் இன்று எதிர் நோக்கும் அதே கேள்விகளை உள்ளார்ந்து அறிந்து பதிலளித்துள்ளதாக அது அமைகிறது." அமெரிக்காவின் மிகச்சிறந்த தத்துவ மேதையான ரால்ப் வால்டோ எமர்ஸன் (1803-1882) பகவத் கீதையை குறித்து எழுதிய வார்த்தைகள் இவை.

எமர்ஸனின் வேதாந்த நிலைபாட்டைக் காட்டும் கவிதையாகக் கருதப்படும் 'பிரம்மா' பாரதத்தின் முதல் சுதந்திர யுத்தம் நடைபெறுவதற்கு ஒரு ஆண்டுக்கு முன்னால் எழுதப்பட்டது. அக்கவிதையில் எமர்ஸன் எழுதினார்:

செவ்வீரன் கொல்வதாக நினைக்கின்றானெனில் கொல்லப்படுவதாக கொலையுண்டவன் நினைத்து மாள்வானெனில் இருவரும் அறியார் நுண்ணார்ந்த மார்க்கங்களை அமைத்து நான் அவை ஊடே செல்வதை செயல்படுவதை பகவத் கீதை எமர்ஸனின் தத்துவச் சிந்தனைகளில் ஒரு முக்கிய இடத்தை வகித்தது. அமெரிக்கப் பண்பாட்டின் திறந்த தன்மை மற்றும் அதில் காணப்படும் மானுடநேயத்தன்மைகளுக்கு எமர்ஸனுக்கே அமெரிக்கா நன்றி சொல்ல வேண்டும். இவ்விதத்தில் அமெரிக்காவின் முற்போக்கு மானுடநேய சிந்தனைக்கும் பகவத் கீதைக்குமான உறவு மிகவும் ஆழமானது, நூற்றாண்டுகள் தாண்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றொரு முக்கியமான அமெரிக்க சிந்தனையாளரான ஹென்றி டேவிட் தோரோ தமது இளமையில் எமர்ஸனின் சிந்தனைகளால் தாக்கம் பெற்றவர். பகவத் கீதையை ஆழ்ந்து பயின்றது மட்டுமல்லாமல் தமது வாழ்க்கையை அதன் ஒளியில் அமைத்து வேதாந்தத்தை செயல்முறைப்படுத்தவும் செய்தார் தோரோ. "ஒவ்வொரு காலையிலும் என் சித்தம் பகவத் கீதையின் மகோன்னத பிரபஞ்ச தத்துவத்தில் மூழ்கி எழுகிறது. பகவத் கீதை ஓர் ஆதி யுகத்தில் தெய்வங்களின் காலத்தில் எழுதப்பட்டது. ஆனால் அதனுடன் ஒப்பிடுகையில் நம் நவீன பிரச்சனைகளும் இலக்கியமும் அற்பமாக தெரிகின்றன" என அவர் எழுதினார்.

இன்று நியூஜெர்ஸியில் உள்ள ஸெட்டான் ஹால் பல்கலைக்கழகம் எனும் கத்தோலிக்க மதப் பல்கலைக்கழகம் பகவத் கீதையை தன்னுடைய மையப் பாடத்திட்டத்தில் அனைத்து மாணவர்களும் கட்டாயம் படிக்கவேண்டிய பாடங்களில் ஒன்றாக அறிவித்துளது. இப்பல்கலைக்கழகத்தின் முதலாண்டு மாணவர்களுக்கான பாடத்திட்டத்தில் பகவத்கீதை வைக்கப்பட்டுள்ளது. இப்பாடத்திட்ட நிர்ணயக்குழுவில் உள்ள அமர் எனும் பேராசிரியர் பகவத் கீதை குறித்து பரிந்துரைத்தார்.

இந்த மையப்பாடத்திட்டத்தில் வேதங்களை வைப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது் என்றாலும் அவை கடினமாக இருக்கும் என்பதால் பகவத் கீதை ஏற்றுக்கொள்ளப்பட்டது. பேரா.அமரைப் பொறுத்தவரையில் பைபிள் பல ஆன்மிக வழிகளில் ஒரு வழி மட்டுமே என்பதால் மாணவர்கள் ஏனைய பழமையான ஆன்மிக இலக்கியங்களையும் அறிந்து கொள்ளவேண்டும் என்பதால் பகவத் கீதையை அவர் பரிந்துரைத்தார். அது ஏற்றுக் கொள்ளப்பட்டது. இங்கு பரிந்துரைக்கப் பட்டுள்ள பகவத் கீதை மொழிபெயர்ப்பு ஸ்டீவன் மிட்ச்சேல் என்பவருடையது. மேலும் பகவத் கீதையைக் கற்பிப்பவர்கள் எவரும் இந்திய பாரம்பரியத்திலிருந்து வந்தவர்கள் அல்லர்.

இந்தச் சிறிய குறைபாடுகளுக்கு அப்பாலும், பகவத் கீதை வகுப்புகள் மாணவர்களைக் கவர்கிறது என்பது சந்தோ'மான செய்தி. ஒரு மதம் சார்ந்த கல்வி நிறுவனம் மத வரையறைகளுக்கு அப்பாலான ஆன்மிக நூல்களைத் தமது மாணவர்களுக்கு எடுத்துச்செல்வது மிகவும் நல்ல வி'யமே ஆகும். மானுடம் முழுமைக்குமான ஒரு ஆன்மிக ஒருமைப்பாட்டை உருவாக்க அது வழிகோலும் என நம்புவோம். தம் மதமே உயர்ந்தது அல்லது எனது நூல் மட்டுமே உண்மை என்பது போன்ற நிலைபாடுகளினால் மானுடம் மிகவும் காயப்பட்டுவிட்ட இந்த வேளையில் பகவத் கீதையின் ஆன்மநேய ஒருமைப்பாடு உலகை ஒரு குடும்பமாக அன்பினால் ஒருங்கிணைக்கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணைபுரிந்த நூல்கள்:


- தாரா ஷிகோ, மஜ்மா-உல்-பக்ரைன் பக்.25-26
  (லக்பத் ராய், Sarmad His life and Rubais 1978 பக்.12)
- சுவாமி ததாகதானந்தர், Light from the Orient 2005 பக்..55-60
- காத்ரைன் ராபின்ஸன், Interpretations of the Bhagavad-Gita and Images of the Hindu Tradition: The Song of the Lord, 2006 பக்.77
- George Joseph, Gita study to be mandatory at Seton Hall University in New York நவம்பர் 2008


(அரவிந்தன் நீலகண்டன் இந்தியாவில் பேசப்படும் முக்கிய எழுத்தாளர்களுள் இவரும் இவரது நட்பு எழுத்தாளர் ராஜீவ் மல்ஹோத்ராவும் இணைந்து எழுதிய "உடையும் இந்தியா" என்ற நூல் பெரியளவில் வரவேற்பையும் விமர்சனத்தையும் புகழையும் பெற்ற நூலாகும். இன்னும் இவர் நிறையவே எழுதி வருவது குறிப்பிடத்தக்கதாகும்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை - யாழ்ப்பாணம் - நீர்வேலி

# அருள்மிகு ஸ்ரீ செல்லக் கதிர்காம ஸ்வாமி திருக்கோயில்

## புனருத்தாரண அஷ்டபந்தன பிரதிஷ்டா

# மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

**எண்ணெய்க்காப்பு**
24.03.2012 சனிக்கிழமை

# 25.03.2012

**மஹாகும்பாபிஷேகம்**
25.03.2012 ஞாயிற்றுக்கிழமை

**விநாயகர் துதி**

என்னை நினைந்தடிமை கொண்டென் இடர் கெடுத்து
தன்னை நினையத் தருகின்றான் - புன்னை
விரசு மகிழ் சோலை வியன் நாரையூர் முக்கண்
அரசு மகிழ் அத்தி முகத்தான்

**முருகன் துதி**

தஞ்சம் அடைந்தவரை தரணி தனில் காப்பான்
அஞ்சேல் என அபயம் ஆறுமுகன் தருவான்
செஞ்சாலிகை கொஞ்சு செல்லக் கதிர்காமன்
கஞ்ச மலரடிகள் காசினியில் அருள்வான்

குமார புஷ்கரணீ தீரே விமானம் ஏற்றுத் தருவேதே!
நீர்வை நகர நிவாஸாய நித்ய ஸம்பத் குமாராய நமோ நமஹ!!

**விஷ்ணு துதி**

அக்கரை எனும் மனத்தக் கடலுள்
அழுந்தி உன் பேரருளால்
இக்கரை ஏறி இளைத்திருந்தேனை
அஞ்சேல் என்று கை கவியாய்
சக்கரமும் தடக்கைகளும் கண்களும்
பீதக ஆடையோடு
செக்கர் நிறத்துச் சிவப்புடையாய்
திருமாலிருஞ்சோலை எந்தாய்

**குகநேயச் செல்வர்களே,**

[illegible]

[illegible]

## கிரியாகால நிகழ்வுகள்

**பங்குனி மாதம் 10ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

(23.03.2012) அதிகாலை 5.00 மணி முதல் கர்மாரம்பம், அனுக்ஞை, கணபதிஹோமம், நவக்கிரஹ ஹோமம், கிராமசாந்தி, பிரவேசபலி, சாந்தி ஹோமம், மூர்த்தி ஹோமம், வாஸ்து சாந்தி, சூர்யாக்னி சங்கிரகணம், நூதன மூர்த்திகளுக்கான கிரியைகள், திருமுறைபாராயணம், விநாயகர் அவல், கேசனுபதிகள்.

பிற்பகல் 03.30 மணிமுதல் ம்ருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், கலாகர்ஷணம், கடஸ்தாபனம், பஞ்சாக்னி விபஜனம், யாகாரம்பம், ஸ்தூபி ஸ்தாபனம், தீபஸ்தாபனம், யந்த்ரஸ்தாபனம், பிம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம் திருமுறைபாராயணம்.

**பங்குனி மாதம் 11ஆம் நாள் சனிக்கிழமை**

(24.03.2012) காலை 06.00மணி முதல் விசேஷசந்தி, பூதசுத்தி, தலைவிருலைபூசை, யாகபூசை, தைலாப்பியங்கம் (எண்ணைக்காப்பு காலை 06.00 மணிமுதல் மாலை 04.00 வரை) விசேஷ திரவிய ஹோமம், கந்தரனுபூதி, திருப்புகழ் ஆதிய முருக பக்தித்துதி பாராயணம், சொற்பொழிவு

மாலை 06.00 மணி முதல் பிம்பசுத்தி, பிம்ப ரக்ஷாபந்தனம், யாகபூசை, விசேஷ ஹோமாதிகள், பூர்வசந்தானம், பச்சிமசந்தானம், (ஸ்பர்சாஹுதி), தீபாராதனை, பிரதக்ஷண நமஸ்காரம், வேத தோத்திர திருமுறை பாராயணம், கிரியாவிளக்க சொற்பொழிவு.

**பங்குனி மாதம் 12ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை**

காலை 06.00 மணி முதல் யாகபூசை, மஹாபூர்ணாஹுதி, சர்வ உபசார பூசை, மஹா தீபாராதனை, அந்தர் பலி, பகிர்பலி, ஸ்தூபி கும்ப அபிஷேகம், பிரதான கும்பங்கள் உத்தாபனம், ஸர்வ மங்கள வாத்திய வேத திருமுறை கோஷத்துடன் வீதி உலா, காலை 10.30 மணிக்குள் விநாயகர் முதலாய சகல தேவ, தேவியருக்கும் மஹா கும்பாபிஷேகம், மங்கள தச தர்சனம், ஆசார்ய உபசாரம், எஜமான் அபிஷேகம், மதியம் மஹாபிஷேகம், தீபாராதனை, பிரசாதம் வழங்கல்.

மாலை 06.00 மணிக்கு ஸ்வாமி திருவீதியுலா காட்சி

## கும்பாபிஷேகம் சிறப்புற ஆசி வழங்கும் குருமணிகள்

**சிவஸ்ரீ. ஆ. சந்திரசேகரக் குருக்கள்**
வைக்கந்தாவை விநாயகராலயம்

**சிவஸ்ரீ. ச. சோமாஸ்கந்த குருக்கள்**
வைதிக க்ரியா ரத்னம், மண்ணை.

**சிவஸ்ரீ. தா. மஹாதேவக்குருக்கள்**
முதல்வர், தர்மசாஸ்த்ர குருகுலம், கொழும்பு.

வாழ்நாள் பேராசிரியர்
ஸமாதித்
**பிரம்மஸ்ரீ. ப. கோபாலகிருஷ்ண ஐயர்**

**சிவஸ்ரீ. தி. வெங்கடேசக் குருக்கள்**
ஜோதிஷ மாமணி
சுவிஸ்.

**சிவஸ்ரீ. ப. மனோகரக் குருக்கள்**
பிரதமகுரு
வல்லவை சிவன் ஆலயம்

**சிவஸ்ரீ. சி. சிதம்பரநாதக்குருக்கள்**
திருக்கணித பஞ்சாங்க கணிதர்
மட்டுவில்.

**சர்வபோதகாச்சார்யார்**
**சிவஸ்ரீ. கு. தியாகராஜக்குருக்கள்**
(இசை மணி சுரா)
தேவஸ்தான பிரதமகுருக்களும்

**கும்பாபிஷேக பிரதிஷ்டா பிரதமாச்சாரியர்**
"சிவாகம க்ரியா ஞானபானு"
**சிவஸ்ரீ. சா. சோமதேவக்குருக்கள்**
(நீர்வேலி ஸ்ரீ அரசகேசரி விநாயகராலயம்)

**சர்வ சாதகாச்சார்யார்கள்**
**பிரம்மஸ்ரீ. ப. சிவானந்த சர்மா**
(கம்பஹா Bed. B. A. Hons)
**பிரம்மஸ்ரீ. நா. சிவசங்கரசர்மா**
( B. A. Hons. P.G. D. E. Merit - வலிகாமம்.)
**பிரம்மஸ்ரீ. சிவஸ்ரீ. மதுசூதனக்குருக்கள்**
(சித்தங்கேணி.)

**ஆசியுரை வழங்குவர்**
**ஸ்ரீலஸ்ரீ. சோமசுந்தரதேசிக ஞானசம்பந்தபரமாச்சார்ய ஸ்வாமிகள்**
(குரு மஹா சந்நிதானம், நல்லை ஆதீனம்)

**தேவஸ்தான சிவாச்சார்யார்**
**பிரம்மஸ்ரீ. தி. மயூரகிரிசர்மா**
(Dip. in Journalism Merit)

**கலந்து சிறப்பிக்கும் சிவாச்சாரியார்கள்**

| | |
|---|---|
| சிவஸ்ரீ. சி. தியாகராஜக்குருக்கள் | (மயிலணி) |
| சிவஸ்ரீ. சி. ஜோதீந்திரக்குருக்கள் | (கோப்பாய்) |
| சிவஸ்ரீ. க. விஸ்வநாதக்குருக்கள் | (நீர்வேலி) |
| சிவஸ்ரீ. ப. குருநாதக்குருக்கள் | (வட்டுக்கோட்டை) |
| சிவஸ்ரீ. இ. தேசிகர்வரநாதக்குருக்கள் | (ஆனைக்கோட்டை) |
| சிவஸ்ரீ. சி. கிருஷ்ணமூர்த்திக்குருக்கள் | (அச்செழு) |
| சிவஸ்ரீ. சோ. சிவனேசக்குருக்கள் | (நீர்வை) |

**சாதகாச்சாரியார்கள்**

| | |
|---|---|
| பிரம்மஸ்ரீ. தி. குமாரநாதசிவசர்மா | (நீர்வேலி) |
| பிரம்மஸ்ரீ. கி. சிவகுமாரசர்மா | (நீர்வேலி) |
| பிரம்மஸ்ரீ. சோ. கஜேந்திரமணிசர்மா (B.A) | (கோப்பாய்) |
| பிரம்மஸ்ரீ. சா. சோமாகசர்மா | (தெல்லிப்பழை) |
| பிரம்மஸ்ரீ. ஆ. இராமருதசர்மா | (நீர்வேலி) |
| பிரம்மஸ்ரீ. உ. நிரஞ்சனசர்மா (Dip. in) | (அவுஸ்திரேலியா) |
| பிரம்மஸ்ரீ. நா. சிவகந்தசர்மா (B.A. Hons) | (வலிகாமம்) |
| பிரம்மஸ்ரீ. நா. சிவலோகசர்மா (B.A. Hons) | (வலிகாமம்) |
| பிரம்மஸ்ரீ. சோ. மிதுன சர்மா | (நீர்வேலி) |

**யாகசம்ரக்ஷகர்கள்**

| | |
|---|---|
| பிரம்மஸ்ரீ. இ. கஜானனசர்மா | (நுணாவில்) |
| பிரம்மஸ்ரீ. ச. மாதுளசர்மா | (அரியாலை) |
| பிரம்மஸ்ரீ. கு. பாலகுமசர்மா | (நீர்வேலி) |
| பிரம்மஸ்ரீ. கு. நிவாசசர்மா | (நீர்வேலி) |
| பிரம்மஸ்ரீ. கு. பாலகிருஷ்ணசர்மா | (மல்லாகம்) |
| பிரம்மஸ்ரீ. சோ. சிந்துஜேயசர்மா | (நீர்வேலி) |
| பிரம்மஸ்ரீ. கோ. ரதனசர்மா | (நீர்வேலி) |
| பிரம்மஸ்ரீ. சோ. நிதின்சர்மா | (நீர்வேலி) |

**பாக சாஸ்திர நிபுணர்**
பிரம்மஸ்ரீ. ஸ்ரீதரசர்மா (யாழ்ப்பாணம்)

| நாதஸ்வர தவில் இசை | சங்கீத கச்சேரி | நல்லை இசை | பூஜை அலங்காரம் | ஒலி ஒளி அமைப்பு | வீடியோ | வாண வேடிக்கை |
|---|---|---|---|---|---|---|
| வலி அழுகர் குழுவினர் மைசூர் | திரு. கந்தசாமி குழுவினர் சங்கானை | திரு. இ. வசந்தசேகரன் கோபிநாத் குழுவினர் கல்வியங்காடு | திரு. இ. சந்தானம், ஜெயகுமார் குழுவினர் உரும்பிராய் | நியூ டட்ஸ் நீர்வேலி | திரு. குமார் குழுவினர் நீர்வேலி | திரு. நா. விக்னேஸ் தெல்லிப்பழை |

## கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெறும்

குறிப்பு: இந் நிகழ்வுகளில் நீதியுடன், மெய்யுருகுதலுடன், சர்வ உதவி செய்து சகல செல்வ யோகம் மிக்க பெரு வாழ்வு பெற பிரார்த்திக்கிறோம்.
பக்தி சிரத்தை, ஆசாரம், பேணி இந்நிகழ்வுகள் பூரண சிறப்பு பெறச் செய்ய வேண்டுகிறோம்.

மெய்ஞ்சுடர் ஞானக் கைவழிதி வினாயத்துக்குருகை உலகமெல்லாம்.

நீர்வேலி.
20.02.2012

இங்ஙனம்
திருப்பணிச்சபையினர்,
ஸ்ரீ செல்லக்கதிர்காம ஸ்வாமி தேவஸ்தானம்.

ஞானவளி பதிப்பகம், நீர்வேலி. & 276, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ. பேசி: 021 2224143, 077 6184425.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











ஷாம்பவி பதிப்பகம், நீர்வேலி, & யாழ்ப்பாணம்.021 2224143

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org